அகிலன் ஆய்வடங்கல்

சு. வேங்கடராமன்

தமிழ்த்துறை
மதுரைப் பல்கலைக் கழகம்
பல்கலைநகர் - 625021 : : மதுரை மாவட்டம்

அகிலன் ஆய்வடங்கல்

Dr. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

சு. வேங்கடராமன்

தமிழ்த்துறை
மதுரைப் பல்கலைக் கழகம்
பல்கலைநகர் - 625021 : : மதுரை மாவட்டம்

மதுரைப் பல்கலைக் கழக வெளியீடு - 12

முதற்பதிப்பு: செப்டம்பர், 1974

© உரிமை பதிவு

கிடைக்குமிடம்:

மதுரைப் பல்கலைக் கழக மத்திய கூட்டுறவு அங்காடி

பல்கலைநகர் - 625021

மதுரை மாவட்டம்

அச்சிட்டோர்: சங்கம் பிரிண்டர்ஸ், மதுரை.

DR. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

டாக்டர் முத்துச் சண்முகன்
தமிழ்த்துறைப் பேராசிரியர்

மதுரைப் பல்கலைக் கழகம்

அணிந்துரை

நண்பர் சு. வேங்கடராமன் அகிலன் சிறுகதைகளை, டாக்டர் பட்டத்திற்கு ஆராய்ந்து வருகிறார். தமிழ்த் துறையில் இவ்வாறு ஆராய்ச்சியில் ஈடுபடுகின்றவர்கள், ஆராய்ச்சியைத் தொடங்கும் பொழுது ஆசிரியர் எழுதியவை, அவைகளைப் பற்றிப் பிறர் எழுதியவை முதலிய செய்திகளைத் திரட்டிப் படித்து இத்தகைய ஆய்வடங்கல்களைத் தொகுத்தல் வேண்டும் என்பது முதல் வேலை. அந்த முறையில் தொகுக்கப்பட்டதே இந்த ஆய்வடங்கல். ஆராய்ச்சிக்கு இது அடிப்படை வேலை. தமிழ் நாட்டில் ஒவ்வோர் ஆராய்ச்சியாளரும் இவ்வேலையைச் செய்கின்றார். ஆனால் அவர் திரட்டிய குறிப்புகள் வெளிவராமல் இருப்பதால், திரும்பவும் அதைப் பற்றியோ, அதைத் தொடர்ந்தோ ஆராய்கின்றவர்கள் அந்தத்தொகுப்பு வேலையைச் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனால் முயற்சியும் காலமும் வீணாவதை இத்தகைய ஆய்வடங்கல்கள் ஓரளவு தடுக்கலாம். இம்முயற்சியில் தமிழ்த்துறையின் சார்பில் வெளி வருகின்ற முதல் நூல் இது.

எழுதிக்கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் எழுதியதைத் திரட்டுவது அவ்வளவு எளிதாகத் தோன்றவில்லை. படைப்பாசிரியர் தாம் எழுதியவற்றின் விளக்கமான குறிப்புகளை வைத்துக் கொள்வதில்லை. அவர்களுடைய கதைகளையோ, கட்டுரைகளையோ வெளியிடுகின்றவர்கள், அவை வெளிவந்த

இதழ், நாள் இவற்றைக் குறிப்பிடுவதில்லை. இதனால் ஆசிரியரே தாம் எழுதிய சிலவற்றை மறந்து விடுகின்றார். வேங்கட-ராமன், அகிலன் தொடர்பு கொண்ட இடங்களுக்கெல்லாம் சென்றார்; அவரது நண்பர்கள் பலரோடு கடிதம் மூலமாகவும், நேரடியாகவும் தொடர்பு கொண்டார்; பல நூல் நிலையங்-களுக்குச் சென்று இதழ்களின் பழைய பிரதிகளையெல்லாம் புரட்டினார். இதனால் இதுவரை வெளிவராத, அகிலனே மறந்து போன சில கதைகளைத் திரட்ட முடிந்தது. இது இத்தகைய ஆய்வுக்குக் கிடைத்த முதல் வெற்றி! அவை இப்-பொழுது புதிய தொகுதிகளாக வெளிவந்திருக்கின்றன. வேங்கடராமன் அடைந்த தொல்லைகளை எண்ணும்போது, நம்-முடன் வாழும் ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் இத்தகைய ஆய்வடங்கல்களைத் தொகுத்து விடவேண்டும் என்று இத்தமிழ்த்-துறை முயன்று வருகிறது. ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டால் அவர்களுடைய உதவியால் ஓரளவாவது ஆய்-வடங்கல் முழுமையாக வரலாம் அல்லவா? தமிழ் மொழியில் படைப்பிலக்கியப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இந்த ஒரு கைம்மாறுவது நாம் செய்யவேண்டாமா?

மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இக்காலத் தமிழ் இலக்கிய ஆசிரியர்களை அறிவுத்துறை மூலம் ஆராய்ச்சி வழியாக மதிப்பிட்டுப் பாராட்டும் செயலைத் தன் கடமைகளில் ஒன்றாகக் கொண்டிருக்கிறது. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய ஆசிரியர்கள் கருத்தரங்க வரிசையைத் தொடங்கி ஆண்டுதோறும் ஒவ்வொரு ஆசிரியரைப் பற்றிக் கருத்தரங்கு நடத்தத் திட்டமிட்டோம். அதன் விளைவாக இவ்வாண்டு செப்டம்பர் 9, 10, 11, 12 ஆகிய நான்கு நாட்-களும் அகிலன் கருத்தரங்கு முதலில் நடைபெறுகிறது. அதன் நினைவாக இந்த நூலும் வெளிவருகிறது.

நண்பர் வேங்கடராமன் முயற்சி பாராட்டுக்குரியது. இம் முயற்சி தொடர்ந்து செயற்பட்டு, இத்தகைய ஆய்வடங்கல்கள் பல வெளிவரும் முயற்சி சிறப்பதாக!

எங்கள் துறை ஈடுபட்டிருக்கும் ஆக்கப்பணிகளுக்கு உறு-துணையாக இருந்து, இளைஞர்களை ஆக்கவேலையில் தூண்டும் முயற்சியில் ஈடற்றவர் மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் மு. வரதராசன் அவர்கள். அப்பெருந்தகைக்குத் தமிழ்த்துறையைச்சார்ந்த அனைவரும் நன்றியையும் கடமையை-யும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மதுரை
2-9-74

மு. ச.

நுழைவாயில்

'ஆய்வடங்கல்' — குறிப்பு விளக்க நூல்-(Annotated Bibliography) என்பது குறிப்பிட்ட ஒரு படைப்புப்பற்றியும் படைப்பாளி பற்றி-யும் அமையும். எழுத்தாளர் படைத்தவை, அவை பற்றிய பிறரின் ஆய்வுகள் ஆகிய விவரங்களைத் தரும் முழுமையான நூலாக அமையும். குறிப்பு விளக்கநூலின் நோக்கத்-திற்கு ஏற்ப இந்நூலில் அகிலனின் படைப்புகள் முதலிலும், அவை குறித்துப் பிறர் படைத்த ஆய்வுகள் அடுத்தும் உள்ளன. அகிலனின் படைப்புப் பற்றிக் கூறுமிடத்திலோ, பிறர் ஆய்வுகளைத் தொகுத்துத் தருமிடத்திலோ என்னுடைய கருத்தோ, மதிப்பீடோ எதுவு-மில்லை. கூறப்படுகின்ற செய்திகள் யாவும் அந்தந்தப் படைப்பாளியின் கருத்துக்களாகும்.

நூல் முழுவதும் காணப்படும் அமைப்புமுறை காலவரிசையை அடியொற்றியதாகும். நூல் வடிவில் வந்தவை முதலிலும், இதழ்களில் வந்தவை பின்னும் தொகுக்கப்பட்டுள்ள முறையினையும் நூல் முழுவதிலும் காணலாம். நூலாகவோ இதழில் மட்டுமோ வந்தவை-களையே இங்குக் காணலாம். இந்நூலின் செய்திகள், உருவான கால அளவிற்கு (ஆகஸ்ட் 1974) உட்பட்டதாகும். முடியுந்தறுவாயில் கிடைத்த செய்திகள், புதிய பதிப்புகள் ஆகியவை, 'சில குறிப்புகள்' என்று இறுதியில் உள்ளன.

அகிலன் தம்முடைய எழுத்துலகப் பணியைச் சிறுகதை வாயிலாகவே துவக்கினார். எனவே,

சிறுகதை முதலிலும், நாவல் அடுத்தும், நாடகம், சிறுவர் இலக்கியம், கட்டுரைகள் எனவும் பகுத்துள்ளேன். யானறிந்தவரையில், பிற இந்திய மொழிகளிலும், வெளிநாட்டு மொழிகளிலும்மிகுதியானபடைப்புகள்மொழி-பெயர்ப்பான தமிழ் எழுத்தாளர் அகிலன் அவர்கள் தான். எனவே, மொழிபெயர்ப்பு என்பதில் அகிலன் மொழிபெயர்த்தவை முதலிலும், பிறமொழிகளில் அகிலன் என்பது அடுத்தும் உள்ளன.

சிறுகதைப் பகுதியில் இதுவரை வெளிவந்-துள்ள தொகுப்புகள், இதழ்களில் மட்டும் வந்த கதைகள் ஆகியவை உள்ளன. நூல்வடிவில் வராமல் உள்ளவை என்பதில் இந்நூலில் கொடுக்கப்பட்டவை தவிர பிறவும் இருக்க-லாம். இன்றுவரை ட'ல்வேறு வழிகளில் யான் தொகுத்த கதைகள் மட்டும் இந்நூலில் உள்ளன. ஒவ்வொரு தொகுப்பிற்கும் முதற் பதிப்பு முதல் இன்று கிடைக்கும் பதிப்பு முடிய விவரம், பதிப்பாளர், வெளியீடு, பக்கங்கள், விலை ஆகியவற்றைக் காணலாம். பதிப்பாளர்-வெளியீட்டாளரில் மாற்றமிருப்பின் அந்த விவரம் உள்ளது. பக்கம், விலை, பாராட்டுரை-அணிந்துரை, முன்னுரை என்பவை யாவும் தற்போது கிடைக்கும் பதிப்பினை அடிப்படை-யாகக் கொண்டதாகும். முந்தைய பதிப்பிற்-கும் தற்போதைய பதிப்பிற்கும் முன்னுரை சிலவற்றில் மாறியுள்ளது. எல்லாப் பதிப்பு-களும் கிடைக்காத காரணத்தால் ஒவ்வோர் பதிப்பிற்கும் அந்த விரைம் தர இயலவில்லை. நூலிற்கு ஆசிரியரும் பிறசான்றோரும் எழுதி-யுள்ள முன்னுரை, அணிந்துரை என்பவை சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. அதனை-

யடுத்து, தொகுப்பிலுள்ள சிறுகதைகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அக்கதைகள், பின்னர் வேறு வெளியீட்டில் வந்திருப்பின் அவையும் உள்ளன. பரிசுபெற்றுள்ள செய்தி உடுக்குறியால் சுட்டப்பெறும்.

நாவல்களுக்கும் இவ்வாறே பதிப்பு விவரம், வெளியீடு, பக்கம், விலை, உரை என்பவற்றுடன் இதழ்களில் தொடர்கதையாக வந்த விபரம் முதன்முதலாகத் தொகுக்கப்பட்டு உள்ளன. பிறவெளியீடாகவும் மலிவுப் பதிப்பாகவும் வந்த செய்தி, நாடகமாகி, மேடை, வானொலி ஏறிய செய்தி, திரைப்படமாகியுள்ள விவரம் ஆகியன உள்ளன. உடுக்குறி பரிசுபெற்ற செய்தியைக் குறிக்கும்.

குறிப்பு விளக்க நூலின் நோக்கத்திற்கு ஏற்பச் சிறுகதை, நாவல் ஆகியவற்றின் கதைச் சுருக்கம் கூறப்படவில்லை. நாவல்கள் தொடர்கதையாக வந்த செய்தி போல, சிறுகதைகள் இதழ்களில் வெளியான செய்திகள் முழுமையாகத் தொகுக்கப்படாத காரணத்தால் கூற இயலவில்லை.

மொழிபெயர்ப்பு என்பதில் அகிலன் மொழிபெயர்த்த மூன்று நூல்களும், பிறமொழிகளில் மொழிபெயர்ப்பான அவர் படைப்புகள் பற்றிய செய்திகளும் உள்ளன. பல்வேறு மொழிகளில் மொழிபெயர்ப்பான அனைத்துச் செய்திகளும் இங்கு உள்ளன என்பது முடியன்று. நம் நாட்டிலும் அப்பாலுக்கப்பாலும் வாழும் மொழிபெயர்ப்பு வல்லுனர்கள், தாம் மொழிபெயர்த்த செய்திகளைப் படைப்பாளர்களுக்கு அறிவிக்காதது பெருங்குறை. குறிப்பாக அகிலன் படைப்புகள் செக், உருது

போன்ற மொழிகளில் மொழி பெயர்ப்பாகிய நிலையிலும் செய்திகள் கிடைக்கவில்லை. உருது மொழியில் மொழிபெயர்ப்பான இருகதைகள் பற்றிய விவரமே கிடைத்தது. மொழிபெயர்த்-தவர்களுடன் தொடர்பு கொண்டும் செய்தி கிடைக்கவில்லை என்பது வருந்தத்தக்கது. பலருடைய கூட்டுறவின் பலனாகச் செய்திகள் கிடைத்த அளவிற்கு மகிழ்வைத் தந்தாலும், முழுமையாகச் செய்யாத மனக்குறை வருத்து-கிறது.

கட்டுரைப் பகுதியில் அவ்வப்போது இதழ்-களில் மட்டும் வெளிவந்து இன்னும் நூல் வடி-வம் பெறாத அறுபதுக்கு மேற்பட்ட கட்டுரை-களைப் பொருள் பாடுபாகு செய்து, வெளியான காலம், இதழ் என்பவற்றுடன், கட்டுரைகளின் உயிர்த்துடிப்பான பகுதிகளையும் தந்துள்ளேன். சிறுகதை, நாவல் படைத்த அகிலனைக் கட்டுரை ஆசிரியராகக் காண இவை துணை செய்யும். அதன் விளைவாக இவை நூல் வடிவம் பெறாதா என்று விழைகிறேன். மேலும் அகிலன் காலத்-திற்கேற்ப எண்ணிப் பலதுறைச் சிந்தனைச் செல்வத்தை வாரிவழங்கியதைப் பலரும் அறிய வேண்டும் என்பது என் ஆசை.

திறனாய்வுகள் என்பதில் சிறுகதை, நாவல், பொது என்ற பகுப்பை அமைத்துள்-ளேன். தமிழ் இலக்கிய வரலாற்று நோக்கில-மைந்த நூல்க்ள், அகிலனைப் பாராட்டியும் வாழ்த்தியும் கூறியவை என்பவற்றைத் தவிர்த்து, திறனாய்வு நோக்கில் அமைந்த ஆய்வுப்படைப்புகளை மட்டும் நூலின் நோக்-கிற்கு ஏற்பத்தந்து உள்ளதை அறியலாம். மேலும் அகிலனின் பேட்டி, வானொலி உரை,

பிறர் படைப்புகளுக்கு எழுதிய முன்னுரை ஆகியன உள்ளன. அவைகளையும் தொகுத்துத்-தர எதிர்காலம் வாய்ப்பளிக்கும் என்று நம்புகிறேன்.

இறுதியாக ஒரு சொல். இருபதாம் நூற்றாண்டு இலக்கிய ஆசிரியர் படைப்புகள், அவைபற்றிய ஆய்வுகள் குறித்துக்கூறும் விளக்க நூலாகிய ஆற்றுப்படை வரிசையில் இது முதல் நூல். இக்-கால இலக்கிய ஆர்வலர்களுக்கும் அறிஞர்-களுக்கும் பிறர்க்கும் படைப்பாளியை அறிய ஓர் ஆற்றுப்படையாக அமைந்து, ஒவ்வோர் படைப்பாளிக்கும் இது போன்ற ஒவ்வோர் ஆய்வடங்கல் வெளியிடும் உணர்வைத்தூண்டி-னால் அதுவே இதற்குக் கிடைத்த பெறலரும் பரிசிலாக எண்ணி மகிழ்வேன்.

சு. வேங்கடராமன்

நன்றியுரை

இக்கால இலக்கியம் பற்றிய ஆய்வுகளைச் செய்யும் ஒவ்வொருவரும் தத்தம் ஆசிரியர்கள் பற்றிய ஆற்றுப்படை நூலாம் ஆய்வடங்கல் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று வித்திட்டு இப்பயிரைத் தம் அன்பால் வளர்த்தவர் பேராசிரியர் டாக்டர் முத்துச்சண்முகனார். இடைவிடாத அவர்களின் தூண்டுதலால் உருவாகிய இம்முயற்சியின் திரு அவர்களைச் சாரும்.

'கதை எழுதும் காலத்தில் இப்படி ஓர் இளைஞர் ஆராய்வார் எனத்தெரிந்திருந்தால், இன்னும் கவனமாகத் தகவல்களை வைத்திருப்பேன்' என்று கூறித் தம்மிடமிருந்த அத்துணை செய்திகளையும் தந்து நூல் உருவாக உதவியவர் திரு. அகிலன் அவர்கள். தாம் எழுதியவற்றை முறைப்படித் தொகுத்து வைக்கவில்லை என்று வருந்தினாலும், பரந்துபட்ட தம்முடைய அலுவல்களுக்கிடையில் அனைத்தையும் தந்து ஊக்கம் தந்த அப்பேருள்ளத்திற்கு எவ்வாறு என் அன்பைத் தெரிவிப்பேன்.

இளைஞர்நலன், தமிழ்ப்பணி ஆகிய இரண்டையும் தம்மிரு கண்களாக எண்ணிச் செயலாற்றும் சான்றோர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தந்த அன்பையும் ஆதரவையும் நினைப்பின் நெஞ்சமெல்லாம் நெகிழ்கிறது. அன்பும் ஆசியும் தந்ததுடன் இந்நூலைப் பல்கலைக்கழக வெளியீடாக்கிய பெருமையும் அவர்தம் சிறப்பு.

அகிலனின் படைப்பு பற்றி நான் கேட்ட போதெல்லாம் அனைத்தையும் தந்துதவியவர் தமிழ்ப்புத்தகாலய உரிமையாளர் திரு. கண. முத்தையா அவர்கள். பதிப்புகள் பற்றிய செய்தியிலிருந்து கதைகள் கிடைப்பின் பிரதியெடுத்தனுப்பிய செயல் முடிய பல்லாற்றானும் துணை புரிந்த அவர்தம் அன்பிற்கு என் உள்ளம் கனிந்த

நன்றி என்றும் உரியதாகும். திரு. அகிலன் அவர்களிட-மிருந்து செய்திகள் சிலவற்றைப் பெற்று அனுப்பியும் நூல்களைத் தந்தும் உதவிய திரு. மா. இராமலிங்கம் (எழில் முதல்வன்) அவர்களுக்கு என் நன்றி.

கேரளப்பல்கலைக்கழகத்தில் அகிலன் நாவல்கள் பற்றி ஆய்வு செய்யும் ப. விசயலட்சுமி தம்முடைய கட்டுரைகளை அனுப்பி உதவினர். அவருக்கு என் அன்பு கனிந்த நன்றி உரியதாகும்.

'கலைமகள்' இதழ்களில் வெளிவந்த அகிலனின் சிறு-கதை, நாவல் பற்றிய செய்திகளைத் தொகுக்கச் சென்ற போது, தாம் ஊரில் இல்லாத காலத்திலும் எப்போதும் அலுவலகத்திற்கு வந்து பெற்றுச்செல்லும் உரிமையினை நல்கியவர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள். அங்கு சென்றபோது ஒத்துழைப்பை நல்கி உதவியவர்கள் திரு. எஸ். வேங்கடரமணி அவர்களும் திரு. கா. ஸ்ரீ. ஸ்ரீ. அவர்களும். 'கல்கி' இதழில் வெளியான நாவல்கள் பற்றிய செய்திகளைத் தொகுத்துத் தந்தவர் திரு. கி. ராஜேந்திரன் அவர்கள். 'தீபம்' இதழில் வெளி-யான அகிலனின் கட்டுரைகள் குறித்துச் செய்திகளைத் தந்துதவினர், திரு. நா. பார்த்தசாரதி அவர்கள். 'தமிழ் உறவு' இதழ்களில் வெளிவந்த அகிலனின் கட்டுரை குறித்துக்கேட்டவுடன் பழைய இதழ்களைத்தந்துதவியவர் திரு. க. சோமசுந்தரம் அவர்கள். ஆராய்ச்சி மாணவனாகிய என்னிடம் காட்டிய இவர்கள் அனைவரின் அன்பிற்கும் என்றும் கடப்பாடுடையேன்.

'சாந்தி' என்னும் அகிலனின் சிறுகதைத்தொகுப்பு கிடைக்கப்பெறாமல் தவித்த போது, நெல்லையிலிருந்து அதனைப் பெற்றுத் தந்து உதவிய சென்னை மறைமலை-யடிகள் நூல்நிலைய நூலகர் திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்களுக்கு என் மனம் நிறைந்த அன்பும் நன்றியும் உரியதாகும்.

பன்னெடுங் காலமாக இதழ்களையும் நூல்களையும் தொகுத்து வைத்து, என் போன்ற இலக்கிய ஆர்வலர்களுக்கு உதவி வருபவர் கோட்டையூர் திரு. ரோஜாமுத்தையா அவர்கள். உடல் நலமற்ற காலத்தும் ஒவ்வோர் இதழாகத்தேடிக் குறிப்பு எடுத்து அனுப்பி வைத்து உதவி வரும் அப்பேரன்பிற்கு நன்றி கூறுதல் எவ்வாறு என்றறியேன். மொழிபெயர்த்த செய்திகள் அனைத்தையும் தந்துதவியவர் திருமதி சரஸ்வதி ராமனாத் அவர்கள்.

என் ஆய்விற்கு வழிகாட்டிவரும் டாக்டர் மோ. இசரேயல் அவர்களின் இடைவிடாத தூண்டுதல் இங்கு உணர வேண்டிய செயல்.

இந்நூல் உருவாகுங்கால் உடனிருந்து ஒத்துப் பார்க்கும் பணியைத் தம் நூலிற்கு ஆற்றுவது போன்று உழைத்தும் வழிகாட்டியும் உதவியவர் டாக்டர் தா. வே. வீராசாமி அவர்கள். அவர்களின் அன்பிற்கு என்றும் நன்றியுடையவன் ஆகின்றேன்.

பல்கலைக்கழக வெளியீடாகக் கொண்டுவரும் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவினர்க்கு என் நன்றி உரியதாகும்.

நூல்விரைந்துவர உதவிய நண்பர் திரு. ச. செயப்பிரகாசம் அவர்களுக்கும் நூல்கள் தந்துதவிய நண்பர் திரு. இரா. மோகன் அவர்களுக்கும் நன்கு அச்சிட்ட திரு. வெ. பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

சு. வேங்கடராமன்

உள்ளே...

			பக்களண்
1.	சிறுகதைகள்	...	1
2.	நாவல்கள்	...	21
3.	நாடகம்	...	43
4.	சிறுவர் இலக்கியம்	...	47
5.	மொழிபெயர்ப்புகள்		
	அகிலன் மொழி பெயர்த்தவை	...	51
	பிற மொழிகளில் அகிலன்	...	56
6.	கட்டுரைகள்	...	65
	கட்டுரை நூல்கள்	...	67
	'என் முதல் கதை'	...	70
	இதழ்களில்...	...	71
I	இலக்கியம்		
1.	கதை இலக்கியம்	...	72
2.	கதை இலக்கிய ஆசிரியர்	...	75
3.	சிறுகதை	...	76
4.	நாவலாசிரியர்	...	77
5.	உரைநடை	...	78
6.	கவிஞர்கள்	...	78
II	மொழி	...	80
III	கலை		
1.	திரைப்படம்	...	82
2.	கிராமியக்கலை	...	93
3.	சித்திரம்	...	94

IV	1. நாடு	...	95
	2. நாட்டுப்பற்று	...	98
V	கல்வி	...	100
VI	சமூகச் சிந்தனைகள்	...	100
VII	தலைவர்கள்	...	104

□ □ அகிலனின் படைப்புகள் பற்றிய திறனாய்வுகள் ... 107

1. சிறுகதை	...	109
2. நாவல்	...	116
3. பொது	...	129
சில குறிப்புகள்	...	136

□ □ □ பொருளாரம் ... 139

DR. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

சிறுகதைகள்

நூற்றறுபது சிறுகதைகளுக்கு மேல் எழுதியவர் அகிலன். அவர் தம்முடைய முதல் சிறுகதையை 1939 ஆம் ஆண்டிலேயே எழுதினர். முப்பத்தைந்து ஆண்டுகட்கு முன் (1939 - ஆம் ஆண்டில்), புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் பத்தாம்வகுப்புப் படித்தபோது, கல்லூரிமலரில் அதை எழுதினர். வை. அகிலாண்டம் என்னும் தம்முடைய இயற்பெயரில் எழுதிய அச்சிறுகதைக்கு அவர் அளித்த பெயர், 'அவன் ஏழை'. ஆனல், பள்ளித்தமிழாசிரியரின் அறிவுரைப்படி 'மிடியால் மடிதல்' என்று பெயரிடப்பட்டு அக்கதை வெளியானது.

1940-1941 ஆம் ஆண்டு அளவில் 'இந்திரா' என்னும் இதழில் 'சாவிலே வாழ்வு' என்னும் கதையைத் தம் இயற்பெயரில் எழுதிப் பரிசும்பெற்ருர். பின்னர், 1941 ஆம் ஆண்டில் சிலமாத கால அளவிற்கு 'இன்பம்' என்னும் மாத இதழில் [புதுக்கோட்டையில் வெளிவந்த மாதஇதழ்] துணையாசிரியராகப்பணியாற்றினர். பள்ளியில் படித்த காலத்திலேயே 'விவசாயி' என்னும் புனைபெயரில் சில படைப்புகளை எழுதினர்.

1940-1942 ஆண்டுக்காலத்தில், அவ்வூரில் இருந்து வெளியான 'தாய்நாடு', 'திருமகள்', 'அணிகலம்' ஆகிய பத்திரிகைகளில் சில கதைகளை எழுதினர். 1942 ஆம் ஆண்டுத் துவக்கத்தில் 'கல்கி' இதழில் 'சரஸியின் ஜாதகம்' என்னும் சிறுகதை அகிலன் என்னும் பெயரில் வெளியாயிற்று. இச்சிறுகதையினைக் கல்கி இதழ் சுருக்கி வெளியிட்டது. இச்சிறுகதை முதற்கொண்டு எழுதப்பட்ட படைப்புகள் யாவும் அகிலன் என்ற பெயரில் வருகின்றன. 1942 ஆம் ஆண்டில் 'கலைமகள்' இதழில் 'காசுமரம்' என்ற சிறுகதை வெளியானது முற்கூறிய 'சாவிலே வாழ்வு,' 'சரஸியின் ஜாதகம்'—என்ற கதைகளும், 'காசுமரம்' என்ற கதையும்'சக்திவேல்'என்னும் ஆசிரியரின் முதல் சிறுகதைத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

1. சக்திவேல்

முதற்பதிப்பு : 1946

இரண்டாம் பதிப்பு : 1957

இவ்விரு பதிப்புகளும் சென்னை அல்லயன்ஸ் கம்பெனி வெளியீடு.

மூன்றும் பதிப்பு : 1961

புதுக்கோட்டை பழனி பிரசுர வெளியீடு.

நான்காம் பதிப்பு : 1965

பொற்கொடி வெளியீடு.

விற்பனை உரிமை : பாரி புத்தகப் பண்ணை, சென்னை-5.

பக்கங்கள் : 187. விலை: ரூ. 2–50.

சுத்தானந்த பாரதியார் எழுதிய இருபக்கச் சிறப்புரை :

"அகிலனின் கதைகள் அகில உலக வாழ்வின் மூலை முடுக்குகளிலெல்லாம் புகுந்து நயங்களை அள்ளி வருகின்றன. ஆண் – பெண் வாழ்க்கையை ஊன்றிப் பார்த்து, தமது வாழ்வின் அநுபவங்களையும் கலந்து கொண்டு சரியான இடத்தில் சரியான வர்ணந்தீட்டிக் கதைச்சித்திரத்தைக் கவர்ச்சியுடன் அமைக்கிறார்."

மூன்றும் பதிப்பிற்கு அகிலன் எழுதிய இருபக்க முன்னுரை :

"1941 ஆம் ஆண்டிலிருந்து 1945ஆம் ஆண்டு வரையில் நான் எழுதத்தொடங்கிய காலத்தில் எழுதிய சிறு கதைகள் இவை. புதுமைத் தமிழ் இலக்கிய முயற்சியில் கற்றுக்குட்டியாக இருந்த ஒருவனின் முதல் கைவரிசை இது."

22 கதைகள் :

1. சக்திவேல்
2. சரஸியின் ஜாதகம்
3. சாவிலே வாழ்வு
4. நிலவொளியில்
5. நொண்டிக் குப்பன்
6. கோஷா
7. பெற்ற மனம்
8. சினிமா வண்டி
9. புயலுக்குப்பின்
10. ஏழைப்பிள்ளையார்
11. தாலிக்கயிறு
12. சிசுவின் குரல்
13. கடவுளின் பிரதிநிதி
14. கதையின் முடிவு
15. வழிப்போக்கன்
16. தாமரைப்பூ
17. தணியுமா?
18. மேகசஞ்சாரம்
19. நான்
20. காசுமரம்
21. சுதந்திரப்பறவை
22. வசந்தநினைவு

* தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப்பெற்ற நூல்.

2. நிலவினிலே

முதற்பதிப்பு : 1948

முதல் ஐந்து பதிப்புகள், புதுக்கோட்டை பழனிபிரசுர வெளியீடு.

ஆறும்பதிப்பு : 1966

பொற்கொடி வெளியீடு.

விற்பனை உரிமை : பாரி புத்தகப் பண்ணை, சென்னை-5.

பக்கங்கள் : 128. விலை : ரூ. 2.00

பதிப்பகத்தாரின் 'கதைகளைப்பற்றி' என்னும் பதிப்புரை :

"நாடு விடுதலை பெறுவதற்கு முன்பு நடைபெற்ற சில முக்கிய நிகழ்ச்சிகளை அக்காலத்திலேயே எழுதப்பட்ட இந்தக்-கதைகளில் சில கூறுகின்றன. ஆசிரியரின் இளமைப் பருவத்துக்-கனவுகளும் லட்சியங்களும் கலந்த கதைகள் இவை."

14 கதைகள் :

1. நிலவினிலே
2. இதயச்சிறையில்
3. தலைமறைவில்
4. இருசகோதரிகள்
5. காணிக்கை
6. இளமையில் நடந்தது
7. சொத்தும் சுகமும்
8. துணைவி
9. துன்பத்தின் மத்தியில்
10. ஏன் ?
11. எல்லோருக்கும் பெய்த மழை
12. காதலின் உருவம்
13. ரத்தக் கலப்பு
14. காதல் பிறந்த கதை

* தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பெற்ற நூல்.

3. ஆண்—பெண்

முதற்பதிப்பு : 1950

முதல் மூன்று பதிப்புகள், புதுக்கோட்டை பழனி பிரசுர வெளியீடு.

நான்காம் பதிப்பு : 1966.

பொற்கொடி வெளியீடு.

விற்பனை உரிமை : பாரி புத்தகப் பண்ணை, சென்னை-5.

பக்கங்கள் : 115. விலை : ரு 2-00.

கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் அளித்த மூன்று பக்க முன்னுரை :

"அகிலன் பரந்து கிடக்கும் உலகைக் கண்டு மனத்தில் வாங்கிக் கொண்டு சிந்தனையைத் தூண்டிக் கற்பனை உலகத்தில் படர்கிறார். அகிலன் எழுத்தில் முதிர்ந்த உரன் இருக்கிறது."

8 கதைகள் :

1. குறத்தி
2. இரவு – பகல்
3. அழகு எங்கே?
4. தீபாவளி வந்தது
5. இன்பத்தீ
6. நான்-அவள்-அவன்
7. கடைசி ஆசை
8. ஆண் - பெண்

4. அமராவதிக்கரையில்

முதற்பதிப்பு : 1950

முதல் ஐந்து பதிப்புகள், பெண்ணுடம் புதுமைப்பிரசுர வெளியீடு. இந்நிறுவனத்தின் முதல் வெளியீடு இது.

ஆறும்பதிப்பு : 1966

பொற்கொடி வெளியீடு.

விற்பனை உரிமை : பாரிபுத்தகப்பண்ணை, சென்னை-5.

பக்கங்கள் : 71. விலை : ரூ 1-00.

பதிப்பாளரின் பதிப்புரை :

''பிறமொழிகளான இந்தி, மராத்தி, உருது, ஆங்கிலம் முதலியவற்றிலும் இதில் உள்ள சில கதைகள் வெளியாகிப்-பாராட்டைப்பெற்றிருக்கின்றன. ருஷ்ய நாட்டில் தமிழ்மொழி கற்கும் மாணவ மாணவிகள் ஆசிரியரின் முக்கியமான கதைகளை மொழிபெயர்ப்பதற்கு உற்சாகமளித்திருக்கிறது இந்த நூல்.''

7 கதைகள் :

1. அமராவதிக்கரையில்
2. கங்கா ஸ்நானம்
3. கோயில் விளக்கு
4. பெண்பாவம்
5. பெரியமீன்
6. விலைப்பெண்
7. மனைவியும் மைத்துனியும்

5. செங்கரும்பு

முதற்பதிப்பு : 1952
சென்னை அமுதநிலைய வெளியீடு.

இரண்டாம் பதிப்பு : 1965

பொற்கொடி வெளியீடு.

விற்பனை உரிமை : பாரிபுத்தகப்பண்ணை, சென்னை-5.

பக்கங்கள் : 95. விலை : ரூ 1-50

'கரும்பின் ருசி' என்னும் அகிலனின் முன்னுரை ஒரு-பக்க அளவில் சுருங்கி உள்ளது.

"1945 லிருந்து 1950 வரை எழுதப் பெற்ற கதைகள். இதில் காதற்சுவையும் உண்டு. வேறு சுவையும் உண்டு."

7 கதைகள் :

1. செங்கரும்பு
2. புகழ்
3. வெறியும் முறையும்
4. மயானத்து நிலவில்
5. பிள்ளைவரம்
6. மனோரஞ்சிதம்
7. பசி

6. சாந்தி

முதற் பதிப்பு : 1952.
புதுக்கோட்டை பழனி பிரசுர வெளியீடு.
பக்கங்கள் : 74. விலை : ரூ. 1-00.

இதிலுள்ள கதைகள் 'காதல்' இதழில் வந்தவை.

பதிப்பாளரின் பதிப்புரை :

"ஆவியுலகத்தைப் பற்றிய கற்பனைக் கதைகளில் 'முப்பது இரவுகள்' போன்ற ஓர் சித்திரம் அமைவது மிகவும் அபூர்வந்தான். அகிலன் கதைகள் திரும்பத் திரும்பப் படித்துச்சுவைக்கும் கதைகளல்லவா?"

4 கதைகள் :

1. முப்பது இரவுகள்
2. குலதெய்வம்
3. இந்திரனுக்கு விமோசனம்
4. சாந்தி

முதலிரு சிறுகதைகள் பின்னர் வெளிவந்த 'குழந்தை சிரித்தது' என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. மற்றவை எதிலும் இதுவரை இடம் பெறவில்லை.

7. வழிபிறந்தது

முதற்பதிப்பு : 1954

முதலிரு பதிப்புகள், புதுக்கோட்டை பழனிபிரசுர வெளியீடு.

மூன்றும் பதிப்பு : 1965

பொற்கொடி வெளியீடு.

விற்பனை உரிமை : பாரிபுத்தகப்பண்ணை, சென்னை-5.

பக்கங்கள் : 163. விலை : ரூ. 2-50.

'இதுவும் இலக்கியந்தான்' என்னும் அகிலனின் ஒருபக்க முன்னுரை :

" இன்றையப் படைப்பு இலக்கிய ஆசிரியர்களின் நூல்களைப் பற்றியோ, அவற்றின் நிறைவு குறைவு பற்றியோ நம்மில் கற்றோர் பலரே இன்னும் சரியாகத்தெரிந்து கொள்ளவில்லை என்பது புலனுகிறது. 'மூன்றுவேளை' கதை இந்திய ஜெர்மன் பண்பாட்டுக் கலை இலக்கியக் கழகமான மாக்ஸ் முல்லர் பவனுல் தமிழ்-ஜெர்மன் மொழிகளில் சிறுநூலாக வெளியிடப்பட்டுள்ளது."

12 கதைகள்:

1. உயிர்த்துளி
2. பூச்சாண்டி
3. வெட்கம்
4. முதல் தீபாவளி
5. மனிதர்கள்
6. புயல்
7. முதற்கவிதை
8. மூன்று வேளை
9. வெறி
10. மனமும் மானமும்
* 11. அருவிக் கரையில்
12. வழிபிறந்தது

* இக்கதை, 1954 ஆம் ஆண்டுக் கல்கி தீபாவளி மலரில், 'இலட்சியத் தம்பதிகள்' என்ற பெயரில் வெளிவந்தது.

(பிற வெளியீடுகளில் மீண்டும் வந்த விவரம்)

'பூச்சாண்டி':

1. கலைமகள் கதம்பம்—பக்கம் 102-116.
   கலைமகள் காரியாலயம், சென்னை; 1957.

2. சிறு கதைக் களஞ்சியம்—பக்கம் 66-89.
   சாகித்ய அகாதெமி, புதுதில்லி; 1959.

8. மின்னுவதெல்லாம்......

முதற்பதிப்பு : 1956.

புதுக்கோட்டை பழனி பிரசுரவெளியீடு.

இரண்டாம் பதிப்பு : 1966.

பொற்கொடி வெளியீடு.

விற்பனை உரிமை : பாரி புத்தகப் பண்ணை, சென்னை-5.

பக்கங்கள் : 96. விலை : ரூ. 1 - 50.

முன்னுரை, பதிப்புரை எதுவுமில்லை.

8 கதைகள் :

1. மின்னுவதெல்லாம்......
2. கற்பனையே தவிர
3. பையனும் பெண்ணும்
4. நெருப்பு
5. அமரநிலை
6. காட்டுமிராண்டிகள்
7. காசும் பாசமும்
8. வாழையடி வாழை

9. குழந்தை சிரித்தது

முதற் பதிப்பு : 1957.

புதுக்கோட்டை பழனி பிரசுர வெளியீடு.

இரண்டாம் பதிப்பு : 1965.

பொற்கொடி வெளியீடு.

விற்பனை உரிமை : பாரி புத்தகப் பண்ணை, சென்னை-5.

பக்கங்கள் : 160. விலை : ரூ. 2-50

பதிப்பாளரின் பதிப்புரை :

"தமிழ்க்கதை என்ற தொடக்கக் குறிப்புடன் தமிழ்மொழி-யல்லாத பிறமொழிப் பத்திரிகைகளில் தமிழ்மொழியின் வளர்ச்சியைப் பறைசாற்றும் முறையில் இன்று வெளிவந்து கொண்டிருக்கின்றன, அகிலனின் கதைகள். சிறுகதை இலக்கியத்-தராசில் எடை நிற்கத்தக்க கனமான படிக்கற்கள் 'நட்டகல்', 'பழக்கம்', 'குழந்தை சிரித்தது', 'குலதெய்வம்', 'முப்பது இரவுகள்' போன்ற கதைகள்."

13 கதைகள் :

1. நட்டகல்
2. மந்திரத்து மாங்கனி
3. செல்வரங்கன் ஆவி
4. காட்டுக் குரங்கு
5. பழக்கம்
6. இயற்கை
7. நல்லவர் - கெட்டவர்
8. குழந்தை சிரித்தது
9. விளம்பரம்
10. குலதெய்வம்
11. திரைமறைவில்
12. வாழத்தெரிந்தவர்
13. முப்பது இரவுகள்

10. சகோதரர் அன்றோ?

முதற் பதிப்பு : 1963.

சென்னை தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்க வெளியீடு. தமிழ் உறவு வெளியீடு. எண்: 1 என்ற குறிப்புடன், எழுத்-தாளர் கூட்டுறவுச் சங்கத்தின் முதல் நூல் என்ற பெருமை பெற்றது.

இரண்டாம் பதிப்பு : *1967.*

பக்கங்கள் : *160.* விலை : ரூ. *2-50.*

அகிலனின் முன்னுரை :

"இந்தத் தொகுப்பில் உள்ள கதைகள், '**கலைமகள்**', 'ஆனந்தவிகடன்', 'கல்கி', 'நண்பன்' முதலிய பத்திரிகைகளில் ஏற்கெனவே வெளிவந்தவை".

13 கதைகள் :

1. சகோதரர் அன்றே ?
2. அருவிக்கரை அழகி
3. பொங்கலோ பொங்கல்
4. நாதனுள்ளிருக்கையில்
5. வெள்ளம் வந்தது
6. நினைப்பு
7. கறவையும் காளையும்
8. தெய்வத்தின் குரல்
9. யார் தியாகி ?
10. பித்தம் தெளிய மருந்து
11. கலியபெருமாளின் கனவு
12. சொர்க்கம் எங்கே ?
13. காக்கைச் சிறகினிலே

(பிற வெளியீட்டில் மீண்டும் வந்த விவரம்)

1. 'நினைப்பு' :
   'கதை அரங்கம்-மணிக் கதைகள் *1-* பக்கம் *11—20.*
   மீனுட்சி புத்தக நிலையம், மதுரை; *1961.*
2. 'நாதனுள்ளிருக்கையில்' :
   'அமுதக் கதம்பம்'—பக்கம் :- *1—11.*
   அமுத நிலையம், சென்னை; *1964.*
3. 'சகோதரர் அன்றே ?' :
   'காந்தி வழிக்கதைகள்'—பக்கம் : *161—173*
   காந்தி நினைவுநிதி, மதுரை; *1969.*

11. ஒருவேளைச் சோறு

முதற்பதிப்பு : *1967*

சென்னை, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்க வெளியீடு.

தமிழ் உறவு எண் : *33.*

பக்கங்கள் : *166.* விலை : ரூ. *3-00.*

'இந்தக் கதைகள்' என்னும் அகிலனின் மூன்று பக்க முன்னுரை :

"இதில் உள்ள கதைகள் நேரடியாகவோ மறைமுக-மாகவோ புறவாழ்க்கைப் போராட்டங்களைப் பொருளாகக்-கொண்டிருக்கின்றன. கதைகளின் நிகழ்ச்சிகளைவிட அவற்றைப்-படைக்கும் முறையில்தான் கலைத்தன்மை பற்றிக் கவனிக்க வேண்டும் என்பது என் கருத்து. நான் எழுதியகாலத்தைப் பிரதி-பலிக்கும் கண்ணாடியாகவும் இத்தொகுப்பைக் கொள்ளலாம்."

12 கதைகள் :

1. சினிமாக்கதை
2. ஆத்மசோதனை
3. இப்படி ஒரு மனிதர்
4. அந்த ஒரு நாள்
5. தாய்ப்பசு
6. மகிழம்பூ
7. அரிசியோ அரிசி
8. குழந்தையின் கேள்வி
9. இளைய பாரதத்தினன்
10. மிராசுதார் மகள்
11. எண்ணும் எழுத்தும்
12. ஒருவேளைச் சோறு

12. நெல்லூர் அரிசி

முதற் பதிப்பு: 1967.

இரண்டாம் பதிப்பு: 1971.

இவை பொற்கொடி வெளியீடு.

விற்பனை உரிமை: பாரி புத்தகப் பண்ணை, சென்னை-5.

பக்கங்கள்: 191. விலை: ரூ. 3-00.

பதிப்பகத்தாரின் பதிப்புரை:

"அகிலனின் சிறுகதைகள் அவர் வாழும் காலத்துக் கண்ணாடிகள்; கலைத்தன்மை நிறைந்த படப்பிடிப்புகள்."

மலேசியா—கோலாலம்பூரில் 1966 ஏப்ரலில் நடைபெற்ற முதலாவது அனைத்துலகத் தமிழ் மாநாட்டின் ஆராய்ச்சிக் கருத்தரங்கில், 'அகிலன் ஒரு சிறுகதை ஆசிரியர்' என்னும் தலைப்பில், மலேசியாப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த திருமதி அன்னபூரணி சந்திரசேகரன் அவர்கள் ஆங்கிலத்தில் படித்த கட்டுரையின் தமிழாக்கம் 16 பக்கங்களில் (16—20) உள்ளது. அக் கட்டுரையைத் தமிழாக்கம் செய்தவர் திரு. ரங்கதுரை வேலன்—('ரதுலன்').

15 கதைகள்:

1. அழகின் ரகசியம்
2. கவிஞன் இட்டதீ
3. நந்திச்சித்தர்
4. கண் திறந்தவன்
5. இறவாப்புகழோன்
6. கரும்பு தின்னக்கூலி
7. சிறியோர் சேர்த்த சில்லறை
8. அடிமைப்பெண்
9. போர்முனையில்
10. அறைக்கதவுகள்

11. பலூனும் பலாப்பழமும்
12. ரகசியம்
13. படி அரிசி
14. உயிர்த்தோழர்
15. நெல்லூர் அரிசி

13. எரிமலை

முதற் பதிப்பு : 1970.

பொற்கொடி வெளியீடு.

விற்பனை உரிமை : பாரி புத்தகப் பண்ணை, சென்னை-5.

பக்கங்கள் : 166. விலை : ரு. 3.00

'இந்தக் கதைகள்' என்னும் பெயரில் அகிலன் எழுதிய 4 பக்க முன்னுரை :

"நம்முடைய சமுதாய வாழ்க்கை எப்படி என்னைப் பாதித்திருக்கிறது என்பதையும், அதை நான் எப்படிப் பாதிக்க முயன்றிருக்கிறேன் என்பதையும் இந்தக் கதைகளில் காணலாம். கலைப்படைப்பின் உருவம், உத்தி, வெளிப்பூச்சு பற்றி மட்டுமே மிகுதியாகப் பேசும் சில முன்னாள் எழுத்தாளர்கள்—அவர்களின் வாரிசுகள் அதன் ஆன்மாவான உள்ளடக்கம் பற்றி மூச்சுவிடுவதில்லை. காந்தியக் கலைக்கொள்கையைச் சில கதைகளில் சோதனை செய்து பார்க்க முயன்றிருக்கிறேன்."

9 கதைகள் :

1. எரிமலை
2. மழைக்கு ஒதுங்கிய இடத்தில்...
3. விபரீத விளையாட்டு
4. காந்தி வந்தார்
5. புகழும் விளம்பரமும்

6. வயிற்றுக்குத்தான்...
7. கொஞ்சம் லஞ்சம்
8. மந்தையில் ஒரு மனிதன்
9. எத்தனும் எழுத்தாளனும்

(பிற வெளியீட்டில் மீண்டும் வந்த விவரம்)

1. 'எரிமலை':

'பின்னணி'—பக்கம்: 49—62.

இலக்கியச் சிந்தனை மன்றம், சென்னை; 1971.

* தமிழ் வளர்ச்சிக் கழகம், 1971—1972 ஆம் ஆண்டுக்காலத்தில் வெளியான சிறந்த நூலிற்கான முதல் பரிசு (ரூ. 2000) அளித்துப் பாராட்டிய நூல் இது.

14. சத்திய ஆவேசம்

முதற்பதிப்பு: 1974.

பொற்கொடி வெளியீடு.

விற்பனை உரிமை: பாரி புத்தகப் பண்ணை, சென்னை-5.

பக்கங்கள்: 161. விலை: ரூ. 4-00.

'பதிப்பகத்தார் குறிப்பு':

"இந்நூலில் அடங்கியுள்ள 13 கதைகளும் பலவேறு காலங்களில் எழுதப்பெற்றவை; பலவேறு தரத்தவை. 1954 முதல் 1973 வரையுள்ள நீண்ட காலப்பரப்பில் எழுதப் பெற்று ஏதேதோ காரணங்களால் கதைத்தொகுதிகளில் சேர்க்காமல் விடுபட்டவை. இப்போது திரு. அகிலனவர்களின் படைப்புகள் பாடமாகக் கற்பிக்கப் பெறுவதோடு ஆராய்ந்து காணும் இலக்கியச் செல்வங்களாகவும் கருதப்பெறுகின்றன. அகிலனவர்களின் படைப்புக்களை டாக்டர் பட்டத்திற்கு ஆராய்ச்சிப் பொருளாகப் பலர் எடுத்துக் கொண்டுள்ள நிலையில் அவருடைய படைப்புகள் யாவற்றையும் புத்தக வடிவில் கொண்டுவந்துவிட-

வேண்டுவது கடமை என்ற முடிவுடன்தான் பழைய கதைகள் யாவற்றையும் தேடித்தொகுத்து வெளியிட்டு வருகிறோம்.''

13 கதைகள் :

1. சத்திய ஆவேசம்
2. நாட்டு மருந்து
3. வாழப்பிறந்தவன்
4. நரகாசுரர்புரம்
5. கூட்டுக்குடும்பம்
6. ஏழை பங்காளர்
7. கள்ளச் சுகம்
8. பசு, பசி, பாசம்
9. சட்டம் என்ற கழுதை
10. கையிலும் 'பில்'லிலும்
11. திருட்டுத் தெய்வம்
12. கலையின் விலை
13. கதையும் பதிலும்

இதழ்களில் மட்டும் வெளிவந்தவை

1949 ஆம் ஆண்டு முதல் 1973 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் எழுதப்பெற்று பல்வேறு இதழ்களில் வெளிவந்த சிறு-கதைகள் பல இன்னும் நூல்வடிவம் பெறுது உள்ளன. அவற்றின் பெயர் வெளியிட்ட இதழ்,காலம் ஆகிய விவரங்களைப்-பின்னே காணலாம். இவை தவிர, இன்னும் சில கதைகள் இருக்கலாம். இதுவரை கிடைத்தவற்றை இங்குக் கொடுத்துள்-ளேன். இயன்ற அளவிற்குக்கிடைத்த செய்திகளை அப்படியே தந்துள்ளேன். எனவே ஒருசில முழுமையான செய்திகள் இன்றித் தனித்து நிற்பதை உணரலாம்.

கதை	இதழ்	காலம்
1. சாதி	— காலச்சக்கரம் —	14-1-1949
2. துரோகியின் ஆவி	—சுதேசமித்திரன்—	1954 தீபாவளிமலர்

3.	ஆறுல்	— காதல்	—1954-ஆண்டு மலர்
4.	வெடித்த பட்டாசு	— அமுதசுரபி	—1955-தீபாவளிமலர்
5.	கண்டதும் காதல்	— விந்தியா	— ......
6.	தீபாவளிப்பரிசு	— அமுதசுரபி	— ......
7.	காதல் இறந்த கதை	— பொன்னி	— ......
8,	மூன்றே முக்கால் நாழி	-- காதல்	— 1956-ஆண்டு மலர்
9.	பசியும் ருசியும்	— கலைமகள்	— 1958 - மே.
10.	எங்கோ ஓர் இதயம்	— கல்கி	—1973-தீபாவளிமலர்

நாவல்கள்

அகிலனின் பதினேழு நாவல்கள் இன்றுவரை வெளிவந்து உள்ளன. 'மங்கிய நிலவு' என்ற பெயரில் வந்த நாவல் ஐந்தாண்டுகள் கழித்துச் சில மாற்றங்களுடன் 'இன்ப நினைவு' என்ற பெயருடன் வெளிவந்தது. பதினேழு நாவல்களில் மூன்று, வரலாற்று நாவல்கள்.

இப்பகுதியில் ஒவ்வொரு நாவலுக்கும் முதற்பதிப்பு வெளியான ஆண்டு, இன்று கிடைக்கும் பதிப்புப் பற்றிய விவரம், பதிப்பாளர்-வெளியீட்டாளர், வெளியீட்டாளரில் மாற்றம், பக்கங்கள், விலை, இதழ்களில் தொடர்கதையாக வந்த காலம், நாவலின் பாகம்-பகுதி, நாவலாசிரியரின் முன்னுரை, அறிஞர்கள் தந்துள்ள சிறப்புரை ஆகியவற்றின் சுருக்கம் என்ற விவரங்கள் உள்ளன. இறுதியில் பரிசுபெற்ற செய்தி, நாடகமாகவோ-திரைப்படமாகவோ உருவாகிய செய்தி ஆகியவைகளையும் தந்துள்ளேன்.

மங்கிய நிலவு

அகிலனின் முதல் நாவல் 'பெண்' என்பதே அனைவரும் அறிந்த செய்தி. ஆனால், 'பெண்' நாவல் வெளிவரும் முன்னரே 1944 ஆம் ஆண்டில் 'மங்கிய நிலவு' என்னும் இந்நாவல் வெளிவந்தது.

முதற்பதிப்பு : 1944
புதுக்கோட்டை, கலைவாணி கழக வெளியீடு.
விலை : ரூ 0-12-0. (0-75 பை)

இந்த நாவல், இப்பெயரில் ஒரு பதிப்பே வந்தது. பின்னர், ஐந்தாண்டுகள் கழித்து, 1949 ஆம் ஆண்டில், புதுக்கோட்டை பழனிபிரசுர வெளியீடாக, 'இன்ப நினைவு என்னும் பெயரில் சில மாற்றங்களுடன் வந்தது.

1. பெண்

முதற்பதிப்பு :- 1947
சென்னை, கலைமகள் காரியாலய வெளியீடு.
ஐந்தாம்பதிப்பு : 1971
இதுவரை வந்துள்ள ஐந்து பதிப்புகளுமே கலைமகள்காரியாலய வெளியீடு.
பக்கங்கள் : *116.* விலை : ரூ. *2-00*
தொடர்கதையாக அகிலன் எழுதிய முதல் நாவல்
கலைமகள் :— ஜூலை *1946* — டிசம்பர் *1946*
நாவலில் *22* பகுதிகள் உள்ளன.

'கதையின் கதை' என்னும் தலைப்பில் ஐந்தாம் பதிப்பிற்கு அகிலன் எழுதிய *3* பக்க முன்னுரை :

"என்னை இங்கிலாந்திற்கு அனுப்பி ஐ.சி.எஸ். படிக்க வைத்துக் கலெக்டராக்க விரும்பிய என் தந்தை, நான் கல்லூரி-யில் நுழையுமுன்னே இறந்து விட்டார். பிரிட்டிஷ் இந்திய அரசாங்க ஊழியனாக இருந்தபோது எழுதிய என் கன்னிமுயற்சி இந்நாவல். இந்த நாவல் எனக்களித்த பெரும்பரிசு **'கலைமகள்'** இலக்கிய இதழ். தொடர்ந்து பத்தாண்டுக்காலம் அதன் செல்லப் பிள்ளையாக நான் வளர்ந்திருக்கிறேன். விடுதலைக்கு முன்னே விடுதலைப்போராட்டக் காலச் சூழலைச் சுட்டிக்காட்டிய மிகச்சில தமிழ் நாவல்களில் இதுவும் ஒன்று என்பதுதான் குறிப்பிடத்தக்கது."

* **'கலைமகள்'** இதழ், *1945* ஆம் ஆண்டு நாராயணசாமி ஐயர் நாவல் பரிசுப் போட்டியை அறிமுகப்படுத்திய உடன், முதல் பரிசுபெற்றது இந்நாவல்.

*தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் பாராட்டும் பரிசும் பெற்ற நாவல்.

'ராணிமுத்து' இதழ் : *1974* மே.

2. இன்பநினைவு

முதற்பதிப்பு : 1949
முதல் ஏழு பதிப்புகளும் புதுக்கோட்டை பழனி பிரசுர வெளியீடு.
எட்டாம் பதிப்பு : 1969
பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை : பாரிபுத்தகப்பண்ணை, சென்னை–5.
பக்கங்கள் : 64. விலை : ரு. 1-00

எந்த இதழிலும் தொடர் கதையாக வராமல் நூல் வடிவிலேயே வந்த ஆசிரியரின் முதல் நாவல்.

நாவலில் 12 பகுதிகள் உள்ளன.

முன்னுரை, பதிப்புரை எதுவுமில்லை.

3. துணைவி

முதற்பதிப்பு : 1951
நான்காம் பதிப்பு : *1966*
இந்நான்கு பதிப்புகளும் சென்னை, அமுத நிலையவெளியீடு.
பக்கங்கள் : 135. விலை : ரு. 2.00

'காலச் சக்கரம்' இதழ் : 1949-ஆம் ஆண்டில் தொடர் கதையாக வெளி வந்தது.

நாவலில் 12 பகுதிகள் உள்ளன.

முன்னுரை, பதிப்புரை எதுவுமில்லை.

அமுத நிலைய மலிவுப்பதிப்பு: டிசம்பர் *1958*

'ராணிமுத்து' இதழ்: ஏப்ரல் 1973.

4. சிநேகிதி

முதற்பதிப்பு: 1951
முதல் நான்கு பதிப்புகள், புதுக்கோட்டை பழனி பிரசுர வெளியீடு.
ஐந்தாம் பதிப்பு: 1965
ஆறும் பதிப்பு: 1969
இவை பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை: பாரிபுத்தகப் பண்ணை, சென்னை-5.
பக்கங்கள்: 160. விலை: ரூ. 2-50.

எந்தவொரு இதழிலும் தொடராக வராமல், 1951-இல் நூலாகவே வந்தது.

நாவலில் 16 பகுதிகள் உள்ளன.

முதல் பதிப்பிற்கு அகிலன் எழுதிய இருபக்க முகவுரை:

"இந்த நாவலை 'நான்' என்று எழுதுவதில் சிரமம் இருந்தாலும் அதன் மூலம் வாசகர்களுக்கு அருகே வெகு சமீபத்தில், நேருக்குநேர் கதைசொல்லும் இனிய அனுபவம் உண்டாகிறது. அன்பில் அசையாத நம்பிக்கை உடையவன் நான். அன்பை உணர முடிந்தவர்களால் தான் நல்லதையும் தீயதையும் சீர்தூக்கிப் பார்க்க முடியும்."

பக்கம் 5, 6 ஆகிய இரண்டிலும் டாக்டர் மு. வரதராசனாரின் முன்னுரை:

"காதல் என்பது நாகரிக வாழ்க்கையில் இடம் பெறத்தக்க நல்லுணர்ச்சியே என்பது உண்மையானால், காதலைப்பற்றிய கலைக்கற்பனையும் நாகரிக வரம்புக்குள் நின்று நிலவ முடியும். 'துரை'யின் தன்மைக் கூற்றாகவே ஓடும் வாய்ப்பு உள்ள நூலில் உணர்ச்சிகளைத் தடையில்லாமல் கொட்டும் நிலையிலும் தூய காதல்கதையாக இது உள்ளதால், கதை பிறந்த உள்ளத்தைத்தான் வாழ்த்த வேண்டும். சமூகம் செய்யத் துணியாத, செய்ய

முடியாத பெருஞ் செயலைச்செய்து நம் உள்ளத்தில் தியாகவீரராக நாராயணசாமி வாழ்கிறார். காதலுலகத்தில் ஒப்பற்ற புரட்சி-அன்புப் புரட்சி-நிகழ்ந்து வெற்றி பெறுகிறது.''

'ராணிமுத்து' இதழ்: ஜனவரி *1970.*

5. சந்திப்பு

முதற்பதிப்பு: *1952*
முதலிரு பதிப்புகள் சென்னை, அமுத நிலைய வெளியீடு.
மூன்றும் பதிப்பு: *1966*
நான்காம் பதிப்பு: *1972*
இவை பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை: பாரிபுத்தகப் பண்ணை, சென்னை-5.
பக்கங்கள்: *55.* விலை: ரூ. *1-00.*

நூலாகவே 1952இல் வெளிவந்தது; எந்த இதழிலும் தொடராக வரவில்லை.

நாவல் 6 இயல்களாக 'அரும்பு' 'மொட்டு', 'மலர்', 'முள்', 'முள்ளும் மலரும்', 'சந்திப்பு' என்று பெயரிடப்பட்டு அமைந்துள்ளது.

'அரை நிமிஷம்' என்னும் தலைப்பில் அகிலனின் முன்னுரை:

''கருத்துப் பழையது; என் எழுத்துப் புதியது. மொந்தைப் பழைய கள்ளைத் தான் நான் என் சொந்தக் கிண்ணத்தில் தருகிறேன். மூவுலகமும் தெரியாவிட்டாலும் முன்னே நிற்கும் தமிழ் உலகத்தின் சாதிவெறி நிறைந்த ஒரு மூலையாவது தெரியும்.''

'ராணிமுத்து' இதழ் : நவம்பர் 1970
(நா. பார்த்தசாரதியின் 'வஞ்சிமாநகரம்' நாவலுடன் இணைப்பு
வெளியீடு).

6. நெஞ்சின் அலைகள்

முதற்பதிப்பு : 1953
சென்னை, கலைமகள் காரியாலய வெளியீடு.
இரண்டாம் பதிப்பு : 1959
புதுக்கோட்டை, பழனிபிரசுர வெளியீடு.
மூன்றும் பதிப்பு : 1964
நான்காம் பதிப்பு : 1968
ஐந்தாம் பதிப்பு ; 1971
இவை பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை : பாரிபுத்தகப்பண்ணை, சென்னை-5.
பக்கங்கள் : 288. விலை: ரு. 4-00

'கலைமகள்' — ஜனவரி 1952—மார்ச் 1953

42 பகுதிகளாகத் தற்போதைய பதிப்பு அமைந்துள்ளது. முதல் மூன்று பதிப்புகள் 41 பகுதிகளுடன் இருந்தன. 1968ஆம் ஆண்டில் பொற்கொடி வெளியீட்டார் இறுதிப்பகுதியினைச் சேர்த்து வெளியிட்டனர்.

'இந்த நாவல்' என்னும் பகுதியும், 'இதன் ஆசிரியர்' என்னும் பகுதியும் 3,4,5 ஆகிய பக்கங்களில் உள்ளன.

நான்காம் பதிப்பிற்கு அகிலன் எழுதிய மூன்று பக்க முன்னுரை :

"என்னால் முடிந்திருந்தால் பர்மாவுக்கும் மலேசியாவுக்கும் நேரில் சென்று போர் நிகழ்ந்த இடங்களைக்கண்டு வந்திருப்பேன். நிகழ்ச்சிகளை இன்னும் விரிவாகத் தெரிந்து கொண்டு இருப்பேன்.

திரு. கண. முத்தையா அவர்கள் இந்திய தேசிய ராணுவத்தில் தொண்டாற்றியவர்கள். அவர்கள் அப்போது வெளியிட்ட 'யுத்தகாலபர்மா' போன்ற நூல்களும் எனக்கு வரலாற்றை அறிந்துகொள்ளப் பெரிதும் துணைபுரிந்திருக்கின்றன.''

1958இல் மேடை நாடகமாக நடிக்கப்பெற்றது. 1959 இல்-வானொலி நாடகமாகத் தமிழிலும் 1965 இல் இந்திய தேசிய மொழிகள் அனைத்திலும் ஒலிபரப்பப்பட்டது.

லெனின்கிராட் பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவர் இந் நாவலை ஆராய்ச்சி செய்து வருகிறார்.

* 1953–1954 ஆம் ஆண்டுகளில் வந்த சிறந்த நாவலிற்-கான முதற்பரிசினை அளித்துத் தமிழ்வளர்ச்சிக் கழகம் பாராட்டியது.

'ராணிமுத்து' இதழ் : ஏப்ரல் 1972.

7. அவளுக்கு...

இந்நாவலை அகிலன், செல்வம், சோனா, ஆர்வி ஆகிய-வர்கள் எழுதினார்கள்.

முதற்பதிப்பு : 1953
முதல் மூன்று பதிப்புகள், புதுக்கோட்டை, பழனிபிரசுர வெளியீடு.
நான்காம்பதிப்பு : 1965
ஐந்தாம்பதிப்பு : 1972
இவை பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை : பாரிபுத்தகப்பண்ணை, சென்னை-5.
பக்கங்கள் : 63. விலை : ரு 1-25

'அவளுக்கு...I' — அகிலன் —கலைமகள்-அக்டோபர் 1951

'அவருக்கு...' —செல்வம் — 'கலைமகள்' - மார்ச் 1952
'அவளுக்கு... II' — அகிலன் — ,, - ஏப்ரல் 1952
'அவருக்கு' — சோனு — நூலில் மட்டும்
'அவளுக்கும் அவருக்கும்'— ஆர்வி —கலைமகள்-மே; ஜுன்.1952

பதிப்பாளரின் பதிப்புரை :

"தமிழ் நாட்டில், சின்னஞ்சிறு நாவலை நான்கு ஆசிரியர்கள் எழுதுவது புதுமை. 'ஆயிரக்கணக்கான வாசகர்களில் ஒரே ஒருத்திக்காக மட்டும் இதை எழுதுகிறேன்' என்று அகிலன் தொடங்கிய ஒற்றைக் கடிதம் இப்போது இந்த அரிய நாவலாக வெளிவருகிறது."

8. வாழ்வு எங்கே ?

முதற்பதிப்பு : 1957
சென்னை, கலைமகள் காரியாலய வெளியீடு.
இரண்டாம் பதிப்பு : 1964
இரண்டாம் பதிப்பு முதல்-பொற்கொடி வெளியீடு.
நான்காம் பதிப்பு : 1972
விற்பனை உரிமை : பாரிபுத்தகப் பண்ணை, சென்னை-5.
பக்கங்கள் : 399. விலை : ரூ. 7-00.

'கலைமகள்' : ஏப்ரல் 1955-ஜனவரி 1957.

56 பகுதிகளாக நாவல் அமைந்து உள்ளது. நாவலின் ஒவ்வொரு பகுதிக்கும் முதன் முதலில் தலைப்பு இடத்தொடங்குகிறார், அகிலன்.

இரண்டாம் பதிப்பிற்கு அகிலனின் முன்னுரை :

"நாடு விடுதலை பெற்ற பிறகு, அதை அடுத்து எழுதப் பெற்ற நாவல் இது. நமது சொந்தப் பிரச்னைகளில், ஆழமான சமூகப் பிரச்சினைகளில் என்மனம் திரும்பியிருப்பதை இந்த

நாவலில் காணுகின்றேன். பழைமையின் பெயரால் நடை-பெறும் போலித்தனங்களைக் குறிப்பிடும் போதும், புதுமையின் பெயரால் நடைபெறும் போலித்தனங்களைக் குறிப்பிட்ட போதும், அவற்றை உண்மையென்று நம்பியவர்கள் எதிர்த்தார்கள்; மற்றவர்கள் ஆதரித்தார்கள். சந்திரன்-ராதை என்ற சமூகத்தின் இருவேறு துருவங்களின் காதல் கதை இது. கலப்பு மணம் செய்து கொள்பவர்களுக்கு வரக்கூடிய இன்னல்கள் எவை? அவர்களுடைய சந்ததி எப்படி இருக்கும்? இத்தகைய கேள்விகளுக்கு இந்த நாவலில் விடை காண முயன்றிருக்கிறேன்.''

இந்நாவல், 'குலமகள் ராதை' என்னும் பெயரில் திரைப் படமாகியது.

9. பாவை விளக்கு

முதற்பதிப்பு: *1958*
முதலிரு பதிப்புகள் புதுக்கோட்டை, பழனி பிரசுர வெளியீடு.
மூன்றும் பதிப்பு: *1968*
இப்பதிப்பு முதல் - பொற்கொடி வெளியீடு.
ஐந்தாம் பதிப்பு: *1973*
விற்பனை உரிமை: பாரிபுத்தகப்பண்ணை, சென்னை-5.
பக்கங்கள்: *708.* விலை: ரூ. *15-00.*

'கல்கி' :—*11-8-1957—22-6-1958.*

நாவல் 3 பாகங்களாக உள்ளது. முதல் பாகத்தில் 36 பகுதிகளும், இரண்டாம் பாகத்தில் 35 பகுதிகளும், மூன்றும் பாகத்தில் 16 பகுதிகளும் என நாவல் மொத்தம் 87 பகுதிகளாக உள்ளது.

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தனின் மூன்று பக்க முகவுரை:

"நிகழ்ச்சிகளின் பின்னர் உள்ள மன உணர்ச்சிகளின் பின்னல்களையும் போராட்டங்களையும் கண்டறிந்து புதினம் படைத்து, மக்கள் மனதைக் கவரும் வண்ணம் அகிலன் மிகப் பெரும் வெற்றிபெற்றுள்ளார். அறிவுக்கே முதலிடம் தந்து வாழ்பவன் தணிகாசலம்; உணர்விற்கு முதலிடம் தந்து வாழ்பவள் உமா. இவ்விரண்டிற்குமிடையே நிகழும் போராட்டமே இவர்கள் இருவருக்குமிடையே நிகழ்வதாகும். தீயவன் (villain) உதவி இன்றியே ஒருபெரிய புதினம் மனதைக் கவரும் முறையில் தோன்றலாம் என்பதற்குப்'பாவைவிளக்கு' நல்லதோர் எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளது."

'கதையின் முன்னுரை' என்ற தலைப்பில் அகிலன் எழுதிய இரண்டுபக்க முன்னுரை:

"தணிகாசலமும் நம்மைப்போல் சாதாரண மனிதன் தான். குறையும் நிறையும் பலமும் பலவீனமும் உள்ளவன். ஆனல் அவனுடைய நட்பிலிருந்து மட்டுமல்லாமல், அவனுடைய சொல், செயல் இவற்றைத் தூண்டிய அவனது உள்ளுணர்வு இவற்றைக் கொண்டு நான் அவனை ஆராய்ச்சி செய்திருக்கிறேன். தணிகாசலத்தின் வாழ்க்கை அழகான கதை ஓட்டம் நிறைந்த ஓர் வாழ்க்கை. கூடுமான வரையில் அதை அப்படியே சொல்லுவதற்கு முயலுகிறேன்."

'பாவைவிளக்கு' என்ற பெயரிலேயே திரைப்படமாகியது

10. வேங்கையின் மைந்தன்

அகிலனின் முதல் வரலாற்று நாவல் இதுவே.

முதற்பதிப்பு: 1961
புதுக்கோட்டை, பழனி பிரசுர வெளியீடு.
இரண்டாம் பதிப்பு: 1964
இப்பதிப்பு முதல்–பொற்கொடி வெளியீடு.

நான்காம் பதிப்பு: 1972
விற்பனை உரிமை: பாரிபுத்தகப் பண்ணை, சென்னை-5.
பக்கங்கள் : 794. விலை: ரூ 12-50

'கல்கி' :— 5-7-1959 — 28-8-1960.

நாவல் மூன்று பாகங்களாக உள்ளது. முதல்பாகத்தில் 36 பகுதிகளும், இரண்டாம்பாகத்தில் 41 பகுதிகளும், மூன்றும் பாகத்தில் 43 பகுதிகளும் என நாவல் மொத்தம் 120 பகுதிகளாக உள்ளது.

அகிலனின் நான்கு பக்க முன்னுரை :

"மாமன்னர் இராஜேந்திரரின் வாழ்க்கையும் அவர் உருவாக்கிய பொற்காலமும் எனக்கு இந்தக் கதையை எழுதுவதற்கு உற்சாகம் தருகின்றன. தமிழ்த்திருநாட்டை மீண்டும் பொன்விளையும் பூமியாக, புகழ் பெருக்கும் தாயகமாக அன்பும் அறிவும் அருளும் மலரும் கலைச்சோலையாக உருவாக்க வேண்டுமென்ற ஆவலைவாசகர்களில் சிலரிடமாவது இந்தக் கதை தூண்டி விடுமானால் அதுவே எனது நோக்கத்தின் பயனாகும்'.'

பின்னர் இது மேடை நாடகமாக நடிக்கப்பெற்றது.

* 1963 ஆம் ஆண்டில் இந்திய அரசின் சாகித்ய அகாதெமி பரிசாக 5000 ரூபாயைப் பெற்றது.

11. புதுவெள்ளம்

முதற்பதிப்பு : 1964
மூன்றும் பதிப்பு : 1971
பொற்கொடி வெளியீடு
விற்பனை உரிமை : பாரி புத்தகப் பண்ணை, சென்னை-5.
பக்கங்கள் : 590. விலை: ரூ. 10-00

'கல்கி' :— 6-8-1961 — 12-8-1962

நாவல் மூன்று பாகங்களாக உள்ளது. முதல்பாகத்தில் 26 பகுதிகளும், இரண்டாம் பாகத்தில் 39 பகுதிகளும், மூன்றும் பாகத்தில் 16 பகுதிகளும் என நாவல் மொத்தம் 81 பகுதி-களாக உள்ளது.

அகிலனின் மூன்று பக்க முன்னுரை:

"மனிதனுடைய குணம் தாழ்ந்து, அவனுடைய பணம் உயர்ந்து வரும் இந்தக் காலத்து வாழ்வையும், அதன் சிக்கல்களை-யும் ஓரளவு சித்திரித்து விமர்சனம் செய்ய முயற்சி செய்திருக்-கிறேன். உழவை மட்டும் நம்பி வாழ்ந்த சமூகம் அமைதியான தொழில் வளத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பது மெய் தான். ஆனல் 'வாழத்தெரிந்த' மனிதர்களின் மனவளம் எந்தத் திசையில் சென்று கொண்டிருக்கிறது? வாழ்க்கையில் இருந்துதான் கதை பிறக்கிறது. காலம் மாறும். இந்தக் காலத்-தின் கோலத்தை நான் எவ்விதமாகக் கண்டேனே அவ்விதமாகச்-சித்திரித்து வைப்பது என் கடமையென்று தோன்றியது. அதைச்-செய்திருக்கிறேன்."

12. பொன்மலர்

முதற்பதிப்பு: 1965
பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை: பாரி புத்தகப்பண்ணை, சென்னை-5.
மூன்றும் பதிப்பு: 1970
பக்கங்கள்: 234. விலை ரு: 4-00.
'கலைமகள்':— ஜனவரி 1964 — டிசம்பர் 1964

நாவல் 25 பகுதிகளாக உள்ளது.

'கலைமகள்' இதழில் 1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நாவல் எழுதும்போது முதல் இதழில் அகிலன் எழுதிய இருபக்க முன்னுரை;

"இன்றைய சமூகத்தின் பயங்கரத் தொத்து வியாதியான பேராசைப் பேயுடன் டாக்டர் சங்கரி தனித்துப் போராடத் துணிந்து விட்டாள். நோய்நாடி, அதன் முதல் நாடி, அதன் ஆணிவேரையே கண்டு பிடித்து அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற பிடிவாதம் அவளுக்கு."

'கலைமகள்', *1964* ஆம் ஆண்டு டிசம்பர் இதழில் திரு. கி. வா. ஜகந்நாதன் எழுதிய 'தாழம்பூ' என்னும் சிறப்புரை:

"எளிதில் வாடாமல் பொன்னிறம் பெற்று நெடுந்தூரம் மணம் வீசும் தாழம்பூவையே 'பொன்மலர்' என்கிறார் நாவலாசிரியர். அவள் பொன்மலர்தான். அவளை நம் உள்ளத்திலிருந்து கிள்ளி எறிய முடியாது. நம் நெஞ்சில் என்றும் மணம் பரப்பி மலரும் மலராக அவள் நிலவுவாள்."

'கதையின் கதை' என்னும் தலைப்பில் எட்டுப் பக்கங்களில் அகிலனின் உரை ஆறு பக்கங்களிலும், நான்கு வாசகர்களின் கடிதங்கள் (கதை முடிந்தவுடன் 'கலைமக'ளில் வந்தவை) இரு பக்கங்களிலும் உள்ளன.

"சமுதாயத்து மனிதனைச் சுற்றியுள்ள மக்களின் வாழ்க்கையில் மனத்தைப் பறிகொடுக்கும் இயல்பினனாக இருப்ப தால் அந்த வாழ்க்கையோடு ஒன்றிய மனம் மூலப்பொருளை வேறு எங்கோ தேடி அலைவதில்லை."

'ராணிமுத்து': ஜனவரி *1969* ('ராணிமுத்து' இதழின் முதல் வெளியீடு இந்த நாவல்)

13. கயல்விழி

ஆசிரியரின் இரண்டாவது வரலாற்று நாவல்.

முதற்பதிப்பு: 1965
பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை: பாரி புத்தகப்பண்ணை, சென்னை-5.

இரண்டாம் பதிப்பு · 1968
பக்கங்கள்: 574 விலை: ரூ 10-00
கல்கி :— 12 — 4 — 1964 — 11 — 4 — 1965

நாவல் மூன்று பாகங்களாக உள்ளது. முதல் பாகத்தில் 32 பகுதிகளும், இரண்டாம் பாகத்தில் 38 பகுதிகளும், மூன்றும் பாகத்தில் 28 பகுதிகளும் என நாவல் 98 பகுதிகளாக உள்ளது.

பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் முன்னுரை:

''தமிழர் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகக் கனக்கண்டு போற்றிவரும் பெண்மையையே படைத்துவிட்டார் கயல்விழி வாயிலாக. வரலாற்றுச் சுந்தர பாண்டியனைத் தமிழ் வாழும் அளவும் வாழத் தக்க தமிழனாக ஆசிரியர் படைத்துள்ளார். கதைப் படைப்பிலும், பாத்திரப் படைப்பிலும் இலட்சியப் படைப்பிலும், இவற்றிற்கெல்லாம் ஏற்ற தமிழ்நடைப் படைப்பிலும் தம் தனித்தன்மையை ஆசிரியர் விளக்கியுள்ளார். அந்த நடையின் எளிமையில் பாண்டியன் உள்ளத்தின் ஆழமும் கயல்விழியின் தெய்வீகமும் விளங்கக் காண்கிறோம்.''

அடுத்த பக்கத்தில் அகிலனின் நன்றியுரை உள்ளது.

'இதயக் கபாடம் திறமினோ' என்னும் அகிலனின் முன்னுரை:

''நாம் போர் வெறி கொண்டவர்களாக இருக்க வேண்டாம். ஆனால் போர்வெறி கொண்ட அண்டை அயலார்களுக்கு மத்தியில் விழிப்போடிருக்க வேண்டியது அவசியமல்லவா? எனக்குச் சிறந்ததோர் மனிதனைப் படைத்துப் பார்க்க வேண்டும் என்ற பேராசை மட்டிலும் உண்டு. தலைவனைப் படைக்க வேண்டும் என்ற துடிப்பின் விளைவே சுந்தர பாண்டியன்.''

நூலின் பிற்பகுதியில் 'கல்கி' யில் கதை முடிந்ததும் வந்த இரு கடிதங்களும் அவற்றில் ஒன்றில் வாசகர் ஒருவர் கேட்ட வரலாறு பற்றிய ஐயத்திற்கு அகிலன் அளித்த விளக்கமும் [பக்கம் 570—572] உள்ளன.

வானொலி நாடகமாக இந்நாவல் ஒலிபரப்பானது.

* 1964—1965 ஆம் ஆண்டுகளில் வெளியான சிறந்த நாவலிற்கான தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறைப் பரிசு ஆயிரம் ரூபாயைப் பெற்ற நாவல்.

"மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன்" என்னும் பெயரில் திரைப்படமாக உருவாகிறது.

14. வெற்றித்திருநகர்

ஆசிரியரின் மூன்றாவது வரலாற்று நாவல்.

முதற்பதிப்பு: 1966
இரண்டாம் பதிப்பு: 1971
பெரற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை: பாரி புத்தப்பண்ணை, சென்னை - 5
பக்கங்கள்: 579 விலை: ரு 10-00

'கல்கி': 24—10—1965 → 2—10—1966

நாவல் மூன்று பாகங்களாக உள்ளது. முதல் பாகத்தில் 37 பகுதிகளும், இரண்டாம் பாகத்தில் 29 பகுதிகளும், மூன்றும் பாகத்தில் 29 பகுதிகளும் என நாவல் மொத்தம் 95 பகுதிகளாக உள்ளது.

டாக்டர் மு. வரதராசனாரின் நான்கு பக்க முன்னுரை :

"விஜயநகரப் பேரரசின் காலத்து நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டு இசைப்புனைந்த அகிலன், இத்துறையில் வல்லவராய்த் திறம்படப் பல உத்திகளைக் கையாண்டு வெற்றி பெற்றுள்ளார். அவர் வெறும் பொழுது போக்குக்காக எழுதுவதில்லை. இலக்கியச் செல்வம் படைத்துத் தருவதோடு, அவற்றினூடே இனிய கருத்துக்களையும் அமைத்துத் தருவதில் வல்லவர். சமுதாயம் வாழவேண்டும் என்ற நல்ல நோக்கம் நிறைந்த ஒரு நெஞ்சிலிருந்து கதை பிறக்குமானால், அந்தக்கதை

சிறந்த கலைவடிவம் பெறுவதோடு நின்றுவிடாது; அந்தக்கலையின் வாயிலாக உயர்ந்த நோக்கத்தையும் உணர்த்தியே தீரும்.''

அகிலனின் நான்கு பக்க முகவுரை :

''பாகிஸ்தான் இந்தியாவின் மீது படையெடுத்ததற்கான காரணங்களை நான் வரலாற்று ஏடுகளில் தேடினேன். முன்பு நடந்தவைகளைக் கொண்டு, அடுத்து நடக்கவேண்டியவைகளைச்-சிந்தித்து இதை எழுதலானேன்.''

'கல்கி' இதழில் நாவல் தொடங்கியபோது எழுதிய அகிலனின் 'நுழைவாயில்':

''நமது நேற்றையப் படுகளத்தில் மாண்டு மடிந்த தேசிய வீரர்களின் நினைவாக விசுவநாதனை அறிமுகப் செய்து வைத்-திருக்கிறேன். அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாகித்தேசிய உணர்ச்சியை இந்த நாட்டில் ஊன்றி வைத்தவன் அவன்.''

முதலில் வானொலி நாடகமாக ஒலிபரப்பப்பட்டது. பின்னர் மேடைநாடகமாக நடிக்கப்பெற்றது.

15. சித்திரப்பாவை

முதற்பதிப்பு: *1968*
இரண்டாம் பதிப்பு: *1971*
வெளியீடு: பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை: பாரி புத்தகப்பண்ணை, சென்னை - 5.
பக்கங்கள்: *511* விலை: ரூ. *9-00*
'ஆனந்தவிகடன்' :— *19—3—1967 — 1—4—1968*

மூன்று பாகங்களை உடைய இந்நாவல், முதல் பாகம் 36 பகுதிகளையும், இரண்டாம் பாகம் 36 பகுதிகளையும், மூன்றும் பாகம் 16 பகுதிகளையும் கொண்டு 88 பகுதிகளாக அமைந்-துள்ளது.

திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்களின் முன்னுரை :

"அகிலன் தமது சமூக நாவல்களில் ஒரு தனிப்பண்பை வளர்த்திருப்பதை நாம் அறிவோம். 'சித்திரப்பாவை' நாவலில் சமுதாயத்தில் தாம் கொண்டிருக்கும் மதிப்பீட்டை, கலைக்கும் 'கலையைப் போற்றுகிறோம்' என்று சொல்லிக்கொள்ளும் சமூகப் பெரியார்களின் கொள்கைக்கும் உள்ள முரண்பாட்டை, உள்ளார்த்தத்துக்கும் வெளிவேஷத்துக்குமுள்ள போராட்டங்களை, சமூக சம்பிரதாயம் என்ற அடக்கத்தில் மூடி மறைக்காமல் பிரத்தியட்சமாக எடுத்துக்காட்டுகின்றார். வாசகர்கள் வெறுமனே படித்துவிட்டுப் பொழுதுபோக்கென்று மாத்திரம் வாளாவிருக்காது, சிந்திக்க வேண்டுமென்பது அகிலனின் கொள்கை. தமிழ் இலக்கியப் படைப்புகளை ஆராயும்போது அளவுகோலையும் அதற்கு ஏற்றாற் போல் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். அகிலனுடைய 'சித்திரப்பாவை' தமிழ் நாவல் இலக்கியத்தின் முதுவளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு."

அகிலனின் நான்கு பக்க முகவுரை :

"பொருள் வேட்டையாகிய மாயமான் வேட்டையில் பலர் இப்போது மிகத் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள். மாயமான் வேட்டையில் சென்னை நகரமே தமிழ் நாட்டின் பிற பகுதிகளுக்கு வழிகாட்டி வருகிறதென்று நம்புகிறேன். போலிகளைக் கொண்ட ஓர் உளுத்துப்போன சமுதாயத்தையே உருவாக்கவல்ல மாற்றம் இப்போது மறைமுகமாக நாட்டில் நடைபெற்று வருவதை என்னால் காணமுடிகிறது. இன்றைய வாழ்க்கையின் அகப்புற நிலைகளை ஆராய்ந்து, எதிர்காலத்துக்கான மனப்போக்கை உருவாக்கும் கடமை எனக்கிருப்பதை நம்புகிறேன். வாசகர்கள் எதை விரும்புகிறார்கள் என்பதைவிட எதை விரும்ப வேண்டும் என நான் நினைக்கிறேனோ அதைக் கொடுத்துள்ளேன்."

16. கொள்ளைக்காரன்

முதற்பதிப்பு: *1969*
இரண்டாம் பதிப்பு: *1973*
பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை; பாரி புத்தகப்பண்ணை, சென்னை - *5*.
பக்கங்கள்: *95* விலை: ரூ. *2-00*

*1968*ஆம் ஆண்டு 'தினத்தந்தி' வெள்ளி விழா மலரில் வெளியானது.

எட்டு பகுதிகளாக இக் குறு நாவல் அமைந்துள்ளது.

அகிலனின் இரண்டு பக்க முன்னுரை:

"அந்தக் காலத்து கிராம வாழ்க்கை எவ்வாறு இருந்தது என்று இப்போது திரும்பிப் பார்க்கலாமல்லவா? ஒரு வகையில் இதை என் தந்தையார் காலத்து வரலாற்றின் ஒரு சின்னஞ்சிறு ஏடு என்று கூறலாம். இப்போது நம்மிடையே உலவும் கொள்ளைக்காரர்கள் நல்லவர் போல் நடித்துக் கொண்டு கோழைகளாய் உலவுகிறார்கள். அன்று உலவிய கொள்ளைக்காரர்களிடமிருந்த நேர்மைத் துணிவும் வீரச்செறிவும் சில நெறிமுறைகளும் இவர்களிடமில்லை."

இந்த நாவல் 1972 ஆம் ஆண்டு பாண்டிச்சேரி வானொலி நிலையத்தில் ஒலிபரப்பப் பெற்றது.

17. எங்கே போகிறோம்?

முதற்பதிப்பு: *1973*
வெளியீடு: பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை: பாரி புத்தகப்பண்ணை, சென்னை - *5*.
பக்கங்கள்: *392* விலை: ரூ. *7 - 50*

'கலைமகள்':— ஜூலை *1971* — மார்ச் *1973*
நாவல் 40 பகுதிகளாக உள்ளது.

'கேள்வியும் பதிலும்' என்னும் அகிலனின் முன்னுரை :

"'ஆன்மாவின் வெளிப்பாடு தான் கலை: சத்தியத்தில் அழகைத் தேடிப்பார்; புறக்கண்களுக்குச் சத்தியத்தின் உருவம் அழகில்லாதது போல் தோன்றினாலும் அகக் கண்களால் அதன் அழகைத் தேடிச் செல்' என்று காந்தியடிகள், இந்த மண்ணிலே விளைந்த ஓர் இலக்கியக் கொள்கையை இந்த நாட்டுக்கலைஞர்களுக்குச் சுட்டிக் காட்டிச் சென்றிருக்கிறார். அதை நான் இந்த நாவலில் பரிசோதனை செய்துபார்க்க முயன்றிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரை காந்திய இலக்கியக் கொள்கையை வெளிப்படுத்த முனைந்துள்ள தமிழ்நாட்டின் முதற்பரிசோதனை நாவல் இது."

நாடகம்

நாடகம்

'புயல்', 'வாழ்வில் இன்பம்', 'உயிர்ப்பலி' ஆகிய மூன்று நாடகங்களை எழுதினார் அகிலன். அவைகளில் 'வாழ்வில் இன்பம்' மட்டுமே நூலாகவும் வந்தது. ஏனைய இரண்டும் மேடை நாடகத்-திற்காக எழுதப்பட்டன.

'புயல்' நாடகம் 1947 ஆம் ஆண்டு அளவில் எழுதப்பட்டு, டி. கே. எஸ். சகோதரர்களால் 1948 ஆம் ஆண்டு அளவில் அரங்-கேற்றப்பட்டது.

'வாழ்வில் இன்பம்' நாடகம் 1955 ஆம் ஆண்டில் அரங்-கேறியபோதே நூலாகவும் வந்துவிட்டது.

'உயிர்ப்பலி' நாடகம் தாகூரின் நாடகம் ஒன்றின் (Sacrifice மொழி பெயர்ப்பாக 1961–1962 ஆம் ஆண்டு அளவில் எழுதப்-பட்டது. வானொலியில் முதலிலும் மேடைநாடகமாகப்பின்னரும் டி.கே.எஸ். சகோதரர்களால் நடிக்கப் பெற்றது.

வாழ்வில் இன்பம்

முதற்பதிப்பு: 1955
இரண்டாம் பதிப்பு: 1958
இப்பதிப்புகள் புதுக்கோட்டை, பழனி பிரசுர வெளியீடு.
மூன்றும் பதிப்பு: 1965
நான்காம் பதிப்பு: 1973
இப்பதிப்புகள் பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை: பாரி புத்தகப் பண்ணை; சென்னை-5.
பக்கங்கள்: 140. விலை: ரூ. 2-00

நாடகம் 24 காட்சிகளாக உள்ளது.

பேராசிரியர் சி. எஸ். கமலபதியின் முகவுரை.

"மகிழ்ச்சி ஒன்றையே அடித்தளமாகக் கொண்டு எழுதப் பெற்ற மங்களகரமான மன்றல் நாடகம். மணவிழாக்களில் மணமக்கள் முன்னிலையில் அரங்கேற்றப்படும் நாடகங்கள் ஆங்கில இலக்கியத்தில் இன்றும் இருக்கின்றன. யாவருடைய வாழ்விலும் இன்பம் தழைத்தோங்க வேண்டுமென்பதே இந்நாடக நூலின் லட்சியம்."

கலைஞர் டி.கே. ஷண்முகத்தின் முகவுரை:

"திருமண விழாவில் நடிப்பதற்கென்றே எழுதப்பட்டது இது. நாடக இலக்கணப்படி சிக்கல்கள், பின்னல்கள் எதுவும் இதில் இல்லை. இல்வாழ்வில் ஏற்படும் சிக்கல்களை அகற்றுவதே இதன் நோக்கம்."

அகிலனின் முன்னுரை:

"கருத்துக்களில் நூற்றுக்கு நூறு புதுமை இருக்க நியாயமில்லை; இருக்கவும் முடியாது. எழுத்திலும் முறையிலும் அமைப்பிலுந்தான் புதுமை. இது வாழ்வின் கதை. வாழ்வின் ஒரு பகுதியின் தொடக்கம் எப்படி இருக்கலாம் என்பதே இந்த வாழ்வில் இன்பம்."

சிறுவர் இலக்கியம்

சிறுவர் இலக்கியம்

அகிலனின் சிறுவர்களுக்கான படைப்புகள் நான்கு.

1. தங்க நகரம்

வெளியீடு : தமிழ்நிலையம் , புதுக்கோட்டை.
முதற்பதிப்பு : 1950
விலை: ரூ. 1-00

2. சிவப்பு விளக்கு

வெளியீடு : தமிழ்நிலையம், புதுக்கோட்டை.
முதற்பதிப்பு : 1955 விலை: ரூ. 1-00

3. கண்ணான கண்ணன்

வெளியீடு : தமிழ்நிலையம், புதுக்கோட்டை.
முதற்பதிப்பு : 1958 பக்கம் 36. விலை : ரூ. 1-00
நான்காம்பதிப்பு : 1970

* *1963 ஆம் ஆண்டு தமிழக அரசின் கல்வித்துறை இந்நூலுக்குப் பரிசளித்தது.*

4. நல்ல பையன்

வெளியீடு : தமிழ்நிலையம் , புதுக்கோட்டை.
முதற்பதிப்பு : 1958 பக்கம்: 32 விலை: ரூ. 0-75
மூன்றாம்பதிப்பு : 1967

மொழி பெயர்ப்புகள்

1. அகிலன் மொழிபெயர்த்தவை :

2. பிறமொழிகளில் அகிலன் :

அகிலன் மொழிபெயர்த்தவை

பிறமொழிகளிலிருந்து சிறுகதை, நாடகம் ஆகியவற்றை மொழிபெயர்த்துத் தமிழில் முறையே சிறுகதைகளாகவும் நாவலாகவும் தந்தார் அகிலன். இங்கு அவ்வாறு வந்தவற்றைக் காண்போம்.

நூலாக வந்தவை மூன்று. அவை : 1) தாகம்;
2) எழுதாத கதை;
3) முழு நிலவு.

1. தாகம்

ஆசிரியர் : ஆஸ்கார் ஒயில்ட்
பெண்ணுடம், புதுமைப்பிரசுர வெளியீடு.
முதற்பதிப்பு : 1953
பக்கங்கள் : 78. விலை: ரு. 1-4-0 (1-25)

V. RM. செட்டியாரின் முன்னுரை :

"பெண் என்றால் என்ன? பெண்மை என்றால் என்ன? இதை நமது நண்பர் 'அகிலன்' நன்றாய் அறிந்தவர். ஆஸ்கார் ஒயில்டு பெண் உலகத்தை நன்றாய் உணர்ந்தவர். இந்த நாவலே காதல் உலகம், ஆண்-பெண் உலகம்! இந்த நாவல், ஒரு காதல் நறுமலர்."

'கதையின் கதை' என்னும் அகிலனின் முன்னுரை :

"கலைஞர் ஒயில்டின் சொல்லழகு பிரமிக்கத்தக்கது. 'சலோமி' நாடகத்தைத் தமிழில் நாவலாக்கி இருக்கிறேன். மூல நாடகத்தின் சொல்லமைப்புக்களைக் கூடிய வரையில் அப்படியே கொடுத்திருக்கிறேன்."

'தாகமும் சாந்தியும்' என்ற தலைப்பில் வீ. இராமசுவாமி-யின் முன்னுரை :

"ஆங்கிலத்தில் ஆஸ்கார் ஒயில்ட் அழகு தவழும் நாடகமாகத் தந்தார்; தமது துள்ளும் தமிழ் நடையில் தமிழ்த்தேனில் தோய்த்துள்ளார்கள் திரு. அகிலன் அவர்கள்."

2. எழுதாத கதை

முதற்பதிப்பு: 1954
திருச்சி, புத்தர்பண்ணை வெளியீடு.
பக்கங்கள்: 120. விலை: ரூ. 1-4-0 (1-25)
அகிலனின் முகவுரை:

"இதிலுள்ள கதைகளில் முதல் மூன்றும் 'காதல்' இதழில் வந்தவை. 'விஷகன்னிகை' என்ற ஒன்று மட்டும் 1948இல் தனிநூலாக வந்தது."

இத்தொகுப்பில் நான்கு சிறுகதைகள் உள்ளன.

	கதை	மொழி	ஆசிரியர்
1)	எழுதாத கதை	... ஆங்கிலம்	... ஜாப்ரேமாஸ்
2)	கூத்துக்காரி	... ருஷ்யன்	... ஆண்டன் செகாவ்
3)	கடவுளும் காதலும்	... ஜெர்மன்	... ரிச்சர்ட் வாக்மன்
4)	விஷ கன்னிகை	... ஆங்கிலம்	... (பெயர் தெரியவில்லை)

3. முழு நிலவு

ஆசிரியர்: மாபசான்
முதற்பதிப்பு: 1955
இரண்டாம்பதிப்பு: 1957
புதுக்கோட்டை, பழனி பிரசுர வெளியீடு.
பக்கங்கள்: 108. விலை: ரூ. 1-50

'இதிலுள்ள ஒன்பது சிறு கதைகளில் இரண்டு 'கலைக்கதிர்', 'மகிழ்ச்சி' இதழ் பொங்கல் மலர்களில் வந்தவை; ஏனையவை

இந்நூலிற்காக மொழிபெயர்க்கப்பட்டவை' என்று முன்னுரையில் அகிலன் கூறியுள்ளார்.

இதில் உள்ள கதைகள்:

1. முழு நிலவு
2. அழகுப் பைத்தியம்
3. கலைஞனின் மனைவி
4. கிராமத்தில்...
5. செத்துப்போனவள்
6. போரில் நடந்தது
7. மன்னிப்பு
8. இருட்டறை
9. லட்சியமும் வாழ்வும்

பிறமொழிகளில் அகிலன்

அகிலனின் படைப்புக்கள் பிற இந்திய மொழிகளிலும் அயல்நாட்டு மொழிகளிலும் மொழிபெயர்ப்பாகி நூல்வடிவிலும் இதழ்களிலும் வந்துள்ளன. அந்த விவரங்களை இங்குக் காணலாம்.

I. சிறுகதைகள்

நூல்கள் :

1. இந்தி

1. 'கோபுர் கா தீப்' என்னும் பெயரில் கீழ்க்காணும் பன்னிரு சிறுகதைகளும் தொகுப்பாக வெளிவந்துள்ளன. திருமதி சரஸ்வதி ராம்னாத் இதன் ஆசிரியர். 1972-1973 ஆம் ஆண்டில் வெளிவந்த, இந்திமொழி பேசாத பிற மாநிலங்களில் வாழும் எழுத்தாளர்கள் இந்தியில் எழுதிய நூல்களுக்கான மத்திய அரசின் இரண்டாம் பரிசை இந்நூலிற்காக, இம்மொழிபெயர்ப்பாளர் பெற்றுள்ளார்.

அடங்கியுள்ள கதைகள்

	(இந்திப்பெயர்)	—	(தமிழ்ப்பெயர்)
1.	ஜடமூர்த்தி	...	நட்டகல்
2.	நஸா அவுர் ரிஸ்தா	...	வெறியும் முறையும்
3.	கபிலா அவுர் காய்	...	கறவையும் காளையும்
4.	பலே புரே	...	நல்லவர் கெட்டவர்
5.	க்ஷமா கரோ	...	மனமும் மானமும்
6.	இன்சான்	...	மனிதர்கள்
7.	படிமச்லி சோடிமச்லி	...	பெரியமீன்
8.	தின்--ராத்	...	இரவு--பகல்
9.	லாஜ்	...	வெட்கம்

10.	மந்திர் கா தீப்	...	கோயில் விளக்கு
11.	தூபான்	...	புயல்
12.	தீன் அவ்சர்	...	மூன்று வேளை

2. 'தமிழ் கீ பிரதிநிதி கஹானியாங்' என்ற பெயரில் தில்லி தட்சிண் பாரத் ஹிந்தி பிரச்சாரச் சபை 1965-ஆம் ஆண்டு வெளியிட்ட நூலில், திரு. ஜி. சீனிவாசன் என்பவரால் 'சகோதரர் அன்றோ?' சிறுகதை 'பஞ்சாபி கௌன்? மதருஸி கௌன்?' என்னும் பெயரில் மொழிபெயர்ப்பாகியுள்ளது.

3. மத்திய அரசின் செய்தித் தொடர்பு தகவல் ஒலிபரப்பு அமைச்சு [Ministry of Information and Broadcasting - Govt. of India] வெளியிட்ட 'ஆகாஷ்வாணி கதாபாரதி' நூலில் 'காட்டு-மிராண்டிகள்' என்னும் சிறுகதை 'பூடே கி முஸ்கான்' என்னும் பெயரில் வெளிவந்துள்ளது. இக்கதை இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு வானொலி வாயிலாக ஒலி-பரப்பானது.

4. 'தமிழ் கீ சர்வசிரேஸ்ட கஹானியாங்' (தமிழில் உள்ள மிகச் சிறந்த கதைகள்) என்ற தலைப்பில் 'புதுதில்லி பாரதி சாகித்ய ஸதன்' வெளியிட்ட நூலில், 'குழந்தை சிரித்தது' என்னும் கதை 'பச்சா முஸ்கரா உடா' என்னும் பெயரில் வெளியானது.

5. 'பாரத் கி ஆதுாளிக் சிரேஷ்ட கஹானியாங்' என்னும் நூலில் திரு. பைரவ பிரசாத் குப்தா அவர்களால் 'மூன்றுவேளை' சிறுகதை மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்தது.

2. மராத்தி

'கதாஜலி' என்னும் நூலில் 'கங்காஸ்நானம்' சிறுகதை மராத்தி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு, பிரதீபா புஸ்தகாலயா-பூனா-2 என்னும் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.

3. ஆங்கிலம்

1. மத்திய அரசின் செய்தித்தொடர்பு ஒலிபரப்பு அமைச்சின் புத்தகவெளியீட்டுத்துறை 1968 ஆம் ஆண்டு நவம்பரில் வெளியிட்ட [Published by Publication Division ... Information and Broadcasting Ministry - Govt. of India - November 1968] '*Fragrant Flowers*' என்னும் நூலில் '**நாதனுள்ளிருக்கையில்**' என்னும் சிறுகதை '*When God within Our Bosom Dwells*' என்னும் பெயரில் மொழிபெயர்க்கப் பெற்று [பக்கம் 157 - 167] வெளிவந்துள்ளது.

2. '*Plough and Stars*' என்னும் நூலில் [Published by Asia Publishing House, Bombay] '**மனிதர்கள்**' என்னும் கதை "*Oh! The Human*" என்னும் பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு உள்ளது.

4. ஜெர்மன்

'**மூன்று வேளை**' என்னும் சிறுகதை மேற்கு ஜெர்மனியில் மொழிபெயர்க்கப்பட்டுத் தனி நூலாக வெளியிடப்பட்டது. டாக்டர் பெட்ரம் பெர்பி (Dr. Betram Vervy) என்பவர் மொழிபெயர்ப்பாசிரியர்.

மாக்ஸ் முல்லர் பவன் (சென்னை) நிறுவனம் 1965 ஆம் ஆண்டில், ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்ப்பான '**மூன்று வேளை**' சிறுகதையை 21 பக்கங்கள் உடைய ஒரு சிறு நூலாக, ஒரு பக்கம் கதையைத் தமிழ்வடிவத்திலும் மறுபக்கம் (எதிர்ப் பக்கம்) அதன் ஜெர்மனி மொழிபெயர்ப்புமாக வெளியிட்டது.

ஜெர்மனியில் 'Anthology on Indian Writers' என்னும் நூலில் [SINN UND FORM – East Germany] '**மனிதர்கள்**' என்னும் சிறுகதை '*Menschen*' என்ற பெயரில் மொழிபெயர்ப்பாகி வெளிவந்துள்ளது. டாக்டர்ஹெல்கா ஆன்டன் (Dr. Helga Anton) என்பவர் மொழிபெயர்த்தார்.

இதழ்களில் வந்தவை

1. இந்தி

சிறுகதை	மொழிபெயர்ப்புப் பெயர்	இதழ்
1. பெண்பாவம் ...	பாப் ...	'நயிதுனியா' --ஜனவரி 1954
2. சகோதரர் அன்றோ? ...	பஞ்சாபி கௌன்? மதருஸி கௌன்? ...	'சாரிகா'
3. குழந்தை சிரித்தது ...	பச்சா முஸ்கரா உடா ...	'ஆஜ்கல்'
4. கறவையும் காளையும் ...	கபிலா ('கபிலா அவுர் காய்' என்ற மற்றொன்றும் உள்ளது) ...	'நவஜீவன்'
5. காட்டு மிராண்டிகள் ...	நஹி பூலேங்கே ('பூடே கி முஸ்கான்' என்ற மற்றொன்றும் உள்ளது) ...	நவஜீவன்
6. நட்டகல் ...	பாஷான் (விஜயலட்சுமிகௌளர் மொழிபெயர்ப்பு) ...	நவஜீவன்
7. நட்டகல் ...	ஜடமூர்த்தி (சரஸ்வதி ராம்னத் மொழிபெயர்ப்பு) ...	சாரிகா
8. கோயில் விளக்கு ...	மந்திர் கா தீப் ...	யுகபிரபாத் 16-6-1958
9. பெரியமீன் ...	படீமச்லி ('படீ மச்லி சோடி மச்லி' என்ற மற்றொன்றும் உள்ளது) ..	தட்சிண் பாரதி

Dr. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI KAMARAJ UNIVERSITY

2. கன்னடம்

சிறுகதை		இதழ்		ஆண்டு
1) கோயில் விளக்கு	...	கதேகாரா	...	டிசம்பர் 1956
2) மனைவியும் மைத்துனியும்	...	சித்திர குப்தா	...	13-1-1957
3) கங்கா ஸ்நானம்	...	நகுவா-னந்தா	...	பிப்ரவரி 1957
4) குழந்தை சிரித்தது	...	விஜயமாலா	...	அக்டோபர் 1957
5) காசும் பாசமும்	...	கதேகாரா	...	ஜுலை 1958
6) காசுமரம்	...	சம்யுக்த கர்னாடகா	...	24-1-1960
7) வெள்ளம் வந்தது	...	பிரஜா வாணி	...	13-7-1961
8) பிள்ளைவரம்	...	சுதா	...	5-6-1966
9) கரும்பு தின்னக் கூலி	...	சுதா	...	11-12-1966
10) புகழ்	...	மயூரா	...	டிசம்பர் 1968
11) கொஞ்சம் லஞ்சம்	...	மயூரா	...	செப்டம்பர் 1972
12) மனிதர்கள்	...	மயூரா	...	ஜுலை 1973

3. குஜராத்தி

1. 'கறவையும் காளையும்' சிறுகதையைக் 'கபிலா' என்னும் பெயரில் 'சாந்தினி' இதழில் பவானிதாஸ் ஜே. வோரா மொழி-பெயர்த்து வெளியிட்டார்.

2. 'சகோதரர் அன்றோ?' சிறுகதை ஏ. பி. சேத் என்பவ-ரால் இந்திமொழி வாயிலாக மொழிபெயர்க்கப்பட்டது.

4. தெலுங்கு

'குலதெய்வம்' சிறுகதை மொழிபெயர்ப்பானது.

5. மலையாளம்

	சிறுகதை		இதழ்		ஆண்டு
1.	வெள்ளம் வந்தது	...	ஜயகேரளம்	...	30-12-1961
2.	வெள்ளம் வந்தது	...	மாத்ருபூமி	...	23-1-1966
3.	மழைக்கு ஒதுங்கிய இடத்தில் ..	...	கேரளகௌமுதி (ஆண்டு மலர்)	...	1971

*'பூச்சாண்டி' சிறுகதை சாஹித்ய அகாதெமியால் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது.

6. உருது

	சிறுகதை		இதழ்		ஆண்டு
1.	புயல்	...	ஷப்கூன்	...	6-11-1966
2.	மனிதர்கள்	...	ஷப்கூன்	...	10-3-1967

[மொழிபெயர்ப்பாளர் : திரு. ஹையத் பாஷா]

7. ஆங்கிலம்

	சிறுகதை		மொழிபெயர்ப்பு		இதழ்
1.	நாதனுள்ளிருக்கையில்	...	When God within our Bosom Dwells	...	Illustrated Weekly of India

[மொழிபெயர்ப்பாளர் : திருமதி வேஸ்தா ஹகீம்]

2.	நினைப்பு	... Points of View	... Illustrated Weekly of India 1.10.1961. & Tamil Lit. Vol. 64.

[மொழி பெயர்ப்பாளர்: பேராசிரியர். ஸி. எஸ். கமலபதி]

3.	மூன்று வேளை	... For the third time	... Mirror March'65.

[மொழிபெயர்ப்பாளர் : திரு. ஹென்றி தியாகராஜ்]

4.	பூச்சாண்டி	— The Ghost	— Caravan November 1958

[மொழிபெயர்ப்பாளர் : திரு. வி. எஸ். மணியம்]

5.	கங்காஸ்நானம்	... The Pilgrimage	... Caravan

[மொழி பெயர்ப்பாளர் : வி. எஸ். மணியம்]

6.	பிள்ளைவரம்	... Oh! For a child	... ,, Sep. 1962

[மொழிபெயர்ப்பாளர் : திருமதி கோகிலம் சுப்பையா]

7.	சகோதரர் அன்றோ ?...	My brother My very Own	... Caravan Sep. 1956

[மொழிபெயர்ப்பாளர் : திருமதி வேஸ்தாஹகீம்]

8.	இரவு - பகல்	... Night and Day	... Thought 7. 6. 1958

[மொழிபெயர்ப்பாளர் : திரு. வி. எஸ். மணியம்]

9.	வெட்கம்	... Shame	... Thought 3. 3. 1958

[மொழிபெயர்ப்பாளர் : திரு. வி. எஸ். மணியம்]

10.	நட்டகல்	... The Stone	... Illustrated Weekly of India 22. 5. 1960

[மொழிபெயர்ப்பாளர் : திரு. பி. சி. கணேசன்]

11. மனிதர்கள்	...	Oh! the Human	... Caravan
[மொழி பெயர்ப்பாளர் : திரு. வி. எஸ். மணியம்]			
12. வெள்ளம் வந்தது	...	The Flood	... Social Welfare
[மொழி பெயர்ப்பாளர் : திரு ரவீந்திரன் நாயர்]			
13 ரத்தக் கலப்பு	...	True to their Blood	... Railcoach Sep. 1968

8. ருஷ்ய மொழி

ருஷ்ய மொழியில், '**கோயில் விளக்கு**', '**மூன்று வேளை**' என்ற இரு சிறுகதைகளும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தமிழ் எழுத்தாளர்கள் சிலரின் கதைகள் சிலவற்றை 1971 ஆம் ஆண்டில் ருஷ்ய மொழியில் மொழிபெயர்த்துக் '**கோயில் விளக்கு**' என்ற பெயரில் வெளியிட்டனர். அத்தொகுப்பில் மேற்கண்ட இரண்டும் உள்ளன.

II. நாவல்கள்

1. பெண்

இந்தி, கன்னடம், மலையாளம், வங்காளி ஆகிய நான்கு மொழிகளில் மொழிபெயர்ப்பாகி நூலாக வந்துள்ளது, இந்நாவல்.

2. சிநேகிதி

கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மூன்று மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு நூலாக வந்துள்ளது, இந்நாவல்.

3. பொன்மலர்

கன்னடம், மலையாளம் ஆகிய இரு மொழிகளில் மொழி பெயர்ப்பானது, இந்நாவல்.

குஜராத்தியிலும் தற்போது மொழிபெயர்ப்பாகி வருகிறது.

4. நெஞ்சின் அலைகள்

கன்னடத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 1960 ஆம் ஆண்டு 'பிரஜாமாதா' இதழில் தொடராக வாரந்தோறும் வெளியிடப்பட்டு, பின்னர் நூலாகவும் வந்த சிறப்புடையது இந்நாவல்.

5. பாவை விளக்கு

இந்தியில் இந்நாவலைச் சுருங்கிய வடிவில் மொழிபெயர்த்தார் திருமதி சரஸ்வதி ராம்னத். அது 'நவநீத்' இதழில் வெளியானது.

கன்னடத்தில் திரு. மத்தூர் கிருஷ்ணமூர்த்தி என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டுக் **'கர்மவீர்'** என்னும் வார இதழில் தொடராக வந்தது. **'தீபதாரிணி'** என்னும் பெயரில் இரண்டு பாகங்களை உடைய நூலாக அது, பின்னர் வெளிவந்தது.

6. சித்திரப்பாவை

மத்திய அரசின் தேசீய புத்தக நிறுவனத்தினரால் இந்திய மொழிகள் அனைத்திலும் இந்நாவல் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது.

கட்டுரைகள்

கட்டுரை நூல்கள்

சிறுகதை, நாவல், நாடகம், சிறுவர் இலக்கியம் எழுதிய அகிலன் சிறந்த கட்டுரையாசிரியராகவும் திகழ்கின்றார். அவ்வப்போது பல்வேறு பொருள் குறித்து எழுதிய பல கட்டுரைகளில் நூலாக வந்தவை மூன்று. அவை: 1) கலையும் வயிறும்; 2) இளைஞருக்கு; 3) கதைக்கலை. இம்மூன்று நூல்கள் பற்றி இங்குக் காண்போம்.

1. கலையும் வயிறும்

முதற் பதிப்பு: 1956
பெண்ணாடம், புதுமைப்பிரசுர வெளியீடு.
பக்கங்கள்: 119. விலை: ரு. 1-8-0 [1-50]
அகிலனின் முன்னுரை:

"இந்தக் கட்டுரைகள் சுமார் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து ஐந்தாறு மாதங்களுக்கு முன்புவரை தனித்தனியே பத்திரிகைகளுக்காக எழுதப்பெற்றவை. 'கலையும் வயிறும்' என்ற முதல் கட்டுரை வந்த பிறகு இப்போது பத்திரிகையாளர்களின் நிலை எவ்வளவோ வளர்ந்திருக்கிறது. இன்னும் எழுத்தாளனை உயர்விக்க வேண்டுமென்பதே என் ஆவல். இளம் எழுத்தாள நண்பர்களுக்கும், எழுத்தையும் எழுத்தாளனையும் தெரிந்து கொள்ள விரும்புகிறவர்களுக்கும் என் அநுபவங்கள் ஓரளவு பயன் தரும் என்ற நம்பிக்கை."

9 கட்டுரைகள்:

1. கலையும் வயிறும்
2. நாடக இலக்கியம்
3. எழுதுவது எப்படி?
4. சிறுகதை எழுத...
5. தமிழ்நாவல்

6. அழகின் அடிமைகள்
7. காதல் வாழ்வில் உலகப் பெரியார்
8. மதிப்புரைக் கலை
9. என்னைப்பற்றி

2. இளைஞருக்கு

முதற்பதிப்பு : 1962
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி வெளியீடு.
பக்கங்கள் : 33. விலை : ரூ. 0-12 பைசா.
அகிலனின் முன்னுரை :

"விடுதலைப் போராட்டத் தூண்டுதலில் எழுத்தாளனாக உருவாகி நாவல்களிலும் கதைகளிலும் அன்றையத்தமிழகத்தைச்-சுட்டியுள்ளேன். விடுதலை கிடைத்து விட்டது. இன்றைக்கு நாடெங்கும் அறியாமைக்கும் வறுமைக்கும் எதிராக ஓர் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இந்தப் போராட்ட-மாகிய பெருங்கடல் அலைகளின் ஒரு சிறுதுளியையே இந்தச் சிறு நூலில் கொடுத்திருக்கிறேன்."

4 கட்டுரைகள்:

1. புதுவாழ்வுப் போராட்டம்
2. அன்றும் - இன்றும்
3. கிண்டியில் ஓர் தொழிற்பண்ணை
4. உடல் உழைப்பும் - படிப்பும்

3. கதைக்கலை

முதற்பதிப்பு : 1972
பொற்கொடி வெளியீடு.
விற்பனை உரிமை : பாரி புத்தகப்பண்ணை, சென்னை-5.
பக்கங்கள் : 151. விலை : ரூ. 3-00

இதிலுள்ள கட்டுரைகள் பல வெவ்வேறு இதழ்களிலும் மலர்களிலும் நூல்களிலும் வெளியானவை. இயன்றவரை அவ்-விரைங்களைத் தொகுத்து அளித்துள்ளேன்.

14 கட்டுரைகள்:

1. கதைக்கலை
[தீபம்-1975 ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர்.]

2. சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்
[1972இல் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட புகுமுக வகுப்பிற்கான சிறுகதைத் தொகுப்பு நூலில் வந்தது.]

3. சிறுகதை வளர்ச்சிக்கான வழிகள்
[1971-இல் முதற்பதிப்பாக வந்த சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடான 'வளரும் தமிழ் இலக்கியம்', நூலில் பக்கம் 86 முதல் 94 முடிய உள்ளது].

4. இருவகைச் சிறுகதைகள்
[சுதேசமித்திரன் தீபாவளி மலர் 1957]

5. புதுமைப்பித்தனின் ஒருகதை
[புதுமைபித்தன் நினைவுமலர்]

6. முதல் தமிழ்நாவல்
[ஆனந்தவிகடன் தீபாவளிமலர் 1957]

7. நாவல் பிறக்கிறது

8. நாவல் எழுதும் அனுபவம்

9. சமுதாயத்துக்குச் செய்தி
[முற்கூறிய 'வளரும் தமிழ் இலக்கியம்' நூலில் பக்கம் 61 முதல் 69 முடிய உள்ள, 'எனது நாவல்களில் சமுதாயத்துக்குச் செய்தி']

10. தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவு
[1972 இல் முதற்பதிப்பாக வந்த சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்க வெளியீடான 'இன்றையத் தமிழ் இலக்கியத்தில் மனிதன்' நூலில் பக்கம் 22 முதல் 34 முடிய உள்ளது]

11. உரைநடை படைப்பிலக்கியத்தில் நடை அழகு
[சென்னை, உலகத்தமிழாராய்ச்சிமன்றம் 1971இல் வெளியிட்ட 'இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு

நிகழ்ச்சிகள் மூன்றுவது தொகுதி'யில் பக்கம் 53 முதல் 62 முடிய, 'தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் உரைநடை' என்றுள்ளது]

12. எழுத்தாளர் கார்க்கி

13. லெனினும் தமிழ் உரைநடை இலக்கியமும்
[1970ஆம் ஆண்டு சாகித்ய அகாதெமி பெங்களூரில் நடத்திய 'லெனினும் இந்திய இலக்கியமும்' என்னும் கருத்தரங்கில் படிக்கப்பெற்ற கட்டுரை]

14. எழுத்துலகுக்கு ஓர் அறை கூவல்
[கலைமகள் 1971]

என் முதல் கதை

கட்டுரையாசிரியர் : அகிலன்

'புனைபெயரும் முதல் கதையும்' என்னும் நூலில் இக் கட்டுரை [பக்கம் 49 முதல் 52 முடிய] இடம் பெற்றுள்ளது. பூவை. எஸ். ஆறுமுகம் அவர்களால் தொகுக்கப்பட்ட இந்நூல் 1967இல் மதுரை மீனாட்சி புத்தக நிலையத்தால் வெளியிடப்பட்டது. 90 பக்கங்களை உடைய இந்நூலின் விலை : ரூ. 1 -75.

"பதினெட்டு வருடங்களுக்கு முன் நான் ஒன்பதாவது வகுப்பில் படிக்கும் போது எழுதிய முதல் கதை புதுக்கோட்டை மன்னர் கல்லூரி மலரில் வெளியானது. 'ஏழையின் கதை' என்னும் பெயரை என் தமிழாசிரியர் 'மிடியால் மடிதல்' என்று மாற்றி எழுதினர். முழுவதும் கற்பனைக் கதை என்று நான் அதைச் சொல்ல முடியாது. அன்று நான் எழுதிய முதற்கதையும் சரி, இனி நான் எழுதப் போகும் கடைசிக்கதையும் சரி, உண்மைகளை அடிப்படையாகக் கொண்டவைகளே. கற்பனைப்பூச்சில் என் கலை உணர்ச்சியைக் காணலாம். ஆனுல் கருத்தெல்லாம் நான் காணும் உண்மைக்கே. ஒரு புறம் அழகும் வனப்பும் நிறைந்த இயற்கை உலகம்; மற்ருெரு புறம் வேற்றுமையும் வெறுப்பும்

நிறைந்த மனிதர்கள் — இதையே என் கதைக் கருத்தென்று சொல்லலாம். பள்ளியில் என் சிறுகதையைப் படித்தவர்கள் எப்படி மதித்தார்களோ தெரியாது. ஆனால் நிச்சயம் அதை எழுதிய சிறுவனுக்கு ... அப்போது எனக்குப் பதினாறு வயது ... தீமையை எதிர்க்கத்துடிக்கும் ஒரு நெஞ்சு இருக்கிறது என்பதை மட்டுமாவது உணர்ந்திருப்பார்கள். இந்தச் சிறுகதையைத்தவிர இன்னொரு கதையையும் என்னுடைய முதல்கதை என்று சொல்லுகிறவர்கள் உண்டு. 'கலைமக'ளில் முதன் முதலில் வெளியான '**காசு மரம்**' கதையே அது. 'கலைமக'ளில் இந்தக் 'காசு மரம்' வெளியான பிறகு தான் சிறுகதை எழுத்தாளன் என்ற முறையில் நான் தமிழகத்திற்கும் அறிமுகம் செய்யப்பெற்றேன். இதையும் என் முதல் சிறுகதை என்று சொல்லலாமல்லவா?''

அகிலன் எழுதிய கட்டுரைகள்

சிறுகதை, நாவல், நாடகம், திறனாய்வு, சிறுவர் இலக்கியம் போன்ற பல்வேறு படைப்பிலக்கியங்களைப் படைத்துத் தந்துள்ள அகிலன், சிறந்த கட்டுரைகள் பலவற்றையும் எழுதியுள்ளார். கதை இலக்கியம், கதை இலக்கிய ஆசிரியர்கள், சிறுகதை, நாவலாசிரியர், உரைநடை, கவிதையாசிரியர்கள், மொழி, கலை, திரைப்படம், கிராமியக் கலை, சித்திரம், நாட்டுப்பற்று, கல்வி, சமூகச் சிந்தனைகள், தலைவர்கள் போன்ற பல்வேறு பொருள்களில் அறுபதுக்கும் மேற்பட்ட கட்டுரைகள் எழுதியுள்ளார். ஏற்கனவே நூல்வடிவில் வெளிவந்த கட்டுரை நூல்களான '**கலையும் வயிறும்**', '**கதைக் கலை**' என்பவற்றையும் இளைஞர்களுக்காக எழுதிய '**இளைஞருக்கு**' என்பதையும் தவிர்த்து ஏனைய, நூல்வடிவில் வராத கட்டுரைகளே இவண் பேசப்படுகின்றன. இயன்றவரை ஒவ்வொரு கட்டுரைக்கும் வெளியான இதழின் பெயர்,வெளியான காலம் குறிக்கப்பட்டு, கட்டுரையின் சுருங்கிய வடிவம் தரப்படுகின்றது.

I. இலக்கியம்

கதை இலக்கியம்

1. போர்க்காலக் கதைகள்

"கதை எழுதுபவர்களும் படிப்பவர்களும் இன்று பெருகியுள்ளார்கள். 'போர்க்காலக் கதைகள்' என்பன போரை மையமாக வைத்து எழுதப்படுவன. இருபெரும் உலகப்போர்களால் பாதிக்கப்பட்ட மானுடச் சமுதாயம் பற்றிய கதைகள் மேனாட்டில் ஏராளம். போருக்குமுன் உள்ளநிலை, மக்களிடையே விழிப்புணர்வு, ஒற்றுமை, ஆயத்தம் இவை பற்றி அக்கதை பேசலாம். நம்நாட்டில் பலர் போர்க்களம் பேசும் நெடுங்கதை எழுதியுள்ளனர். பண்டை இலக்கியம் காட்டும் போர்க்களக்காட்சிகளில் இருந்து இற்றைப் போர்க்காட்சி மாறுபட்டுள்ள முறை, மண்ணின் எளிய மக்கள் கூடப் பாதிக்கப்படும் கொடுமை பற்றி எழுதுவர்."

2. கதைகளில் காதல்

('காதல்' 1957 ஆண்டு மலர்)

"மனித வாழ்வின் சரித்திரத்தை ஆய்ந்தால் அது அடிப்படையில் காதல் கதை என்று கூறுமாறு உள்ளது. கலையின் ஆணிவேர் காதல். ஃபிராய்டின் அடிப்படையில் பல காதல் கதை மேனாட்டில் வருகின்றன. பழங்காலத்தில் இங்கும் காதல்பாட்டுக்களே அதிகம். இலக்கியம் காட்டும் காதலை, மணத்திற்கு முந்திய காதல், மணத்திற்குப்பின் தொட்டு இறுதிவரையிலான காதல் என்று பகுக்கலாம். அழகும் இளமையும் வாய்ந்த முந்தையதே பலரால் பாடப்பட்டது. துன்ப முடிவுடனே பல காதல்கதைகள் எழுதப்பட்டன. எப்படி வறுமையைப் போக்கப் பணம் தேவையோ, அப்படியே சாதி வேறுபாட்டைப் போக்கக் காதல் வேண்டும் .காதல் பற்றி எழுத வேண்டும்."

3. சூழ்நிலை

('கதிரொளி' 1957 ஆகஸ்டு)

"வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளையும் படம் பிடித்துக்காட்டி மக்களை நன்கு உருவாக்கும் பணி எழுத்தாளனுடையது. பண்டைய புலவன் போல, மனித சமூகத்தில் ஓர் அங்கமான அவன் அதனை உருவாக்குபவன். அவன் எழுத்தை அரசும், பத்திரிகையும், வானொலியும், திரைப்படமும் மதிக்காதபோது அது சிறக்காது. இவையனைத்தும் இணைந்து இயங்கினால் தான் இளைய சமுதாயத்திற்கு எழுத்தாளன் பணி எட்டும். இன்றைய எழுத்தாளர்கள் எழுத்தை மாணவர்களுக்குப் பாடமாகக்கல்லூரியிலும் பள்ளியிலும் வைத்தல் வேண்டும். பழம்பெருமை பேசுவதுடன் நில்லாது, உயிருடன் இலங்கும் எழுத்தை மதிப்பதும், எழுத்தாளன், பழம்புலவன் எழுத்தை மதித்துப் போற்றுதலும் நடைபெற்றால் எழுத்துப்பணி இன்னும் சிறக்கும்."

4. எது நல்ல கதை?

(1958)

"இன்று கதை படிக்கும் ஆர்வம் பெருகியுள்ளது. வாசகர்களிடம் அவை பெற்று வரும் செல்வாக்கிற்கேற்ப, இதழ்களும் கதைகளை அதிகம் வெளியிடுகின்றன. தரத்தைப் பொறுத்துக் கதைகளை மூவகைப்படுத்தலாம். ¶ படித்து முடித்த பின்னரும் படிப்பவர் நெஞ்சில் இருந்து மீண்டும் மீண்டும் அதுபற்றி எண்ணச் சொல்வது சிறந்தகதை. ¶ படிக்கும்போது, வாசகர் மனத்தில் ஒருவித (நல்) உணர்வை ஏற்படுத்தி விடுவது இரண்டாம்வகை. பெரும்பாலான பத்திரிகைக்கதைகளை இதில் அடக்கலாம். ¶படிக்கும்போதே, வேண்டா வெறுப்பாகப் படிக்கச்செய்யுமியல்புடையவை மூன்றும் வகை. ¶ இவ்வகைக் கதைகளில் சிறுகதைக்குரிய இலக்கணம், தரம் இவை எதுவுமிராது. ஒருகதையை வைத்து எந்த ஆசிரியனையும் முடிவு செய்ய முடியாது. பலவற்றைப் படித்தே அவனைப்பற்றிய முடிவிற்கு வருதல் வேண்டும். மூன்றும் வகைக் கதைகளையே எப்போதும் எழுதுபவனை விட்டுவிடலாம். இயந்திரமயமான உலகில் முதல்வகைக் கதைகளைக்-

காண்பது சற்று அபூர்வம்தான். படிப்பவர்களுக்கும் கதைஎழுதுபவனுக்கிருப்பது போலச் சில கடமைகள் உண்டு. கதைகளை மீண்டும் மீண்டும் படித்து ஆராய்ந்தால்தான் படைப்பாளன் சிறக்க முடியும். பல நூற்றாண்டிற்கு முன் எழுதிய பாடல் நிலை பெற்றுள்ளதுபோல, அப்பரம்பரையில் வந்த எழுத்தாளன் படைப்பும் எதிர்காலத்தில் சிறக்கும்.''

5, கதைக்குப் பஞ்சமா?

('கலைரசிகன்' - 25-6-73)

''இலக்கியத்தரமான கதை என்பது வாழ்வின் உயர் உணர்ச்சிகளையும் ஆழ்ந்த சிந்தனைகளையும் உடையது. அவை திரைக்கு வரவேண்டுமே அன்றி, திரைக்கதை இலக்கியமாகாது. மேனாட்டில் இலக்கியக் கதைகளை மீண்டும் மீண்டும் படமாக்குவர். இலக்கியக்கதை தன் நிலையில் தாழாதவாறு படமாக்கப்படல் வேண்டும். தமிழ் வாசகர்கள் பிறமொழித்திரைக்காட்சிகளைக் கண்டு, அதுபோல் கதைகள் வரவேண்டுமென விரும்புகின்றனர். எதையும் எளியதன்மையில் செய்து, உழைப்பே இல்லாது, பொருள் குவிக்கும் போக்கு பெருகி வருகின்றது. தரம் வாய்ந்த கதையாசிரியர்கள் மூலம் வாழ்க்கை அனுபவமிக்க கதைகள் உருவாக முடியும். எனவே, தரமான கதைகள் பெருக வேண்டும்.''

I. 2. கதை இலக்கிய ஆசிரியர்

1) காலத்தை உருவாக்கிய கலைஞர்

['கல்கி' நினைவுமலர்— 3-12-1967]

"அடுப்படிப் பெண்ணைப் படிக்கவைத்ததுடன், ஒரு சிலரிடம் மட்டும் குவிந்திருந்த இசை, கலை, இலக்கிய, அரசியல் மற்றும் பிறகலைகளினுலான அறிவைப் பலருக்கும் பரப்பினுர். பள்ளிகள் தோன்றிச் சாதிக்காததைத் தனியாகக் கல்கி சாதித்தார். புத்தகங்களை நாடிப்போய்ப் படிக்க வைத்தார். திரு.வி.க., பாரதி போலக் கல்கியும் தம் இனிய, எளிய நடையால் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தியதுடன், லட்சக்கணக்கான வாசகர்களை உருவாக்கினுர். அரசியல், பிரயாணம், இலக்கியம், இசை, நாடகம், நாட்டியம், விஞ்ஞானம்,விமர்சனம் முதலிய பலதுறைகளிலும் தம் எழுத்தால் சாதனைபுரிந்து அவற்றை வளர்த்த கல்கி, மக்கள் ரசனையைக் கீழ் நிலைக்கு இட்டுச் செல்லாது 'புதிய கால'த்தை உருவாக்கினுர்."

2) விழித்தெழுவோம்

['தமிழ்உறவு' முதல்இதழ்- 15-11-1970]

"'நமக்குத் தொழில் எழுதல், நாட்டுக்குழைத்தல்' என்று நாம் வாழவேண்டும். வலிமைவாய்ந்த சக்தியாகத் திகழவேண்டிய நாம் தவறிவிட்டோம். பிறரால் புறக்கணிக்கப்படாத ஓர் ஆக்கசக்தியாக விளங்கவேண்டிய நாம், நமக்குள் இணையாது நின்று விட்டோம். முன்னுள் எழுத்தாளர்கள் பிறரைத் திட்டியே விமர்சகர்களாகி ஒதுங்க, பணத்திற்கு அடிபணிந்து திரைக்கும் பத்திரிகைக்கும் செல்லும் நிலை ஏற்பட்டுவிட்டது. இந்நிலை மாறி, புதியநிலை உருவாக — நாட்டுக்கு உழைத்து இமைப்போதும் சோராதிருக்கும் தொழிலாக எழுத்தைக் கொள்ள—நாம் இணைந்து விழித்தெழுந்து செயலாற்றுவோமாக"

1. 3. சிறுகதை

1) வளரும் சிறுகதை

(‘சுதேசமித்திரன்’ தீபாவளிமலர் 1956)

“‘மணிக்கொடி’ எழுத்தாளர்களுக்குப்பின் சிறுகதை வளரவில்லை; ‘தேக்ககாலம்’தான் எனவும், பத்திரிகைகளில் எழுதுபவர்கள் கற்றுக்குட்டிகள் எனவும் சி.சு. செல்லப்பா கூறியுள்ளார். விமர்சனம் செய்யும்போது தன்னைச் சார்ந்தவரை மட்டும் பாராட்டுவதையும், மற்றவர்களைக் கண்மூடித் திட்டுவதையும் ஏற்கக்கூடாது. அத்தகைய விமர்சனப் போக்கு உண்மை விமர்சனமாகாது. ‘மணிக்கொடி’ எழுத்தாளரிலும் இலக்கியமாகாத கதை படைத்தோர் உண்டு; கற்றுக்குட்டிகளிலும் பிறமொழியாளர் கவனத்தை ஈர்ப்போர் உண்டு. பிறரைத் திட்டுவதை விட்டு, தலைக்கனமற்ற நிலையில், தன்னம்பிக்கையுடன் இளைய எழுத்தாளர்கள் எழுதல்வேண்டும். எல்லா நாட்டிலும், இலக்கியத் தரமற்ற பத்திரிகைக்கதைகள் உண்டு. எனவே, சிறந்த கதை எது என்று விமர்சகனே தேர்ந்தெடுக்கவேண்டும்.”

2) சிறுகதை

(மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன்விழா மலர் 1956)

“பழந்தமிழ் இலக்கியத்தில், நீர்வேட்கையுற்று வந்த இளைஞனைப் பற்றிப்பாடும் கலித்தொகைக் காட்சி ஓர் சிறுகதை. சின்னஞ்சிறு காட்சி, மெல்லிய அசைவு, ஓர் அணுவின் சலனம்—சிறுகதையாகலாம். பிறர் காணத் தவறுவதை அநுபவித்து எழுதுபவன் கலைஞன். பாத்திரம் ஒன்றோ பலவோ, நிகழ்ச்சியும் நேரமும் குறைவாகவோ மிகுதியாகவோ இருப்பினும், படித்து முடித்ததும் ஒரே உணர்வு ஏற்பட்டு, அது பற்றிய ஆழமான எண்ணம் ஏற்படின் அது சிறந்த கதை. கதைசொல்லும் பழக்கம் நீண்டநாள் தொட்டு உண்டு. பழைய நீதிக்கதைகளில் வடிவம் இல்லை. ஆங்கிலேயர் தொடர்பால் ஏற்பட்டவை, சிறுகதைகள். மேனாட்டில், நாவல் நாடகம் ஏற்பட்டபின்னர்

சிறுகதை வளர, நாம் எடுத்த எடுப்பில் சிறுகதை எழுத முன்-வந்தோம்.

'மணிக்கொடி' ஆசிரியர்கள் உணர்ச்சியையும் மேனுட்டுக் கதையமைப்பையும் கொண்டு எழுதினர். மற்றவர்கள், நேரான கதைப் போக்கு, முழுஉருவ அமைதியுடன் எழுதினர். ஆரம்பச் சிறுகதைகளைப் பிறமொழிக் கலப்பற்ற கற்பனை, பிறநாட்டுக் கதைகளை உருமாற்றிய கற்பனை, முற்றிலும் மொழிபெயர்ப்புகள் என்று முப்பிரிவாகப் பகுக்கலாம். புதுமைப்பித்தன், கு. ப. ரா. கதைகள் ஆழ்ந்த வலிமையுள்ள கற்பனைகளாக, உயிர்ச்சித்திரங்-களாக நிலைத்து விட்டன. புதுமை இலக்கியம் வளர வேண்டும் என்பதற்காக மொழிபெயர்ப்பையும் சிலர் மேற்கொண்டனர். கல்கி, கதைபடிக்கும் ஆர்வத்தைத் தூண்டினர். சிலர், தம்முடைய புகழைப் பாடிக் கொண்டு, புதியவர்களைத் திட்டிக் கொண்டு விமர்சகராகினர். என் போன்ற இளைஞர்கள் காதலையும் பிற-வற்றையும் எழுதினேம். எழுத்தாளன் பத்திரிகையாளர் தொடர்பு பிற மாநிலங்களை விடவும் தமிழகத்தில் குறைவு. கதை படிக்கும் ஆர்வம் இன்று பெருகி உள்ளது. சிறந்த சிறு-கதைகள் பெருக வேண்டும். ஒவ்வொரு கதையும் ஒரு கவிதைத்-துணுக்கு (Lyric). சிறுகதையாசிரியனைப் பழம்புலவனை எடை-போடும் தராசில் எடைபோடுதல் கூடாது. அவனுடைய படைப்பைத் தொடர்ந்து படித்து, அவன் வளர்ச்சியைக்-கணிக்க வேண்டும்."

I. 4. நாவலாசிரியர்

1) நாவலாசிரியர் ஷோலகோவ்

"இலக்கியத்துறை நோபல் பரிசு பெற்ற ஷோலகோவ், டால்ஸ்டாய், கார்க்கி, செகாவ் போன்ற நீண்டதொரு இலக்கியப் பரம்பரையில் வந்தவர். ஆங்கிலம், பிற இந்திய மொழிகள் மூலம் அவர் எழுத்தை அறியலாம். டால்ஸ்டாய், செகாவ் போன்றோர் பழைய ருஷ்யாவையும் போராட்டகால ருஷ்யாவை-யும் காட்டி, அக்கால மக்களின் உணர்வைப் படைத்தனர். ஷோலகோவ், சோவியத் குடியரசான ரஷ்யாவின் வாழ்க்கை

முறைகளை அதன் சிக்கல்களுடன் படைத்து வெற்றி ஈட்டியுள்ளார். 'டான்நதி அமைதியாக ஓடுகிறது,' 'கன்னி நிலம் பண்படுத்தப்படுகிறது', 'நாட்டுக்காகப் போராடியவர்கள்' ஆகியன அவர் நாவல்கள். கூட்டுப் பண்ணை விவசாய முறை அறிமுகப்படுத்தப்பட்டபோது, மக்கள் அதை ஏற்குமுன் நிகழ்ந்த உணர்ச்சிப் போராட்டம், தியாகம் ஆகியவற்றைக் காட்டுவார்.''

I. 5. உரைநடை

1) தமிழ்நடை

('தமிழ்நாடு' 15. 8. 1957.)

''இயன்ற வரையில் தனித் தமிழில் எழுதுவதும், காலத்துக்கேற்பக் கருத்து விளக்கம் தருவதற்காக எழுதுபவன் கால வழக்குச் சொற்களைக் கையாள்வதும் தான் நடை. வேதநாயகம்பிள்ளை கற்றறிந்த புலவராயினும், 'பிரதாப முதலியார் சரித்திரம்' நாவலில் தம் கால வழக்கைப் படைத்துள்ளார். பழைய இலக்கிய நடைக்கும் இன்றைய இலக்கிய நடைக்கும் வேறுபாடு இருப்பதற்குக் காரணம், வாழ்க்கைமுறை மாறுவது போல, பேச்சும் மொழியும் மாறுவது ஆகும். தனித்தமிழ்ச் சொற்கள் கிடைக்காதபோது, காலத்துக்கும் கருத்திற்கும் ஏற்பப் பிற சொற்களைக் கையாளலாம். 'நல்லசொற்கள் இருக்கும்போது பிறவற்றை நாடக்கூடாது' என்பார் ரா. பி. சேதுப்பிள்ளை.''

I. 6. கவிஞர்கள்

(1) பாரதியார்

1) பாரதி விழாச் சிந்தனைகள்

('எழுத்தாளன்' பாரதி விழாச் சிறப்பு மலர் 1962)

''பாரதி விழாவைக் கொண்டாட அரசு முன்வந்துள்ளது பாராட்டிற்குரியது. பழங்கவிஞர்களைவிடவும், பாரதி புதிய பரம்பரையைத் தோற்றுவித்ததோடன்றி, இன்றைய வாழ்வின் தேவைகள் அனைத்தையும் பாடினான்; உணர்ந்து வழிகாட்டினான்.

ஆக்க சக்தியாக விளங்கும் அவன் விழாவை அரசு நடத்துவது நல்லதென்று எழுத்தாளர் பெருமன்றம் வெளியிட்ட கருத்தை ஏற்று அரசு சிறப்பாக நடத்த வருவது, சீனப்படையெடுப்பு ஏற்பட்டுள்ள இத்தருணத்தில் வேற்றுமைகளை மறந்து ஒன்றுபட உதவும்.''

2) வீட்டுக்குள் ஏன் பாரதி?
(தேசபக்தர் நினைவுமலர் 1967)

''வீட்டுக்கு வீடு பாரதி என்பதை நான் வரவேற்கிறேன். பாரதிக்கு மரியாதை செலுத்த அல்ல இது. அவனுடைய தோற்றமும் பாட்டும் வீரமூட்டக் கூடியவை. வாழ்க்கையில் நம்பிக்கை கொண்டு ஒழுங்குடன் வாழ அவன்பாடல் வழிகாட்டும். அவரவர்க்கு ஏற்ற பாடலைப் பாடலாம். 'மந்திரம் போல் வேண்டுமடி சொல்லின்பம்' என்பதால் அவன் சொல்லே மந்திரம். 'காணிநிலம் வேண்டும்' என்பதால், வாழ்வைவிட்டு ஓடாத, அதேசமயம் வரம்புகடவாத வாழ்வை அவன் உணர்த்துவதை அறியலாம்.''

3) பாரதியின் வசன வளம்

''கவிதையில் எளிமையைக் கையாண்டு பாமரருக்கும் புரியுமாறு எழுதிய பாரதி, உரைநடையிலும் அதைக் கையாண்டான். திரு. வி. க. வும், பாரதியும் தமிழ் உரைநடைக்கு உரமூட்டியவர்கள். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த எமர்சன் போல, பாரதியும் வாழ்வின் எல்லாப் பகுதிகளையும் ஆய்ந்து எழுதினான். கடவுள் வழிபாட்டில் நடைபெறும் போலிகளைச் சாடினான். அவனே கூறுவது போல, கம்பன் கவியில் காணக்கூடிய தண்மை, ஒழுக்கம் முதலியவற்றுடன் எழுதினான்.''

(2) அ. சீனிவாசராகவன்

1) நான் கண்ட பேராசிரியர்
(பேராசிரியர் அ. சீனிவாசராகவன் மணிவிழாமலர், 1967)

''பேராசிரியரின் கவிதை, இலக்கியக்கட்டுரை இவற்றைப் படித்து, 'காணாமலே காதல்' கொண்டிருந்த நான், சென்னையில்

நடந்த எழுத்தாளர் மாநாட்டில் கண்டேன். நகைச்சுவை ததும்பப் பேசக்கூடிய வல்லமை அவரது ஆங்கிலம், தமிழ்ப் பேச்சுக்களில் புலனுகும். மிக நுணுக்கமான கருத்தையும் எளிதில் புரியுமாறு பேசுவார். வளரும் தற்கால இலக்கியம் பற்றி அறியாத பேராசிரியர்களிடம் அதுபற்றி விவாதிப்பார்.''

II. மொழி

1) புதிய விழிப்பு

('தமிழ்நாடு' 16-1-1957)

''தமிழின் மறுமலர்ச்சிக் காலப்பணியில் ஈடுபட்டவர்கள் அனைவரும் ஆங்கிலமறிந்து, பல்வேறு புதுமைப் படைப்புக்களையும் தமிழிற்குக் கொண்டுவந்தவர்கள். இன்றுள்ள சூழலில் 'ஒருசிலர்', படைப்பிலக்கியத்தில் தேக்கநிலை என்று கூறுவது புரியாமல் பேசும் வாதம் என்பதோடன்றி, இன்றையப் படைப்புக்களை அறிந்து அதைப் படிக்காத வாதமும் ஆகும். தளர்நடையிட்டுவரும் இப்படைப்பிலக்கியம் விரைவில் வளர்ந்து பெருகும். பண்டிதர்கள் பழைய இலக்கியத்தையும், எழுத்தாளர் புதுமை இலக்கியத்தையும் காத்து உரமூட்டுவர். எனவே, தமிழில் வளர்ச்சி நன்கிருக்கும்.''

2) விஞ்ஞானத்தமிழ்

('கலைக்கதிர்' பொங்கல்மலர் 1958)

''அறமும் பொருளும் சேர்ந்ததே மனிதவாழ்க்கை. பொருளறிவைப் பற்றிய நூல்கள் நம்மிடம் மிகக்குறைவு. மேனுடுகளில் பல்வகை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதற்கேற்ப, நூல்கள் பெருகியுள்ளன. நம்முன்னோர்கள் பலதுறைகளில் முன்னேறியிருந்தனர். இன்றைய வாழ்க்கைமுறை விஞ்ஞான வளர்ச்சியால் பெரிதும் மாறியுள்ளது. மார்க்ஸும், டார்வினும், ஐன்ஸ்டினும் கண்ட உண்மைகளுக்கேற்ப அவற்றின் வளர்ச்சியை வெளியிடுவதில் உலகமொழிகள் யாவற்றிலும் ஆங்கிலம் முன் நிற்கிறது. பல்துறை ஆராய்ச்சி, அவைபற்றிய கலைச்சொற்கள்

ஆகியன ஆங்கிலத்தில் பல்கியுள்ளன. அவையாவும் தமிழில் கொணரப்படவேண்டும். ஆங்கிலத்தை அவசரப்பட்டு இங்கிருந்து அனுப்பிவைக்க முயலும் சிலரின் செயலால் இழப்பு நம் அனைவர்க்கும் என அறிய வேண்டும். உலகளாவிய சிந்தனைகளை எளியவர்களுக்குப் புரியுமாறு தமிழில் எழுதி, புதிய ஆராய்ச்சிகள் தோன்ற வழிசெய்ய வேண்டும்.''

3) தமிழுக்கு அநீதி

('தமிழ் சினிமா' *11-1-1969*)

''தமிழுக்கு அநீதி இழைக்கப்படுவதாகக் கூறி, பலரும் போராடவும் தமிழ்ப் பண்பாடு பற்றிப் பேசவும் முன்வருகின்றனர். பண்பாடு பற்றிப் பேசும் பலர் சொல் வேறாகவும் செயல் வேறாகவும் வாழ்கின்றனர். பழங்காலத்தில், புலவனின் புலமையைப் போற்றி, அவனைக் கவலையின்றி வாழவைத்தனர், புரலவர்கள். அத்துடன் தமிழைப் பாடிய புலவனின் பாட்டு, பரவ வழிசெய்தனர். பழைய நாடகமேடை யாவும் தமிழ்ப் பண்பாட்டின் வெளிப்படையாகவே இருந்தது. இன்றை நிலையில், உரிமை பெற்ற நாட்டில் நாம் பண்பற்ற வாழ்வு வாழ்வதற்குப் பெரும்பான்மையும் காரணமாக இருப்பது தமிழ்த்திரை. திரைப் படங்கள் மூலம் தமிழின் தொன்மை, பண்பாடு இவை பேசப்படாது, நாம் எங்கோ போகிறோம். இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றையும் முடக்கி விட்டு, திரைப்பட ஆட்சி மேலோங்கி நிற்கிறது. படத்தின் வாயிலாகச் சிலரே வாழ, பலர் வறுமையில் வாடும் நிலை உள்ளது. எழுதும் எழுத்தாளனின் எழுத்தையும் தமிழையும் மதிக்கும் பண்பாடு இங்கு இல்லை. ஏழ்மையை ஒழிக்க முன்வருவதே வள்ளன்மை. பண்பாட்டை விளக்கும் படம் வெளிவரல் வேண்டும்.''

கலை

III. 1. திரைப்படம்

1) திரை அலைகள்

('கங்கை' மூன்று இதழ்களில் தொடர் கட்டுரையாக வந்தது.)

முதல் இதழில் 'கப்பலோட்டிய தமிழன்' படம் தயாரான போது தாம் ஸெட்டில் கண்ட காட்சியையும் மெய்ம்மறந்து நடிகர்கள் நடித்ததையும் கூறியபின், நாட்டுப் பற்றை விளக்கும் படங்கள் வெளிவர வேண்டும் என்கிறார், கட்டுரையாசிரியர்.

இரண்டாம் இதழில் 'வாழ்வு எங்கே' நாவல் படமான போது ஏற்பட்ட அநுபவங்கள் காட்டப்பட்டு, உழைப்பால் மட்டும் எத்துறையிலும் முன்னுக்கு வரலாம் என்கிறார்.

மூன்றும் இதழில் நட்சத்திரச் செல்வாக்கிற்கு ஏற்ப அதிகப் பொருட் செலவில் தயாராகும் படம், எளியமுறையில் உருவாகும் படம் என்பதைக் கூறி, மக்களின் ரசனைக்காகப் படம் என்று வரும்நிலை மாறி, சிறந்த படைப்பு வரவேண்டும் என்பார்.

2) புதிய உலகம்

('தமிழ் சினிமா' 10-11-1958)

"தமிழ் இலக்கிய எழுத்தாளனை எனக்குப் பட உலகம் புதியது. என்னுடைய நாவல் 'பாவை விளக்கு' கல்கியில் வந்து கொண்டிருந்த காலத்திலே அதைப் படமாக்க விரும்பிய ஒரு சிலரின் அன்பால் இத்துறையில் நான் புகுந்தேன். கதையைத் தந்துவிட்டு ஒதுங்கிவிட விரும்பிய என்னை, கூட்டு உழைப்பிற்காக இறுதிவரை உடனிருக்க வேண்டினர் வசனகர்த்தா. நாவலின் அனைத்துக் காட்சிகளும் படத்தில் வருதல் என்பது இயலாது. நாடகத்தன்மை வாய்ந்த கதைகளே படத்திற்கு ஏற்றவை. படித்து ரசிப்பதை விடவும் பார்த்து ரசிப்பதற்கு, உயிருள்ள

வலுவான-கட்டுக்கோப்பான-கருப்பகுதிகள் இடம் பெறுவதும், ஏனைய பகுதிகள் விடப்படுவதும் இன்றியமையாததது. படிக்காத மக்களும் புரியும்படி படத்தின் கதை அமைதல் வேண்டும்.''

3) கதை சொல்லும் திரை
('தினத்தந்தி' தீபாவளி மலர் *31-10-1959*')

''கதை சொல்பவன் எழுத்தாளன்; கேட்பவன் ரசிகன். இது உலகம் உள்ளளவும் இருக்கும். முதன் முதலில் அரசனின் அவைக்களத்தில் இருந்து கதை சொன்னார்கள். பின்னர்ப் பலர் கூடி இருக்கத் தாங்களே தங்கள் படைப்பை அரங்கேற்றினர். அதன்பின், நாடகமேடை வாயிலாக, நடிகர்கள் நடிப்பு வாயிலாக எழுத்தைப் பரப்பினர். எந்திர வளர்ச்சி காரணமாக, சினிமாத் தொழில் வளரவே, சினிமா வாயிலாகவும் கதையைப் பரப்ப முன் வந்தான், எழுத்தாளன். நாவல் எழுதுவது தனி-முயற்சி; திரைக்கதை ஆக்குவது கூட்டு முயற்சி. எழுத்தின் வாயிலாக நெடுங்காலம் நிலைபேறு எய்தச் செய்பவன் திரை வாயிலாக அதிகமானவர் அறியச் செய்வதால் குறை ஒன்றும் ஏற்படாது.''

4) மூன்று நாட்களில் மூவாயிரம் மைல்கள்
('தமிழ் நாடு' *13-11-1959*)

''பாவைவிளக்கு''ப் படப்பிடிப்பிற்காகச் சமீபத்தில் திரைத்துறை வல்லுனர் ஐவரும் நானும் டில்லி, ஆக்ரா, பதேபூர்-சிக்ரி ஆகிய இடங்களைச் சுமார் மூன்று நாட்களில் சுற்றி வலம் வந்தோம் முதலில் 'ராஜ்கட்டம்' சென்று அண்ணல் சமாதியை வணங்கியபின், டில்லி நகரைக் கண்டறிந்தோம். வட நாட்டுக்-கிராமங்கள் சிறிது சுகாதாரம் குறைந்தவை. ஆக்ராவில் தாஜ்-மகாலைக் கண்டு, பிரிய மனமின்றிப் பிரிந்தோம். படம் உருப்-பெறும் விந்தை பற்றிப் பிறர் பேச, என்மனம் நாவல் உலகில் சிறகடித்துப் பறந்தது. படத்தில் பத்து நிமிடம் வரும் ஓராயிரம் அடிகளைப் படமெடுக்க, இப்படிச் சுற்றிப் பழைய, வரலாற்றுப் புகழ் வாய்ந்த இடங்களைக் கண்டு 'கண்டறியாதன கண்டு' களிப்பெய்தினோம்.''

5) நாவலும் திரைப்படமும்
(' தமிழ் சினிமா ' 15-10-1960)

"கட்டுக் கோப்பும் உயிர்த்துடிப்பும் பொருந்திய நாவல் படமாக்கப்படும் போது, திரையில் அது வெல்வதும் தோற்பதும் காட்டப்படும் உழைப்பைப் பொறுத்த ஒன்று. தலைசிறந்த உலக நாவல்கள் மேனாட்டில் படமாக்கப்பட்டு வெற்றிபெற்றுள்ளன. என் நாவல் ' பாவைவிளக்கு ' படமாக்கப்படும்போது, ஒவ்வொரு காட்சியிலும் என்னுடன் கலந்துரையாடுவதை இன்றியமையாத ஒன்றாக நிகழ்த்தியபின் படமாக்கினர் வசனகர்த்தாவும் இயக்குனரும். அவர்கள் காட்டிய அன்பும் உழைப்பும் போற்றற்குரியன. உணர்ச்சிகரமான சீரிய பகுதிகள் படமாக்கப்பட்டன. என்னைப்பொறுத்தவரையில் முழு மனநிறைவை அளித்த அப்படம் என் வாசகர்களுக்கும் அந்நிறைவை அளிக்கும் என்றுஎண்ணுகிறேன்."

6) நான் காணும் திரை உலகு
('தமிழ்நாடு' தீபாவளிமலர் 19-10-1960)

"நல்ல நாவல்கள், சிறுகதைகள் படமாகக் கூடுமா என்று என் ரசிகர்கள் என்னைக் கேட்டார்கள். திரையுலகில் நடக்கும் கற்பனைத்திருட்டுக்காரணமாக வாளாவிருந்த என்னிடம்'பாவைவிளக்கு' நாவலைப் படமாக்க வேண்டும் என்று சிலர் விரும்பிக் கேட்டனர். ஒவ்வொரு சமயமும் என்னுடன் கலந்து ஆலோசித்துத் திரை நுணுக்கத்திற்கேற்பத் திரைக்கதையை உருவாக்கினார்கள். படிக்கும் நாவலிற்கு மாறுபட்டு, பார்ப்பதற்கேற்ப, பாட்டு, நடனம், வெளிப்புறப் படப்பிடிப்புகளுடன் உருவாக்கப்பட்டது. திரைக்குப்பின் இயங்கும் எழுத்தாளரும் இயக்குனரும் சமஅளவில் உழைத்து ஒன்றுபட்டு நடக்கும் செயல் வெற்றிபெறும். நாவலின் வெற்றி அதன் படைப்பாளியின் தனிப்பட்ட உழைப்பிற்கு வரும் பலன். படத்தின் வெற்றி, பலரின் கூட்டுழைப்பிற்குக் கிடைக்கும் பரிசு."

7) கதை, வசன, டைரக்ஷன்
('கலைஞன்' பொங்கல்மலர் 1961)

"கதை, வசனம், டைரக்ஷன் மூன்றும் ஒன்றிற்கு ஒன்று உறவுடையவை. மூன்றையும் ஒருவரே செய்வது சமீப காலத்-

தில் காணப்படுகின்றது. அவ்வாறு பணிபுரிய ஆழ்ந்த உழைப்-பும் ஆற்றலும் வேண்டும். பலநாட்களாகச் சிந்தித்து, பிற-வற்றில் நாட்டம்கொள்ளாது கதையை உருவாக்கவேண்டும். மேனுட்டிலும் இப்படிச் சிலருண்டு. அவ்வாறு செய்பவர்கள் தங்களின் சொந்தப் படங்களுக்கே முப்பணிகளையும் புரிவர். இங்கு, பலபடங்களுக்கும் பொறுப்புக்கள் ஏற்று மூன்றையும் ஒன்ருக ஆற்றுவதால், ஒன்றையும் சரிவரச் செய்யாது தோல்வி-யைத் தழுவுகின்றனர். சரத்சந்திரரின் நாவல், என் போன்ற சில-ரின் நாவல் இவ்வாறு பலியாகின. இதில் வெற்றியும் புகழும் பெற ஒரேவழி, அதில்மட்டும் கவனஞ்செலுத்தி உழைப்பது, அல்லது ஏதேனும் ஒன்றை நன்ருகச் செய்வது. இல்லாவிடில் பரிதாப-மான நிலை ஏற்படுவதுடன் பணம்போடுபவரும் ரசிகரும் நஷ்ட-மடைவர்.''

8) டைரக்டரும் எழுத்தாளரும்
('தமிழ்சினிமா' பொங்கல்மலர் 1961)

''பேசும்படம் வரத் துவங்கியபின், சீரிய கதைகளைப் பட-மாக்க முயன்றனர். அமெரிக்காவில், நல்ல எழுத்தாளர்களின் எழுத்தைப் படமாக்க முயன்றபோது, இருவிதமான தன்மைகள் ஏற்பட்டன. ஒன்று, திரைக்கதையாக ஆன போது எளிய மக்க-ளால் அறியமுடியாது போனது; அல்லது திரைக்கதையாக எளிமையாக்கப்பட்டபோது, வாசகர்களின் முணுமுணுப்பை எதிர்நோக்கவேண்டி வந்தது. இதைப்போக்க, திரை நுணுக்கங்-களைக்கூறி, எழுத்தாளர்களையே திரைக்கதையை உருவாக்கச்-சொன்னுர்கள். இம்முயற்சி அமெரிக்காவில் வெற்றி பெற்றது. டைரக்டரின் பணி நுணுக்கமானது போல, எழுத்தாளனின் பணியும் கடினமானது. மேனுட்டுநிலை இங்கும் வரவேண்டும்.''

9) திரைமறைவில்
('தமிழ்நாடு' 13-4-1961)

''தமிழ்த் திரையுலகில், தரமான புகழ்பெற்ற நாவல்கள் படங்களுக்கேற்றவையல்ல என்னும் வதந்தி பரப்பப்பட்டு

வருகிறது. இதற்குச் சரியான ஆதாரம் கிடையாது. இதுவரையில், படமான பத்து, பன்னிரண்டு நாவல்களில் பாதிக்குமேல் வெற்றிப்படங்கள் மிதிப்படங்களில் நஷ்டம் ஏற்பட்ட படமோ, தோல்வியோ ஒன்றுமில்லை 'பாவை விளக்கு' பெரு வெற்றி பெருவிடினும் தோல்வியோ, பொருள்நட்டமோ அடையவில்லை. அது வெளிவந்த ஆண்டில், நாவலை மூலமாகக்கொள்ளாத பிறபடங்கள் பல தோல்வியுற்றன. என் கதைப்படம் வெளியிட்ட சமயமும் தொழில்நுணுக்கத் திட்டமும் நன்கிருந்திருந்தால் இன்னும் அபார வெற்றி ஏற்பட்டு இருக்கும். சொந்த வலிமையற்ற சிலரும், திரையை மட்டும் நம்பி அரசியல் போர்வையில் வாழும் சிலரும் தங்கள் தீவிர எதிர்ப்பைப் படம் வெளியிட்டபோது காட்டினர். தமிழ்த் திரைக்கு எழுத்தாளன் படைப்புதவாது என்ற வதந்தியைப் பரப்புவது, கற்புடைய பெண் குடும்பத்திற்கு உதவாள் என்ற கூற்றைப் பரப்புவது போல் பொருளற்ற செயல்.''

10) திருடர்கள் ஜாக்கிரதை
('தமிழ் சினிமா' 15-4-1961)

"திரைப் படங்களுக்குக் கதையமைப்போர் சிலர், ஏற்கெனவே புகழ் பெருத எழுத்தாளர்கள், முன்னுக்கு வரத்துடிக்கும் எழுத்தாளர்கள், தபால் மூலம் கதை அனுப்புவோர் ஆகியோர் கதைகளைத் தங்கள் பெயரில் படமாக்குகின்றனர். நூலாக வராதபோது, 'காபிரைட்' சட்டப்படிப் பதிவாகாத கதைகளை எளிதில் திருடி விடலாம். திரையில் இருப்போர் பிறர் உழைப்பை மதிக்கக் கற்றுக் கொள்ளல் வேண்டும். எழுத்தின் சிறு பகுதியை ஏற்றாலும். அதற்கு எழுதியவரின் அநுமதியுடன் அவர் பெயரையும் வெளியிட்டு, அதற்குத் தொகையும் தரும் பண்பு வளர வேண்டும். புதியவர்கள் 'காபிரைட்' சட்டப்படி பதிவு செய்தபின் தங்கள் எழுத்தைப் படஉலகிற்குஅளித்தல் நலம்.''

11) திரைக்கவர்ச்சி
('தமிழ் சினிமா' 1-11-1961)

"திரைமோகம் இருத்தல் கூடாது என்றார் நேரு. மக்கள் திரையில் ரசனை கொள்ளலாமேயன்றி, வெறிகொள்ளல் கூடாது.

நடிக, நடிகையர் வாழ்வு பெரிதாகக் காட்டப்படுகிறதே அன்றி, திரைத் தொழிலாளர் பலர் வறுமையில் வாடும் கொடுமை வார, மாத, நாள் இதழ்களில் காட்டப்படுவதில்லை. பணம் போட்டு நட்டமடைந்த தயாரிப்பாளர் நிலை இருட்டடிப்பு செய்யப்படுகிறது.''

12) கலைத்துறை அமைச்சர் தேவை
('தமிழ் சினிமா' *15-1-1962*)

''நந்தமிழ் நாட்டில் மக்களின் பொழுது போக்குச்சாதனம் திரைப்படம். வங்கத்தில் பிற கலைகள் வளர, இங்குத் தலைகீழான நிலை உள்ளது. மக்களின் கீழான உணர்ச்சிகளைத்தூண்டி அழிவுப் பாதைக்கிட்டுச் செல்வதுடன், கலை, இலக்கியம், புத்தக நிலையம் போன்ற பிறதுறை முழுவதிலும் பண்பாட்டுச்சீர்கேட்டை உருவாக்குகிறது. சிறந்த ஒரு சில படங்கள் தோல்வியைத் தழுவ உணர்ச்சியைத் தூண்டும் கீழான படங்கள் மக்கள் மன நலம், உடல் நலம், இவற்றைக் கெடுப்பதால், அதிலிருந்து காக்கவாயினும் கலைத்துறை அமைச்சர் தேவை.''

13) சினிமாவும் பத்திரிகைகளும்
('கலைஞன்' *15-1-1962*)

''இந்தியாவெங்கும் திரைச்செய்தி கூறும் பத்திரிகைகள் பல உள்ளன. தமிழகத்தில் அதிகமாக இருக்கும் அவை, சினிமாத் தொழில் கலைஞர்களுக்கும் மக்களுக்கும் இடையில் பாலமாக அமையாது, அத்தொழில் பற்றிய ஓர் போலியான கவர்ச்சியை உருவாக்கி வருகின்றன. அதை அடைவதே லட்சியம் என்று எண்ணச் செய்து, சென்னை சென்று பலர் வாழ்விழக்கும் அளவிற்கு நடிக, நடிகையர் பற்றிய செய்திகளை—அந்தரங்கங்களை—பரப்புகின்றன. அத்தொழிலில் ஈடுபட்டு வறுமையில் வாடும் மிகப்பலரின் இருண்ட வாழ்வை வெளியிடாது உண்மை நிலையை மறைக்கின்றன. ஒரு சிலரின் புகழ்பாடி, பகைமையை வளர்த்து இழிநிலையை உருவாக்குகின்றன. நாணயமும் ஒழுக்கமும் சீர்கெட்டுள்ள திரையுலகு பற்றிய மயக்கத்தை ஏற்படுத்தும் நிலை

மாறவேண்டும். நாடகம், இலக்கியம் போன்ற பிறதுறை வளர்ச்சியைத் தடைசெய்யும் கவர்ச்சிப் போக்கைத் திரையுலகு விடுதல் நலம்.''

14) நாணயமும் நன்மதிப்பும்
('சினிமாஸ்டார்' 1962 தீபாவளி மலர்)

''மக்களிடம் புகழ்பெறுவதற்காக, சேர்த்த செல்வத்தில் ஒரு சிறிது வழங்கி, விளம்பரம் செய்து, அதனால் வாழ நினைத்தல் கூடாது. திரையுலகில் நாணயம் இருப்பதாக மக்கள் நம்புமாறு சில பத்திரிகைகள் செய்தியைப் பரப்புவது தவறு. அங்குத்தான் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள்பணிசெய்துவிட்டு, கூலி-யின்றி வறுமையில் உழல்கின்றார்கள். கலையையும் வாழ்வையும் பண்பாட்டிற்கு ஏற்ப நடத்தி, கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து நாணயத்தைச் சொல், செயல் இவற்றால் வெளிப்படுத்தி நன்-மதிப்புப் பெற முயலவேண்டும்.''

15) இனியொரு விதி செய்வோம்
('தமிழ்சினிமா' தீபாவளி மலர் 27-10-1962)

''சினிமா உலகில் துன்புறுவோர் பலராகவும், பொருளை-யும் புகழையும் எய்துவோர் சிலராகவும் உள்ளனர். அங்கு நடக்கும் இன்னலைக் கவனித்து, அதை நீக்க நடவடிக்கை எடுக்-காது, மத்திய, மாநில அரசுகள் வரிச்சுமையால் மேலும் துயரை விளைவிக்கின்றன. நீண்ட காலமாக மிகப் பெருஞ்செலவில் எடுக்-கப்பட்ட படம் விரைவில் தோல்வியைத் தழுவுவதன் காரணத்-தை ஆராயவேண்டும். இளைய சமூகத்தை உருவாக்கும், பண்-பாட்டுச் சிறப்பைக்காட்டும் தரமிக்க படங்கள் வெளிவரவேண்-டும். அவைதான் உலகநாட்டின் படங்களுடன் மோதமுடியுமே அல்லாது, பொருட்செலவால் உருவாகுபவை சிறந்துவிடா என்பதை மனதில் கொள்ள வேண்டும்.''

16) திரைமயக்கம்
('தினத்தந்தி' 27-10-1962)

''வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை என்று அரசு விதித்துள்ளது. அந்த வயதில் சுயமாகச் சிந்தித்து விடமுடியும்

என்று எண்ணிக்கொண்டு, அதைமீறி மனிதனைச் சிந்திக்கவிடாத அளவிற்குப் புறச்சாதனங்கள் பல்கிவிட்டன. வயதுமட்டும் சுயசிந்தனையைத் தந்துவிடாது. மக்களின் சிந்தனையைத்-தடுக்கும் புறச்சாதனங்களைத் தடைசெய்யாத தவறு அரசி-னுடையது. பள்ளியைத் திறந்து கல்விக்கு வழிகாட்டியவர்கள், கள்ளுக்கடையை மூடி மக்கள் மயக்கத்தை நிறுத்தினர். ஆனால் திரை மயக்கத்தில் அமிழ்வதைத் தடுக்க முடியவில்லை. வருகின்ற படங்களில் நல்லபடம் மிகக்குறைவு. பத்திற்கு ஒன்பது, மக்க-ளின் உணர்ச்சியைத் தூண்டிக் கெடுப்பவை. இந்நிலையைத்-தடுத்து நல்லபடம் உருவாக வழிசெய்யாவிடில் வாக்குச்சீட்டின் மதிப்பைத் திரைச்சீட்டு பெற்றுவிடும்.''

17) ஊருக்கோர் கலையரங்கு
('அரவிந்தம்' *17-9-1963*)

"முன்பெல்லாம் நம்நாட்டில், உழைத்துமுடித்த மக்களின் பொழுதுபோக்கிற்கென நாடகம், நாட்டியம், இசை, கூத்து முதலிய பல கலைகள் இருந்தன. அவற்றால் நாடும் பண்பாடும் செழித்துப் பலரும் பிழைத்தனர். இன்று எல்லாவற்றின் இடத்-தையும் திரைப்படம் பிடித்துக்கொண்டுவிட்டதால், மக்கள் அதையே நாடுகின்றனர். பிறதுறைக்கலைஞர்களும் அதை அடைவதைக் குறிக்கோளாக எண்ணி, அங்கு வந்து வேலை இல்லாது வாடுகின்றனர். படங்களோ, பண்பாட்டின் ஆணி-வேரை அழிப்பதாக உள்ளன. இந்நிலை மாறவேண்டுமாயின், அரசு ஊருக்கோர் கலையரங்கை நிறுவி, சினிமா அல்லாத கலைகள் வளர வழிசெய்ய வேண்டும்.''

18) வெள்ளைத்திரையில் கறுப்பு மை
('கல்கி' *22-9-1963*)

"பேசும்படமான திரைப்படம் முதலில் பாடும் பட-மாகவே இருந்தது. உயிர்த்துடிப்பான வசனங்கள் எழுதி, திரைப்படத்தைச் சிறப்பித்தவர்கள் பலர். சீரிய கதைகளைப் படித்து, உரையாடலால் சிறக்கச் செய்பவர்கள் பலர். பிறர் கதையைத் தழுவி எடுப்பதும் சிரமமான செயலே. இற்றைத்

தமிழ்ப்பட உலகம் கெட்டுப் போவதற்குக் கறுப்புப்பணம் ஒரு காரணம். எழுத்தால் வாழ்பவன் பாதிக்கப்படுகிறுன். இந்நிலை மாறவேண்டியதற்கு உரியதை ஆற்றவேண்டும்.''

19) சோஷலிசமும் திரையுலகமும்
('தமிழ்சினிமா' 16-11-1963)

"'சோஷலிசம் அமுலாக்கப்படாவிடில் புரட்சிவரும்' என்கிருர் நேரு. இது முதலில் திரையுலகில் வரவேண்டும். ஓர் உன்னத சக்தியாக விளங்கும் இத்தொழிலில்தான் வேறெங்குமில்லாத வருமான வேறுபாடு, வேலையின்மைச்சிக்கல் உள்ளன. கறுப்புப்பணம் இங்குத்தான் அதிகம் குவிந்துள்ளது. மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டிக் கெடுக்கும் படங்களே வருகின்றன. இந்நிலை நீடிப்பதை அரசு தடுத்து மாற்ருவிடில், நேரு கூறிய வழிக்கு இத்துறை வழிகாட்டியாகிவிடும்.''

20) பரிசுக்குப் போட்டி
('தமிழ்சினிமா')

''தமிழ்ப்படங்கள் பரிசுபெருதது குறித்து வருத்தமும், பரிசுபெற்றவர்கள், பிறமொழிப்படங்கள், அரசு இவைபற்றிய தூற்றுதலும் பல்கியுள்ளன. உண்மையில் பரிசுபெற விரும்பினுல், இலக்கியத்தரமும் பண்பாட்டுச் சிறப்பும் உடைய படைப்புக்கள் வரவேண்டும். இங்குக் காணப்படும், கலைஞனை மறந்துவிட்டு, கதையைத் திருடி அதில் கதம்பங்களைச் சேர்க்கும் வேலை மாற வேண்டும். வங்கப்படங்கள் வெல்வதற்குக் காரணம் லட்சியத்துடிப்பும் உழைப்பும் என்பதை அறிதல் வேண்டும்.''

21) நாடகங்களும் திரைப்படங்களும்
('வெற்றித்திருநகர்' மலர்)

''நாடகம் தாய்க்கலை; சினிமா சேய்க்கலை. சினிமாப்போல பலரின் ரசனைக்காக, நாடகம் தன்னுடைய பண்பாட்டு நெறி பிறழ்வதோ, சினிமாபோலக் காட்சிமுறையமைப்பு என்று போவதோ கூடாது. நாடகத்தின் மையக்கருத்து ஒன்று.

நாடகம், பண்பாடு, ஒழுக்கம் இவற்றை விளக்குவதாக அமையும்.''

22) கதை, திரைக்கதை, வசனம் ['கலை']

''திரைப்படம் பாடும் படமாயிருந்து பேசும்படமாக வளர்ந்த போது வசனங்களாலே சிறந்தது. திரைக்கென எழுதப்பட்டவை கூட, மிகப்பெரிய வெற்றியை ஈட்டின. திரைக்கதை உருவாக்குவது என்பது மிகக்கடினமான பணி. காட்சிக்குக்காட்சி ஏற்றவாறு உயிருள்ளதாக உருவாக்குதல் வேண்டும். காலத்திற்கு ஏற்ற-வாறு அமைத்து, கூட்டுணர்வால் படங்களைத் தயாரிப்பின் வெற்றி ஈட்டலாம்.''

23) மண்ணில் மலருமா தமிழ்ப்படம்? ('பொம்மை' ஆண்டுமலர் 1967)

''சமீபத்தில் அமெரிக்கர் ஒருவரும், ருஷ்யர் ஒருவரும் என்னைச் சந்தித்துப் பேசியபோது, பலவகையிலும் நீண்ட பண்-பாட்டுப் பெருமையுடைய நம் நாட்டில், சில, மராத்தி, வங்காளி, மலையாளப் படங்கள் தவிர, மிகுதியாகத் தரங்கெட்ட திரைப் படங்களே வருகின்றன என்றார்கள். இதுவரை வந்துள்ள படங்-களில் நல்ல படங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். நம் மண்-ணின் பெருமை, கலாச்சாரம், இசை, நடனம், கிராமியக்கலை இவற்றுடன் கூடிய மண்பெருமை கமழும் சீரிய படைப்புக்கள் வெளிவருதல் வேண்டும். வசூலைக் கவனிக்காது இருப்பது என்பது அல்ல, பொருள். சமீபத்தில் ஒரு மலையாளப் படம் மீனவர் வாழ்வை அற்புதமாக வெளிப்படுத்தியது; வெற்றி ஈட்டியது. ஆடம்பரமான செலவும் அதில் இல்லை. சமூகத்தில் காணுவதை வெளியிடும் பாங்கை மேற்கொள்ளல் வேண்டும். குறைந்த செலவில் தரமான படங்களைத் தயாரித்து வெற்றி ஈட்டுகின்றனர், மலையாளிகளும் வங்காளிகளும். நாம் மட்டும், பண்பாட்டை மறந்து விட்டு, மேனாட்டுப்பட அமைப்புப் போல, அதிகமாகப் பொருள் செலவு செய்து, காலவிரயம் செய்து,

தரமற்ற படங்களை எடுத்துத் தோல்வியும் துயரும் எய்துகிறோம். இந்நிலை மாறுமா?''

24) சினிமா இயந்திரமும் காந்தியடிகளும்
(' *தமிழ் சினிமா* ' *31. 10. '70*)

"நல்ல பல நடிகர்களைத் தந்த நாடகமேடை, தொழிற் புரட்சி என்னும் எந்திரவளர்ச்சி தந்த சினிமா எந்திரத்தால் பாதிக்கப்பட்டது. நாடகத்தை விடவும் சினிமா பலர் பார்க்க வசதி செய்தாலும், எந்திரப்புரட்சி காரணமாகப் பலர் வேலை இழப்பதும் வறுமையில் வாடுவதும், ஒரு சிலரிடம் மட்டும் பணம் குவிந்து வர்க்க முரண்பாட்டுப் பொருளாதாரநிலை ஏற்படுவதும் தவிர்க்க முடியாததாயிற்று. இதுவரும் என்பதாலே காந்தியடிகள், எந்திரமயமாதலை எதிர்த்தார். தன்னலமற்ற தர்மகர்த்தாக்களால் அவ்வியந்திரம் நிர்வகிக்கப்பட்டு, மக்கள் நலன் பாதுகாக்கப்படல் வேண்டும் என்றார். அது புறக்கணிக்கப்பட்டு, ஒரு சிலர் மட்டும் பணத்தைக் குவித்து, தன்னலத்தைப் பெருக்கி வாழ்ந்து கொண்டு, படித்த பலரை வேலையின்றி வாடச்செய்வதுடன், பத்திரிகை எந்திரமும் சினிமா எந்திரமும் கடும் வர்க்க பேதத்தை உருவாக்கிவிட்டன. எனவே, தர்மகர்த்தாக்களாலோ, அரசினாலோ நிர்வகிக்கப்பட்டு, இக்கலாச்சாரச் சீரழிவுநிலை நீக்கப்பட்டு, அனைவரும் பலன்பெறுமாறு மாற்றப் படல்வேண்டும்.''

25) தியாகியும் துரோகியும்
(' *தமிழ் சினிமா* ' *5-12 1970*)

"விடுதலைக்காகத் தங்கள் நலனை மறந்து, பல்வேறு துறையினரும் தியாகம் செய்ய முனைந்த போதிலும் காந்தியண்ணல் தலைமையிலேதான் தியாக உணர்வு பரவிற்று. அந்தத் தலைமுறையினர் செய்த தியாகம் இன்னும் இந்நாட்டில் சரிவர உணரப்படவில்லை. அன்று அவர்கள் பட்டது துயரம் தவிர வேறில்லை. இன்று அரசியல் தலைவர்கள் தங்கள் நலனையே பார்த்துச் சொத்து சேர்க்கின்றனர். மக்களிடம் தொடர்புடைய

சாதனமான திரைப்படமும் பத்திரிகையும் மக்கள் நலனில் அக்கறை கொள்வதை விடுத்த, ஒரு சிலரைப் பெரிய மனிதராக்க முன்வந்து தன்னலத்தைத் தேடுகின்றன. நூற்றுக்கு எழுபது பேர் போதிய உணவின்றி, வேலையின்றி வாடும் நாட்டில், ஒரு சிலர் மட்டும் பணத்தைப் பதுக்கிக் கொண்டு, காந்தியப் போர்வையில் வருவது தேசத்துரோகம். பெற்ற செல்வத்தை வறியவர்க்கு அளித்தலே தேசத்தொண்டும் தியாகமும் ஆகும்.''

26) இனியும் திரையுலகில் பணநாயகமா?
('தமிழ் சினிமா' 15-4-1971)

"இந்திய அரசியலில் மன்னர்கள் ஒழிக்கப்பட்டு சமஸ்-தானங்கள் நாட்டுடைமையாக்கப்பட்டது போல, திரையுலகிலும் அத்தகு நிலை வரவேண்டும். இன்று திரையுலகில் பணநாயக ஆட்சிதான் நடக்கின்றது. ஒரு சிலர் மட்டும் ஆடம்பரமாக வாழ்ந்து பொருளைக் குவிக்க, படமுதலாளி முதல் கடைசிச்-சிப்பந்தி முடிய வறுமையில் வாடுகின்றனர். ஒரு சிலர், மிகப்-பலரை ஆள்கின்றனர். அண்டை மாநிலமான கேரளத்தில் மிகக் குறைந்த செலவில், மிகக் குறுகிய காலத்தில் தரம் வாய்ந்த படமெடுக்க, தமிழில் மட்டும் அதிகச் செலவும் காலவிரயமும் செய்து தரங்கெட்ட படம் எடுப்பதுடன், எழுத்தாளர் உள்படப் பலரும் பின் தள்ளப்படுகின்றனர். இனியும் இந்நிலை நீடித்தால், அரசியலில் வந்த ஜனநாயகம், இங்கும் வரும்.''

III. 2. கிராமியக்கலை

1) வங்கத்தில் நம் கிராமியக்கலை
(தமிழ்நாடு சங்கீத நாடகச்சங்கம்,
கிராமியக்கலைவிழா மலர்-1967)

"நான் சிறுவனாக இருந்தபோது, என்கிராமத்தில் கரகம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் ஆகியன பார்த்-துள்ளேன். எந்திரமயமான வாழ்வில் அவை இப்போது நசித்து

வருகின்றன. இதைத் தடுத்து, அவை வளர நாம் வழி செய்ய வேண்டும். வங்கத்தில் கல்கத்தா நகரில், தாகூர் நூற்றாண்டு விழாவில் வாரம் முழுவதும், தினம் அரைமணிவீதம், நம் கரகம், பொய்க்கால் குதிரையாட்டம் நடைபெற ஏற்பாடாகி இருந்தது. ரவீந்திரசங்கீதத்திற்கிடையே இது, எடுபடாமல் போய்விடுமே என்று தமிழன்பர்கள் அஞ்ச, வியப்பூட்டுமாறு, வங்க மக்கள் இதையே மிகவும் விரும்பிப் போற்றினர். கிராமந்தோறும் உள்ள கலைகள் வளர, நாடகமேடைகள் அமைத்து நாம் அவை-களுக்கு ஆவன செய்தல் வேண்டும்.''

III. 3. சித்திரம்

1) சித்திரத்தில் செக்ஸ்

('காதல்' ஆண்டு மலர் 1954)

''ஓவியங்கள் சில வாங்குவதற்கு நண்பரும் நானும் சென்ற போது, தெய்வப்படங்களான சிவ-பார்வதி நடனம் போன்றவை படுக்கையறைப் படங்கள் போல இனக்கவர்ச்சியை மட்டும் ஊட்டுவனவாக இருந்தன. இளமை, அழகு, மணம் ஆகியவை அமைந்ததே தெய்வத்தன்மை என்பார் திரு. வி. க. இந்தப் படங்களில் மணமாகிய தெய்வீகம் காணப்படாது, அழகும் இளமையும் வெறியூட்டுவதாகத் தீட்டப்பட்டிருந்தன. கருத்தைக் கவரும் திறன் அவற்றில் இல்லை. ரவிவர்மா படங்களில் தெய்-வீகப்பண்பிற்குப் பதில் மானுடப்பண்பே உள்ளது என்றார் ஒருவர். இவற்றில் மனிதப்பண்பு கூட இல்லை. இவை, பம்பாயில் இருந்து வந்தவை என்றார் கடைக்காரர். அங்குத்தான், வியாபாரத் திற்கென இப்படி வரையப்படுகின்றன. வங்கத்தின் அளவிற்கு முன்னேறாவிடினும், தமிழக ஓவியங்களில் சமண, பௌத்த காலத்திற்கு முன்னமே அன்பையும் அருளையும் மட்டும் காண-லாம். இந்துக்கோயில் சிற்பங்களில் முழுமையாக நாம் தெய்வீகத்தைக் காணலாம். 'உலகிலுள்ள எல்லாக்கலைகளின் அடிப்படையுமே இனக் கவர்ச்சி என்ற நுண்ணுணர்வே' என்னும் ப்ராய்ட் என்பார் கருத்தை ஏற்றாலும், புனிதத்தன்மை

வாய்ந்ததாகப் போற்றப்படும் ஓவியங்களில் மிருகத்தன்மையை ஏற்றல் வேண்டாம். அதுவே ஓவியக்கலை வளர ஆற்றும் தொண்டாகும்.''

IV. 1. நாடு

(1973 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ரஷ்யாவில் நடைபெற்ற [ஆல்மா ஆட்டா, தாஷ்கண்ட் நகரங்களில்] ஆசிய ஆப்பிரிக்க எழுத்தாளர் மகாநாட்டிற்குச் சென்று வந்த அகிலன் அவர்கள், ருஷ்யநாட்டில் ஏற்பட்ட அநுபவங்கள் பற்றிக் 'கலை-மகள்' 'தினத்தந்தி' 'சுதேசமித்திரன்' இதழ்களில் எழுதிய மூன்று கட்டுரைக் கருத்துக்களின் தொகுப்பை இங்குக்காணலாம். அவை பெண்கள், எழுத்தாளர் போன்ற பல்தரப்பட்ட மக்கள் வாழ்வைக் காட்டிய போதிலும் ருஷ்யநாட்டுப்பற்று என்பது அம்மக்களின் ஒவ்வொரு சிறு செயலிலும் மிளிர்வதைத் தாம் கண்டதாகக் கட்டுரையாசிரியர் கூறுகிறார். எனவே அவற்றை 'நாடு' என்னும் உட்தலைப்பில் அடக்கியுள்ளேன்.)

1) சோவியத் மக்களின் பண்பு
('கலைமகள்' தீபாவளி மலர் 1973)

"தில்லியிலிருந்து விமானத்தில் புறப்பட்டபோது காலை உணவு பெற்றதிலே விருந்தினரை உபசரிக்கும் ரஷ்யரின் பண்பு தெரிந்தது. ஆல்மா ஆட்டா ஓட்டலில் தங்கியிருந்தபோது, உபசரிப்பைச் செய்து உதவிய பெண் தாய்போல எங்களை அன்புடன் கவனித்தாள். மகாநாடு நடக்கும்போதே, மலையாள எழுத்தாளரும் வேறுசிலரும் நானும் வெளியே சென்றபோது நீரருந்தச் சென்றவிடத்தில், மொழியறியாத நிலையிலும் ஓர் எளியமாது உதவிய பண்பு, வெள்ளை நாட்டாரிடம் கூடக் காணமுடியாதது. சர்க்கஸ் காணச் சென்றால், மக்கள் ஒவ்வொரு-வரும் கலைஞரைப் பாராட்டுகின்றனர். கவியரங்கம் நடக்கும் போதே தங்கியிருந்த ஓட்டலுக்குச் செல்ல விரும்பிய எங்களை, தாமே முன்வந்து மாநாட்டுப்பஸ்ஸிலே அழைத்துச் சென்றார்,

டிரைவர். விமானநிலையத்தில் குளிரிலிருந்து காப்பதற்கு உதவிய ஒரு போலீஸ்காரர், எழுத்தாளர் தி. ஜானகிராமனிடம் இருந்து பெற்றுச் சென்ற தொப்பியை நான் மறந்துவிட்டு விட்டு வந்தபோது, விமானத்திற்கு வந்து, தந்து சென்றார். அங்கு, பணத்தை மதிக்காது, மனிதாபிமான உணர்வுடன் பழகு-கின்றனர். மனித மனத்தைப் பாழடிக்கும் சினிமாவோ, கலையோ அங்கு இல்லை. தனிமனித, குடும்ப, சமூக வாழ்வில் பண்-பாட்டைக் காக்கும் பாங்கு அங்கு உள்ளது.''

2) ரஷ்யாவில் பெண்கள்
('தினத்தந்தி' தீபாவளிச் சிறப்பிதழ் 25-10-'73)

''ரஷ்யாவில் இறங்கியதும், வரவேற்கப் பெண்கள் வந்-திருந்தனர், கடைகளில் பல்வேறு பணிகளை மகளிர்தாம் ஆற்று-கின்றனர். பல்கலைக்கழக அளவில், ஆண்களைவிட அதிகமாகப் படிக்கின்றனர். ஹிட்லர் படையெடுப்பால், பல லட்சக்கணக்-கான ஆண்களை இழந்ததால், பெண்கள் எண்ணிக்கை அதிக-முள்ளது. எனவே, சட்டங்களில் சிலசமயம், ஆணைவிடப் பெண்ணிற்கு அதிக உரிமையும் அதிகப் பாதுகாப்பும் அளிக்கப்-படுவதைக் காணலாம். வேலையிலிருந்து ஓய்வு பெறும் வயது, உரிமையில் தளர்ச்சி, விரும்பினால் ஓய்வுபெற்ற பின்னும் உழைக்க வாய்ப்புப், போன்ற உரிமைகள் உள்ளன. மணமுறிவு கொள்ள விரும்பினால், தனித்து வாழச்செய்து, பிரிவில் மனம் ஒன்றுபட்டு மீண்டும் இணைய விரும்பினால் அதற்கும் உதவி செய்யப்படுகிறது. தாயிடமே பிள்ளை வளரவும், செலவிற்குக் கணவன் ஒருதொகை அளிக்கவும் சட்டம் உதவுகிறது. பெண்ணை இழிவுசெய்யும் ஆபாசப்படைப்பு, இரவுவிடுதி, கேளிக்கையாட்டம் முதலியன தடை செய்யப் பட்டுள்ளன. பாரதி காண விழைந்த 'புதுமைப் பெண்'ணை ருஷ்யாவில் தான் காண முடியும்.''

3) சோவியத் நாட்டில் எழுத்தாளர்கள்

('சுதேசமித்திரன்' தீபாவளிமலர் 1973)

[சோவியத் நாட்டில் ஆல்மா ஆட்டா நகரில் நடைபெற்ற ஆசிய - ஆப்பிரிக்க எழுத்தாளர் மகாநாட்டின் நிகழ்ச்சிகள் பற்றிய விவரங்கள் தந்த பின், அந்நாட்டின் எழுத்தாளர் நிலை பற்றிக் கூறுகிறார்.]

"'தங்கள் - தங்கள் நாட்டுமக்களின் வாழ்க்கைப் போராட்டங்களைப்பிரதிபலித்து, மக்களின் முன்னேற்றத்துக்காக உழைப்பவர்கள் எழுத்தாளர்கள்' என்று சோவியத் நாடு நம்புகிறது. சோவியத் எழுத்தாளர்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவர்கள் முழுநம்பிக்கையுடன் கடைப் பிடிக்கும் 'சோஷலிஸ யதார்த்தவாதம்' என்ற கொள்கையின் அடிப்படை பற்றி அறிய வேண்டும். எழுத்தாளர் கார்க்கியால் முதன் முதலில் வித்திடப்பட்ட இக்கொள்கையை மையமாகக் கொண்டே 1934 - ல் 'சோவியத் எழுத்தாளர் யூனியன்' தோற்றுவிக்கப்பட்டது. உழைக்கும் மக்களுக்கு உயர்ந்த கலைகளும் இலக்கியங்களும் எளிதில் கிடைக்கச் செய்வது மட்டும் சோஷலிசக் கலாச்சாரப்புரட்சியின் நோக்கமாக இக்கொள்கை கொள்ளவில்லை. சமுதாயத்தின் மனப்பாங்கையே—சிந்தனைப் போக்கையே— புது வழியில் உருவாக்குவதே இதன் லட்சியம். 'மனித குலத்தின் மேம்பாட்டுக்காகவே கலை' என்று அவர்கள் நம்புகிறார்கள். நாட்டின் மெய்யான மூலதனமான மனிதனை மனிதனாக உருவாக்குவதில் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருகின்றனர். வழுக்கி விழுவதற்கான வழிகள் அடைக்கப்பட்டால் மனிதன் நேராகப் படியேறி மேலே போகத்தானே வேண்டும்? எல்லா நாடுகளிலும் எல்லாக் காலங்களிலும் உள்ள சிலவகை பிரச்சினை சோவியத் நாட்டிலும் எழுத்தாளர்களுக்கு உண்டு. வளர்ச்சி அடைந்த பல மேலை நாடுகளில் கூடப் படிக்கும் பழக்கம் அருகி வரும் காலத்தில், சோவியத்நாடு, எழுத்தின் வலிமையையும் ஆற்றலையும் நன்கு அறிந்துள்ளது. மக்கள் அனைவரும் உழைப்பு நேரத்தைப் போலவே, ஓய்வு நேரத்தையும் பயனும் ஆரோக்கியமும் உள்ளதாகச் செலவழிக்கின்றனர்."

2. நாட்டுப்பற்று

) ‘ சுதந்திரம் நிலைக்க வேண்டும்’

(‘ தமிழ் சினிமா ’ 15.8 62)

“அடிமைப்பட்டுக் கிடந்த மக்களைத் திரட்டி, அந்நிய அரசிடமிருந்து விடுதலைபெற, புதியமுறையில்- தாக்குதலைத் தாங்கித்திருப்பித்தாக்காத போர் முறையில்-பெற்ற சுதந்திரம், பறிபோகுமோ என்று எண்ணும் அளவிற்கு நாட்டுப்பற்று என்பது, இன்று நகைப்பிற்கு இடமாகியுள்ளது. இந்நூற்ருண்டின் முற்பகுதியில் காணப்பட்ட ஒற்றுமையும் நாட்டுப்பற்றும் எங்கோ போய்விட்டது. மக்களறிய வேண்டிய விடுதலைப் போராட்ட வீர வரலாறு, மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்படவில்லை. அமெரிக்கர் தங்கள் தலைவர் லிங்கனைப் பற்றி அறிந்த அளவிற்கு சோவியத் நாட்டினர் லெனினைப் பற்றி அறிந்த அளவிற்கு நம்நாட்டில் மாணவர்களுக்கு நம் தலைவர்கள் பற்றி அறிவிக்கப்படவில்லை. வரலாற்றுத்துறையை நாம் மறக்கக்கூடாது. உண்மையான நாட்டுப்பற்றுடையவர்களைக்கொண்டு, இவ்வரலாறு முறையாக எழுதப்படவேண்டும். அப்போதுதான் நம்முடைய உணர்ச்சியைக் கற்கால நாகரிகத்திற்குத் திருப்பி, நாட்டுப்பற்றை நகைப்பிற்கிடமாக்கும் முயற்சிகளை நசுக்கமுடியும்.”

2) எது நாட்டுப்பற்று ?

(‘ மாலை முரசு ’ சுதந்திர தினமலர் 14-8-1963)

“விடுதலை பெற்ற பின்னர், பதவிக்கு வருவதே லட்சியமாக, நாட்டுப்பற்று மறையலாயிற்று. மகத்தான தியாகம் எதையும் நாம் இப்போது எதிர்பார்க்கவில்லை; பின்பற்ற வேண்டிய மக்கள் கைக்கொள்ளுமாறு நல்லநெறியிலாவது நடத்தல் வேண்டும். ஆளுங்கட்சியினரைத் தனிப்பட்ட முறையில், எதிர்க்கட்சியினர் தாக்குவது என்பது கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு கல்லெறிவது போன்றது. தம்மைச் சூழ்ந்து உள்ள எளியமாந்தர் நலனை எண்ணி, பிறர்நலம் கருதிவாழ்தல் தான் நாட்டுப்பற்று.”

3) குடியரசில் கட்சிகள்

(' நவசக்தி ' 26-1-1965)

" நாட்டில், முடியாட்சிபோய், குடியாட்சி மலர்ந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், மக்களை ஆள்கின்றனர். ஆள்பவர்களை அவர்கள் மக்களுக்காக உழைக்காவிடில், மாற்றி விடக்கூடிய உரிமை ஐந்தாண்டு கழித்து வரும். இவ்வுரிமையை மறப்பின் எதேச்சதிகாரம் ஏற்பட்டு விடும். சீனப்படையெடுப்பு இத்தகைய முயற்சியே. குடியரசில் மக்களின் நன்மையை உணர்ந்து பாடுபட, பல்வேறு வகைகளில் செயலாற்ற முனைந்தால், கட்சிகளை மக்கள்ஆதரிப்பர். உழைப்பவர்களுக்கு அளிக்கப் பணம் தானே வரும். உரிமையிருக்குமிடத்தில் கடமையை மறக்கக்கூடாது. குடியாட்சியில், அவரவர் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும். "

4) கங்கையிலிருந்து காவேரி வரையில்

(' கங்கை ')

" கங்கைபாயும் பிரதேசமக்களுக்கும், காவேரி பாயும் பிரதேசமக்களுக்கும் இணைந்த தொடர்புண்டு என்பதைவரலாற்றுப் பேராசிரியர் திரு. ஆரோக்கியசாமி தமது, 'வெள்ளாற்றுப் பிரதேசத்தின் முற்கால வரலாறு' என்பதில் ஆழமாக வெளியிட்டு உள்ளார். உழவுத்தொழிலாற்றிய கங்கைப் பகுதி யாதவர்கள், படையெடுப்பிற்கு அஞ்சி ஓடி, கோதாவரி வழியாகக் காவேரிக்கு வந்தனர் எனவும், பல நூற்றுண்டுகளாகக் குடியேற்றம் நடந்திருக்கலாம் எனவும் கூறுவர். ஆந்திரப் பகுதிகளில் வேளூர், வேளபுரம், வேளகம், வேளகம்பாடு முதலிய ஊர்கள் இருப்பது போல,தமிழகத்திலும் புள்ளிருக்கு வேளூர், வேளாங்குடி முதலிய ஊர்கள் உள்ளன. சங்க காலத்தில் வேளிர்குலம் ஆற்றியுள்ள பணி குறிப்பிடத் தக்கது. சோழமன்னர் வேளிர்குலத்துடன் மண உறவு கொண்டனர். சோழர்கள் கங்கைவமிசத்தினர் என்று கூறிக்கொள்வர். "

V. கல்வி

1) நமது கல்வி திட்டத்தில இன்றைய இலக்கியத்தின் நிலை

('தீபம்' 1968)

"நம்முடைய பாடத்திட்டத்தில், இந்நூற்றுண்டின் இலக்கியங்கள் அறவே போதிக்கப்படவில்லை. ஆங்கிலத்தில் சிறு-கதை, நாவல், நாடகம் முதலிய பலவும் நான்படித்த காலத்தி-லிருந்தே கற்றுத்தரப்பட, தமிழில் மட்டும் ஏனிந்தநிலை? தமிழ்ப்-பேரறிஞர்கள் சிலர், இன்றைய இலக்கியத்தை ஆதரித்து அவை பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றனர். இளைஞர்களுக்கு, பழையபாடல்களைக் கற்றுக்கொடுப்பதுடன், இன்றைய வாழ்க்கை முறைகளைப்பற்றிப் பேசும் தற்கால இலக்கியங்கள் கற்றுத்தரப்பட வேண்டும். புதியவற்றை விரும்பும் உள்மன ஆவலைப் புறக்கணித்தால், திரைப்படங்களும், அவைபற்றிய செய்திபரப்பும் இதழ்களும் அவர்களைத் திசை திருப்பி விடும். இந்நிலையில், ஒருசில, பேராசிரியர்கள், எழுத்தாளர்களையும் அவர்களை ஆய்பவர்களை-யும் பழித்தல் வேண்டாத ஒன்று. பழையவற்றுடன் புதியவற்-றையும் ஆராய்வோம். புதுமையை வெறுப்பது வேண்டாம்."

VI. சமூகச் சிந்தனைகள்

1) இலவச யோசனை

('திருச்சி' வானொலி நிலையததிலிருந்து ஒலிபரப்பான பேச்சு — 'ஆகாஷ்வாணி பிரசாரிகா' இதழில் வெளிவந்தது)

"அதிகமாக உணர்ச்சிவசப்படும்போது, தன்னை மீறி, இன்னது செய்கிறோம் என்று அறியாது செயல்புரிவது போக, இயல்பான நிலையில், தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாது, யோசனை கூறுவது சிலரது பழக்கம். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நம்முடைய மனநிலை அறியாது சினம் ஏற்-படும்வண்ணம், ஆலோசனையை இலவசமாகக் கூறுவர். ஓடும்

ரயிலிலும் சரி, காய்கறிக் கடையிலும் சரி, வலுவில் வந்து இலவசயோசனை கூறும் பழக்கத்தைக் கைவிடல் வேண்டும்.''

2) பண்பாட்டுக்கு ஓர் இயக்கம்

('தினமணி' புத்தாண்டு மலர் 14-4-1947)

''நம்முடைய கலை, இலக்கியம் ஆகியவை உணர்ச்சி அடிப்படையில் பிறந்தாலும், ஒருவிதமான கட்டுப்பாட்டின் அடிப்படையில் பண்பாட்டின் விளக்கமாகவே விளங்குகின்றன. மேனாட்டு நாகரிக விளைவால், நாடகம், கதை, படம், பத்திரிகை எல்லாமே இன்று பண்பாட்டுச் சிதைவால் சிதிலமடையத் துவங்கியுள்ளன. தமிழர் திருநாளுக்கு அனுப்பப்படும் வாழ்த்து அட்டைகளே, இதற்குச் சான்று விஞ்ஞான வளர்ச்சி பெற்ற மேனாடுகளில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு இவை தவிர்க்க முடியாத நிலைக்கு வந்துவிட்டன. இளைஞர் சமுதாயம் விழிப்பாயிருந்து, கட்டுப்பாட்டின் அவசியத்தை உணருமேயானால், தீமைகளிலிருந்து நாம் நம்மைக் காத்துக் கொள்ளமுடியும். இப்புத்தாண்டு நாளில், பண்பாட்டுக்கென ஓர் இயக்கம் வரவேண்டியதன் தேவையை நாம் சிந்திப்போமாக.''

3) சிறிய விஷயந்தான்

('தமிழ்சினிமா' பொங்கல்மலர் 12-1-1963)

''மேனாட்டார் தொடர்பால் வாழ்த்து அனுப்பும் முறை நம்நாட்டில் வந்தது. பொங்கல் திருநாளில் வாழ்த்து அனுப்புகிறோம். கிறிஸ்தவர்கள் கிறிஸ்து பிறந்த நாளைக்கும், புத்தாண்டிற்கும் வாழ்த்து அனுப்பும்போது, ஏசுநாதர் படம், குழந்தைகள் படம் இவற்றை அனுப்புவர். உழவுத்தொழில் இல்லையேல் அன்றாட நடைமுறை வாழ்வு நடக்காது என்று அறிந்து கூறிய தமிழர் இன்று, உழவனையும் காளையையும் கலப்பையையும் விட்டுவிட்டு, திரைக்கவர்ச்சியைக்காட்டும் வாழ்த்துக்களை அனுப்புகின்றனர். ஏர்உழவனும், போர்மறவனும், தொழிலாளியும் நம் வாழ்த்துக்களில் இடம் பெற வேண்டும். உழவுக்கும் தொழிலுக்கும் நடத்தும் விழா நம் பொங்கல் விழா.''

4) இளைஞர்களுக்கு
('எண்ணம்')

"அரசியல் என்பதில் இருவல்லரசுகளுக்கிடையே நாம் நடு நிலைக்கொள்கையைக் கடைப்பிடித்தது கண்டு, அவ் வல்லரசுகள் கூட அதனை விரும்பலாயின. சீரிய, புதிய பொருளாதாரத் திட்டங்கள் நாட்டில் செயல்படவேண்டியது அவசியம். பண்டை நாளில் கோயில் கலைக்கூடமாக இருந்தது. ஊர்தோறும் கலையை நாம் வளர்க்க வேண்டும். இலக்கியமும் கலையும் மனத்தைச் செம்மைப்படுத்தும் வண்ணம் இருத்தல்வேண்டும். விடுதலைக் கால வரலாறு சரிவர உருவாக்கப்பட வேண்டியதால், அதற்கான முயற்சிகளில் ஈடுபடல் வேண்டும். நல்ல சமுதாயம் உருவாக இளைஞர் கூட்டம் செயலாற்றவேண்டும்."

5) போரும் பொங்கலும்
('தினத்தந்தி' பொங்கல் மலர்)

"போர்முனையும் ஏர்முனையும் தொடர்புடைய ஒன்று. ஏர்முனையில் உழைத்தவனின் உழைப்பிற்கு நன்றிசொல்லும் விழா, பொங்கல்விழா. உணவிற்காகப்பிறர் கையை எதிர்-பாராத அளவிற்குத் தன்னிறைவு அடைய உழைத்து உயர-வேண்டும். போர்முனையில் ஈடுபட்டு உழைப்போர் குடும்பத்தைக் காக்க வேண்டும். ஏர்வீரர், போர்வீரர் ஆகியோர் படத்தையே வாழ்த்துமடலில் அனுப்ப வேண்டும். அப்படியில்லாமல், நடிக, நடிகையர் கவர்ச்சிப்படம் வெளியிட்டு, மக்கள் ரசனையைப் பாழ் செய்வது உழைப்பவனுக்குக்காட்டும் நன்றியை மறக்கும் செய-லாகும். பழங்காலத்தில், உடல்-உள்ள-வலிமையுடன் மஞ்சு விரட்டில் விளையாடி வீரம் விளைத்த வீரன்போல, எல்லையில் போராடி, பகைவரிடமிருந்து நாட்டைக்காப்பவனையும் உணவு தருபவனையும் இன்று எண்ணிப் போற்றுவோமாக."

6) நல்லவர்கள் பெருக
('தமிழ்நாடு' பொங்கல் மலர் 14-1-1964)

"பொங்கல் போன்ற நாட்களில் மட்டுமல்லாது நாள் தோறும் நல்லுணவு உண்ணுமளவிற்கு நாட்டில் வளம் பெருக

வேண்டும். ' நாட்டிலே யோக்கியத்தன்மைபெருகும் சூழ்நிலையை உருவாக்குங்கள் ' என்று அமைச்சர் ஒருவர் கூறியுள்ளது எழுத்தை நம்பி வாழ்வோருக்கு ஏற்றது. இந்நாட்டில் தோன்றிய குறள், கீதை, பாரதம் போன்ற இலக்கியங்கள் முதல், நேற்றுத் தோன்றிய பாரதி கவிதை வரை அறத்தைத் தான் பாடுகின்றன. தம்முடைய வறுமையை மறந்து விட்டு, மக்களை உயர்த்தி நல் வாழ்வு வாழுமாறு பாடினர், எழுத்தாளர்கள். பழைய புலவர்களை அறநெறித் தூதுவராகவே மதித்தனர். புத்தகம் வெளியிடும் துறையில் கூட ஊழல் பெருகுதலை அரசு கவனித்தல் வேண்டும். நல்ல சூழலை வளர்க்க முன்வரும் எழுத்தாளனின் தொழிலைக் கேடு சூழாது காக்கும் பொறுப்பு அரசினுடையது."

7) வளம் பொங்க வழி

(' தினத்தந்தி ' *16-1-1964*. சென்னைப்பதிப்பு)

" ஜனநாயகம், சோஷலிசம் என்பது அரசியலில் அதிகம் அடிபடுகிறது. கேட்க இனிமையாக உள்ளது. அடிப்படைத் தேவையான உணவு அனைவர்க்கும் கிட்டாத அளவிற்கு அரிசி விலை ஏறிச்செல்வதைத் தடுக்க வேண்டும். அரிசியில் சோஷலிசம் வேண்டும். உற்பத்திப் பெருக்கம் இன்று குழந்தைகளின் உற்பத்தியில் மட்டும் நடக்கிறது. சீனப்போரை எதிர்ப்பது போல, வறுமையையும் எதிர்த்துப் போரிட வேண்டும். அந்த சோஷலிசம் அரிசிப்பங்கீட்டில் கடைப்பிடிக்கப்படாவிடில், ஆக்கும் சக்தியுள்ள மனிதன், ஒருசிலரிடம் குவிந்துள்ளதை அழிக்க முற்படுவான். ' சின்னக்கவலைகள் ' மக்களைத் தின்று விடாது காக்க அரசு ஆவன செய்ய வேண்டும். "

8) சமுதாய உணர்ச்சி

(The Children's Garden School Entertainment Souvenir — ' குழந்தைகள் தோட்டப்பள்ளி மனமகிழ் மலர் ' *1967*)

" ' அறஞ்செய விரும்பு ' என்று பிள்ளைகளுக்குக்கற்றுக்கொடுக்கிறோம். 'அ' மொழியின் முதலெழுத்து; அறஞ்செய்வது

தலையாய செயல். இவ்விரண்டையும் இணைத்து இளமையிலே ஊட்ட முயல்கிறோம். பழைய இலக்கியம் யாவும் அறத்தையே பாடும். நம்மால் எந்த அளவிற்கு முன்னோர் வழி கடைப்பிடிக்கப்பட்டுள்ளது? இலக்கியமும் முன்னோரும் கோயில்களும் இருந்தும் நம்மிடம் மனிதாபிமான உணர்வும் சமுதாய உணர்வும் ஏற்படவில்லை. அறத்தில் எல்லாம் தலையாய அறமான கல்வி புகட்டும் அறம் நடக்கும் பள்ளிகள், 'பொதுச் சொத்து என்பதால் வசதிமிக்க ஊர்களில்கூட வசதியின்றி வாடுகின்றன. இப்பள்ளியை நடத்தும் அம்மையார் எவ்வித வேறுபாடுமின்றிப்பள்ளியை நடத்தி, இளைய சமூகத்தை உருவாக்கி வருகிறார். சிறிதளவே பொருள் ஈட்டினாலும் அதிலும் சிறிதுதந்து இவ்வறத்தை வளர்த்து நம் சமுதாய உணர்வால் நற்சமூகத்தை உருவாக்குவோம்.''

VII தலைவர்கள்

1) காந்தியடிகள்

(1) வீரப்போர்த்தலைவன்
('கலைக்கதிர்')

''உலகமே வியக்குமாறு, சத்தியாக்கிரகம் மூலம் சாதனைபுரிந்த காந்தியண்ணலுக்குப்பின், உரிமைபெற்ற நாட்டில் இளைஞரை வழிநடத்திச் செல்லத் தலைவன் தேவைப்படுகிறான். எச்சூழ்நிலையிலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்பவனே பிறரை வழிநடத்த முடியும். தீமையை இனம் கண்டு கொண்டு அவற்றை ஆராய்ந்து அதிலிருந்து காக்கும் திறனும், தீமையை எதிர்ப்பதால் வரும் துன்பத்தைத் தாமே அநுபவித்துப் பிறரை வாழ்விக்கும் பண்பும் காந்தி அடிகளிடம் காணப்பட்டன. அஞ்சாமையும் முந்திச்செயல் புரியும் திறனும் தலைவனுக்கு வேண்டும். 'வெற்றியின் ரகசியம் தனக்கென எதையும் சேர்க்காது, பிறருக்காகவே வாழ்தலில் உள்ளது' என்று தலைவன் உணர்ந்து செயலாற்ற வேண்டும்.''

2) காந்தியடிகளின் கடவுள்
('கலைக்கதிர்' 1969)

''இந்நூற்றாண்டின் முற்பகுதியில் மந்திரச்சொல்லாக விளங்கிய பெயர் காந்தியின் பெயர். அவர் வழி இறைவனிடம் நம்பிக்கை கொண்டவழி. அவர் எல்லா உயிர்களிலும் கடவுளைக்-கண்டார்; விக்கிரக ஆராதனையை ஏற்றாலும் முற்றும் அதை ஏற்கவில்லை. கடவுளை ஏழையிடமும் பிறஉயிர்களிலும் கண்டு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என வாழ்ந்தார். உண்ண மறந்தாலும் தியானத்தை மறக்காத அவர், சமயப் பிரச்சாரம் செய்வதைவிட, நெறியோடு வாழ்வதே சமயப் பணி என்றார். மக்களுக்குப் பணி செய்வதே உண்மையான பக்தனின் பணி என்றார். எங்கு துயர் வரினும் அதைத்துடைக்க ஓடினார். இன்று பல தலைவர்களிருப்பினும், அவர் போல, தூய அன்பின் உருவ-மாகக் கடவுள் வழியை நம்பும் சிறந்த தலைவர் யாருமிலர்.''

2) வ. உ. சி.

1 வரலாற்றின் ஒரு ஏடு
(வ.உ.சி. மலர் 1962)

''கடற்படைகொண்டு வாணிகம் செய்த புகழ்பெற்ற தமிழர் பரம்பரையில் வந்த வ. உ. சி., பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து—அவர்கள் வலிமை வாய்ந்த கப்பல் வாணிகத்தை எதிர்த்து—கப்பல் விட்டார். அது வணிகக் கப்பலாயினும் அதுவே முதல் சுதந்திரப் போர்க்கப்பல். வழக்கறிஞருக்குப்-படித்து, வசதியான வாழ்வை நாடாது, நாட்டிற்காகத் தன்-னலத்தைத் துறந்தார், வ. உ. சி. தன்னலத்தை மறந்து நாட்டிற்-கென வாழ்ந்த பாரதி, வ. உ. சி., பகத்சிங் போன்றோர் ஏராளம். பல துண்டுகளாக இருந்த நாட்டை ஒன்றாக இணைத்த இணையற்ற வீரவரலாறு நம்விடுதலை பெற்ற வரலாறு. வ.உ.சி. அதில் ஒரு பொன்னேடு. அவ்வரலாறு உண்மையான நாட்டுப்பற்று உள்ள-வர்களால் எழுதப்படாவிடில், நம்நாடு 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி' என்ற பாடல் பொருளாக ஆகிவிடும்.''

3) திரு. வி. க.

1) 'தமிழ்ப்புயல் திரு. வி. க.'

(திரு.வி.க. உருவமைப்பு நாண்மலர் 1973)

"மொழிப்பற்றுடைய சிலருச்கு நாட்டுப்பற்று இருப்பதில்லை. திரு. வி. க. தமது ஆழ்ந்த தமிழ்ப்புலமையோடும் மரபிலுள்ள பற்றுதலோடும் நின்றுவிடாது, தம்கால உலகில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்களைக் கண்டறிந்தார். காந்தியடிகள் நடத்திய போராட்டத்தில் பங்கு கொண்டார். பெண்விடுதலைக்-காக நாடெங்கும் சுற்றி, பெருமுழக்கம் செய்தார். தொழிலாளர் இயக்கத்தில் பங்குகொண்டு, அவர்களுக்காக உழைத்தார். சூறுவளி போலவும் புயல் போலவும் சுழன்று பேசினர். நினைப்பு, உணர்வு, பேச்சு, எழுத்து, இவைகளால் என்போன்ற எண்ணற்ற இளைஞர்களைத் தட்டிஎழுப்பினர். பாரதியின் கையில் தமிழ்க் கவிதை புத்துருவும், புத்துயிரும், புத்துணர்வும் பெற்றது போல, திரு. வி. க. வின் கையிலிருந்து புதிய தமிழ் உரைநடை பிறந்தது. திரு. வி. க. வின் நடை எளிய நடை. மின்வெட்டுப் போன்று சிறு சிறு சொற்றொடர்; தொடரமைப்புடன் ஆழ்ந்த சிந்தனைகளால் வரும் நடை. காந்தியவாதி ஆனபோதிலும், மார்க்சிய சிந்தனைக்-கும், காந்திய சிந்தனைக்கும் பாலம் அமைக்க முயன்ற முதல் சிந்தனையாளர். விரும்பி எளிய வாழ்க்கையை மேற்கொண்ட தமிழ் முனிவர்; தமக்கென வாழாப் பெருநெறியாளர்."

அகிலன்
படைப்புகள் பற்றிய
திறனாய்வுகள்

அகிலன் சிறுகதைகள் பற்றிய ஆய்வுகள்

'அகிலன் ஒருசிறுகதை ஆசிரியர்'

கட்டுரையாளர்: திருமதி அன்னபூரணி சந்திரசேகரன்

தமிழாக்கம்: திரு. ரங்கதுரை வேலன் (ரதுலன்)

1966 ஆம் ஆண்டு ஏப்ரலில் மலேசியா- கோலாலம்பூரில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் மாநாட்டின் ஆராய்ச்சிக் கருத்-தரங்கில், மலேசியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி அன்னபூரணி சந்திரசேகரன் அவர்களால் ஆங்கிலத்தில் படிக்கப் பெற்ற கட்டுரையின் தமிழாக்கம் 'நெல்லூர் அரிசி' என்ற அகிலனின் சிறுகதைத் தொகுப்பில் பக்கம் 5 முதல் 20 முடிய இடம் பெற்றுள்ளது.*

"அகிலன் கதைகள் பலவகையானவை. குடும்ப வாழ்க்கை, குழந்தைகள் வறுமை, ஆண்-பெண் இயல்புகள், சமூக அநீதிகள் இவற்றைப்பற்றியெல்லாம் அவர் எழுதுகிறார். இந்தியாவில் கைம்பெண்களுக்குரிய துயர்பற்றியும், பரவலாக அங்கிருக்கும் வறுமைபற்றியும் நுணுக்கமாகக் கலைத் தன்மையோடு விமர்சனம் செய்கிறாரே தவிர,வெளிப்படையான பிரச்சாரச் சாதனங்களாகத் தம் கதைகளை மாற்றவில்லை. அவரைச் 'சமுதாயத்துக்குச் சவுக்கடி கொடுப்பவர்' என்று அறுதியிட்டுச் சொல்லிவிட முடியாது. சுற்றியிருப்பவற்றை அவர் கண்டு எழுதுகிறாரே தவிர, அவற்றில் அவர் தம்மை நேரடியாக ஈடுபடுத்திக் கொள்வது இல்லை.

---

* A Discussion on Akilan As A Short Story Writer. — Annapoorani Chandrasekaran From page 296 to 303 in *Proceedings of the First International conference Seminar of Tamil studies.* Kuala Lumpur-Malaysia, April 1966. Volume II International Association of Tamil Research. First edition April 1969

விரைவில் தீர்க்கமுடியாத அளவுக்கு வறுமை நாட்டில் இருக்கிறது என்பதன் உருவகமே அவர், வறுமை பற்றி எழுதிய கதைகள். பிச்சைக்காரர்கள் பற்றிய கதைகள், வாய்க்கும் வயிற்றுக்கும் போதாத வாழ்வைக்காட்டினலும் மனிதர்கள் வாழவேண்டும், அன்பு செலுத்தவேண்டும் என்பதைச் சித்திரிப்பதாகவே இருக்கின்றன. மனித சுபாவத்தைப் புரிந்து கொண்டு எழுதுவதில் வல்லவரான அகிலனின் பெண் பாத்திரப்படைப்புக்கள் சிலவற்றைக் காணும்போது, பெண் எழுத்தாளர்கள்கூட அவற்றை மிஞ்ச முடியாது என்று தெரிகிறது. பெண்களின் இயற்கையான சுபாவம் பலவகைகளிலும் ஆசிரியரால் ஆராயப்பட்டிருக்கிறது. வாழ்க்கையின் அன்ருட நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்கிச் சமூகத் துன்பங்களினல் மனங்கலங்கும் தலைசிறந்த எழுத்தாளர் அவர்.''

'சிறுகதைச் செல்வம்'

நூலாசிரியர்: சாலை இளந்திரையன்

வெளியீடு: காலயம், சென்னை - 5.

முதற்பதிப்பு: 1966. விலை: ரூ. 3. 75 பக்கங்கள். 232.

இருபது சிறுகதைகளைப் (ஓர் ஆசிரியருக்கு ஒரு கதை) பற்றிய ஆய்வு இந்நூல். இதில் அகிலனின் 'மனிதர்கள்' என்னும் சிறுகதை பற்றிய ஆய்வு பக்கம் 156 முதல் 165 முடிய இடம் பெற்றுள்ளது.

''ஒரு நாலணு கிடைப்பதாக இருந்தால் மனிதன் எந்தத்தில்லுமுல்லும் செய்யத் தயங்குவதில்லை. சமூகத்தில் புரையோடிவிட்ட இந்த நோயை ஒரு 'கண் தெரியாத' பிச்சைக்காரனின் ஒரு நாள் அனுபவத்தின் மூலம் விவரிக்கிருர் அகிலன். அந்தக் கதை தான் 'மனிதர்கள்'. சிறுகதைக் கலையின் சில உத்திகளைத் திறம்படக் கையாள்வதிலும் சிக்கலில்லாமல் கதையை நடத்தி முடிப்பதிலும் அகிலன் பெரு வெற்றி கண்டுள்ளார் என்பதில் ஐயமில்லை. சமூகத்தைக் கூர்ந்து கண்டு, தான் கண்டதைப் பிறருணருமாறு கலையாக்கும் திறன் அமையாததாலே பலரது

சமூகக் கதை கட்டுரையாகி விட்டது. இந்த ஆபத்தைத்தாண்டி வெற்றி பெற்றுள்ளதை அகிலன் பல கதைகளில் பறைசாற்றி-யுள்ளார். 'வெட்கம்', 'மனிதர்கள்' என்ற இருகதைகள் இவ்வெற்றியை என்றும் பறைசாற்றும். நாம் நாள்தோறும் பார்த்து வரும் 'நம்மையே' நமக்கு அகிலன் காட்டுகிறார். பசியே இல்லாத பணக்கார அம்மாளைக் கதையில் காட்டித் தம் கருத்தை மேலும் ஆழமாக்கிக் கொண்டார். சமூகத்தில் பலரைப் பற்றிக்கொண்டு உள்ள 'பட்டினி மனப்பான்மை'யைக் காட்டுகிறார். எல்லோரையும் சிந்திக்கச் செய்கிறது இந்தக் கதை. இது சாதாரண வெற்றியா, என்ன?''

'தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்'
நூலாசிரியர்: கா. சிவத்தம்பி.

விற்பனை உரிமை: பாரி நிலையம், சென்னை – 1.

முதற் பதிப்பு: 1967. விலை: ரூ. 2. 75. பக்கங்கள் - 160.

'சிறுகதை வளர்ச்சியில் புதியயுகம்' என்னும் பதினோராம் பகுதியில் அகிலன் கதைகள் பற்றிப் பக்கம் 93, 94, 95, ஆகியவற்றில் கூறுவது:

''விரசமற்ற முறையில் ஆண், பெண் உறவை விவரித்து எழுதிய யாவருள்ளும் முக்கியமானவர் அகிலன். ஆண்—பெண் உறவில் காதலுக்குரிய இடத்தையே தனது கதைப்பொருளாகக்கொண்டு எழுதத் தொடங்கிய இவர், அக்காலத்தில், பிறஎழுத்தாளர்களிடம் காணப்படாத உணர்வாழத்துடனும் விவரணத்திறனுடனும் தன் கதைகளை எழுதினார். காதல் நிலையில் ஏற்படும் உணர்ச்சிச் சிக்கல்களையும் உணர்வுப் போராட்டங்களையும் சித்திரிப்பதில், அகிலன் சிறந்து விளங்கினமையால், அவரது கதைகள் இலக்கியத்தரம் கொண்டு விளங்குகின்றன. சிறுகதையாக்கத்தின் நுட்பங்களை உணர்ந்து எழுதுபவர். அகிலன் இன்று நாவலாசிரியராகவே பரிணமித்துள்ளாரெனினும், அவர் ஆரம்பகாலத்தில் எழுதிய சிறுகதைகள் அவருக்குச் சிறுகதை வரலாற்றில் முக்கியமான ஓர் இடத்தை அளிக்கின்றன.''

'தமிழ்ச் சிறுகதைகள் ஒரு மதிப்பீடு'
நூலாசிரியர்: ச. செந்தில் நாதன்

வெளியீடு: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை-2.

முதற் பதிப்பு :*1967*. விலை : ரூ. *2.00*. பக்கம். **100**.

'ஆகஸ்ட் புரட்சிக்கு முன்னும் பின்னும்' என்னும் பகுதியில் அகிலன் கதைகள் பற்றிப் பக்கம் 73—74 ல் கூறுவது :

"காதலைப் பற்றி எழுதப்படும் கதைகள் எல்லாம் வெறும் பத்திரிக்கைக் கதைகள் என்ற நிலைக்கு வந்துவிட்டன. தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களில் காதலை அடிப்படையாகக் கொண்டு அதிகம் கதைகள் எழுதியவர் அகிலன் என்று தான் சொல்ல வேண்டும். அவர் கதைகள் பற்றிச் சிறப்பாக ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், அது நடையைப் பற்றியதாகத் தான் இருக்கும். அவர் நடை எளிய நடை; மிகத் தெளிவான நடை. அது சிக்கலில்லாமல் தொய்ந்து போகாமல் ஒரேசீராகப்போகின்றது."

'அகிலனின் மிக அண்மைச் சிறுகதை'
கட்டுரையாளர்: டாக்டர் ந. சஞ்சீவி

இக்கட்டுரை, சென்னைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியிட்டுள்ள **'இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும்'** என்னும் நூலில் பக்கம் 93 முதல் 103 முடிய இடம் பெற்றுள்ளது. 572 பக்கங்களை உடைய இந்நூலின் விலை: ரூ.20-00. 1974 ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வந்துள்ள இந்நூலின் பொதுப் பதிப்பாசிரியர் டாக்டர் **ந. சஞ்சீவி.**

"இக்கட்டுரையின் திறனாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பது, கல்கி தீபாவளி மலரில் (1973) திரு. அகிலன் எழுதியுள்ள **'எங்கோ ஓர் இதயம்'** சிறுகதை. சோவியத் ஒன்றியத்தில் நடைபெற்ற ஆசிய-ஆப்பிரிக்க எழுத்தாளர் மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்த அகிலனுக்கு ஏற்பட்ட மிகச்சிறிய - ஆனால் மிகச்சிறந்த - அனுபவத்தைக் கருவாகக்

கொண்டதே இச்சிறுகதை. என்னைப் பொறுத்த வரையில் தமிழக எழுத்தாளர் ஒருவர் அயலக அனுபவம் ஒன்றைக் கருவாக அமைத்து எழுதிய பயணச் சிறுகதை இதுவே எனலாம். எங்கோ ஓர் இதயம் தன்பால் அன்பு செய்ததை நினைந்து நெகிழ்கிறார். மனித குல ஒருமைப்பாட்டை மனதில் நினைந்து மறுகுகிறார். ஒவ்வொருமுறை படிக்கும்போதும் அகிலனின் எழுத்துப் பிடியில் அகப்பட்டுக் கருத்து-கற்பனை-கலை இன்பம் துய்க்கிறோம். மனித மனத்தின் உள்ளார்ந்த அமைப்பாக உள்ளது உணர்வு வெளிப்பாடு. அகிலன் சொல் அவரையும் நம்மையும் உயிருள்ள நல்ல மின்சாரக்கம்பி போல ஒன்றுபடுத்தி விடுகிறது; கொன்றுவிடுவதில்லை. உடலை மறந்து உள்ளத்தையே உள்ளும் உயர்வே உயர்வு. அதனினும் உயர்ந்த நிலை - நினைப்பற நிற்கும் நிலை-கற்பனை ஒன்றில்லாக் கவிபாடும் நிலை-மெய்யுணர்வு நிலை. அந்த நிலையில் எழுத்து-பேச்சு-ஏன் எண்ணம் தான் ஏது? அப்போது அகிலன் ‘எங்கே ஓர் இதயம்’ என்று எண்ணினார்; ‘எங்கும் ஓர் இதயம்’ என்று எண்ணாமலே எண்ணுவார். அந்நிலையில் சிறுகதை மன்னர் அகிலன் ஞான மன்னர் மன்னன் (சக்ரவர்த்தி) ஆவார்.’’

அகிலனின் ‘பசி’ சிறுகதை – ஓர் ஆய்வு

கட்டுரையாளர் : சு. வேங்கடராமன்

இக்கட்டுரை, மதுரை, மதுரைக்கல்லூரி ஆண்டு மலரில் (1973-1974) பக்கம் 42 முதல்-44 முடிய இடம் பெற்றுள்ளது. 169 பக்கங்களை உடைய இம்மலரின் முதற்பதிப்பு 1974இல் வந்துள்ளது.

‘‘பிறமொழிகளில் மொழி பெயர்ப்பானதால் அகிலனுடைய கதைகள் சிறந்த கதைகள் என்பது உண்மையல்ல; சிறந்த கதையின் இலக்கணம் பெற்ற சிரஞ்சீவியாக மலர்ந்ததால் பிறமொழிகளும் அப்பெருமையைப் பங்கிட்டுக் கொண்டன. கதையின் அடிநாதமாக ஒலிக்கும் கருப்பொருளை விளக்கும் வண்ணம் தலைப்பும், முதல்வரியும், கதையின் முடிவுவரியும் அமைதல் வேண்டும். வறுமையால் வாடும் ஏழை விவசாயக் குடும்பம் பிழைக்கச்சென்ற இடத்தில் பசியால் வாடி இறக்கின்ற

கொடுமையைக் கலை நயத்துடன் காட்டுவது ஆசிரியரின் தனித்திறமை. கதையின் முதல் வரியிலே வறுமை காட்டும் அவலத்தைக் காட்டி, இதை மையமிட்டே கதை செல்லப்போவதை ஆழமாகச் சித்திரிப்பார். கதையின் தலைப்பிலே கதைப்பாடுபொருளை உணர்த்தும் திறனும் இதில் உள்ளது. கதையின் துவக்க வரிகளிலும் தலைப்பிலும் எப்படி ஆர்வத்தை ஊட்டி, கதை விறுவிறுப்புடன் செல்லக் கடைக்காலிடுகின்றாரோ, அவ்வாறே கதையின் இறுதி வரிகளிலும் உயிர்த்துடிப்பான ஓரிரு வாக்கியங்களை இட்டு, பிறவற்றை ஆழ்ந்து உணரும்வண்ணம் அமைப்பார். ஏழைக்குடும்பத்தாரின் அறியாமைக்குப் பச்சாதாபமாக ஒரு சொல்லையோ, பசியால் இறந்த குடும்பத்தைக் கண்டு பிறர் கூறிய சொல்லையோ அமைக்காது விட்டு விட்ட திறன்தான் இக்கதையின் ஜீவநாடி. இவையெல்லாவற்றையும் உய்த்துணர வைத்து, முடியாத பிரச்னைக்கு முடிவு காண வேண்டியதன் அவசியத்தைக் காட்டிக் கதையை முடித்துவிட்டார். கதை முடிந்து விட்டது என்பது தவறு. முடிவில்தான் சிந்தனைக்குத் துவக்கம் வருகின்றது.''

அகிலனின் சிறு கதைகளில் 'எழுத்தாளர்'
கட்டுரையாளர் : சு. வேங்கடராமன்

இக்கட்டுரை, இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் 1974-ல் வெளியிட்ட 'ஆறாவது கருத்தரங்கு - ஆய்வுக் கோவை' நூலில் பக்கம் 587 முதல் 592 முடிய இடம் பெற்றுள்ளது. பாண்டிச்சேரி தாகூர் கலைக்கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடான 953 பக்கங்களை உடைய இந்நூலின் விலை ரூ. 30. 00.

''எழுத்தாளனுக்கு ஏற்படும் அக வாழ்வுச் சிக்கலை இரு கதைகளிலும், புறவாழ்வுச் சிக்கலை ஐந்து கதைகளிலும் உடைய ஏழுகதைகள் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. ஏழுகதைகளிலும் சிக்கலமைப்பு ஏற்படும் விதம் — போராட்டம் நிகழ ஏதுவான இருவருக்கு இடையேயான உறவின் அடிப்படையினைக் கோணக் கட்டுப்பாடு முறையில் வரைபடம் கொண்டு விளக்கும் தன்மை — எழுத்தாளன் படைப்பில் காணப்படும் சில ஒற்றுமைத்

தன்மைகள், புறச்சிக்கல் வரும் கதைகளில் 'பணம்' பெறுமிடம், எழுத்தாளர்சமூகம் காட்டப்பெறும் முறை இவற்றை ஆய்வதே இக்கட்டுரை. பணத்தை ஒரு கருவியாக எண்ணுது, எப்படியும் பணம் சேர்ப்பது என்று பிறரை எத்திப் பிழைப்பவரெல்லாம் எழுத்தாளஞக மாறினுல், எழுத்தால் தனிமனிதனேயும் சமூகத்தையும் உருவாக்கவல்ல எழுத்தாளன் எல்லாம், தன்னே அந்நியப்படுத்திக் கொண்டு விடக்கூடிய சூழ்நிலே உருவாகிவிடலாம் என்பதை 'எத்தனும் எழுத்தாளனும்' கதையில் வலியுறுத்துவார். எழுத்தாளர் படைப்புகள் பெரும்பாலும் சமுதாயத்தில் 'வாழத் தெரிந்தவர்களால் (பணத்தை மட்டும் போற்றி வாழ்பவர்) வாழத் தெரியாதவர்கள்' என்று அழைக்கப்படத் தக்கவர்களாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில கதைகளில் ஏற்படும் நிகழ்ச்சிகள், அகிலன் அவர்களுக்குத் தம் வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்கள். எனவே, எழுத்தாளரின் எழுத்திற்கு அவருடைய சொந்த அனுபவங்கள் துணேயாகும் தன்மையை அறிவதால், எழுத்தாளரின் தனிவாழ்வை மறந்துவிட்டு, அவர் படைப்பை ரசிக்க முடியாது என்பதை அறியலாம்.''

அகிலனின் சிறுகதைகளில் விலேமகளிரும் விதவையரும்

கட்டுரையாளர் : சு. வேங்கடராமன்

இக்கட்டுரை, மதுரைப்பல்கலேக்கழகத் தமிழ்த்துறை வெளியீடான 'வையை' - வியாழவட்டக் கருத்தரங்கக் கட்டுரைகள் நூலில் பக்கம் 91 முதல் 108 முடிய இடம் பெற்றுள்ளது. 300 பக்கங்களே உடைய இந்நூலின் முதற்பதிப்பு 1974 இல் வந்துள்ளது. 12 ரூபாய் விலேயுள்ள இதன் பதிப்பாசிரியர்கள், டாக்டர் முத்துச்சண்முகன் & டாக்டர் இராம. பெரியகருப்பன்.

''விலேமகளிரும் விதவையரும் அந்நிலேயை அடையக் காரணமாயிருந்தது எது, அவ்வாருனபின் அவர்கள் நிலே, சமூகத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள இடம், விதவையரின் துயருக்கு ஆசிரியர் தரும் தீர்வு, விதவை மறுமணம், விலேமகளிர் படைப்பில் காணப்படும் ஒற்றுமைகள் ஆகியவற்றைப் பதின்மூன்று, சிறுகதைகள் வாயிலாக நோக்குதல் இதன் நோக்கம்.

விலைமகளிரைப் பிறப்பால் கணிகையாகப் பிறந்தவர், கணவன்-காதலன் – இவரால் கைவிடப்பட்டு விலைமகளிரானவர், ஆண் துணையின்றி விலைமகளிரானவர் என்று மூன்று வகைப்படுத்தலாம். இப்பெண்கள் உடலால் கெட்டாலும் உள்ளத் தூய்மையுடன் 'சித்தம் அழகியராக' வாழ்ந்து ஒருவனுக்கு ஒருத்தி என்று கூறும் பண்பை மேற்கொள்ள விழையும் நிலையில், புறக்கணிக்கப்பட்ட தாழ்நிலையிலிருந்து மேனிலை நோக்கிச்செல்லும் போக்கில் விளங்க, நடுத்தர- மேல்தர வகுப்புப்பெண்கள் பணத்திற்காக வீடு, வாசல், கணவன், குழந்தை ஆகிய அனைத்தையும் மறந்து, மனத்தாலும் தாழ்ந்த நிலையை அடைகிற போக்கில் கீழ்நிலை நோக்கிச் செல்பவராகத் திகழ்கின்ற சமூகநிலையை இப்படைப்புக்கள் அழகாகக் காட்டுகின்றன. இப்பெண்கள் பணத்திற்கு அடிமைப்பட மறுக்கின்றனர். விலைமகள் உடலால் சிலரை-பலரை - கெடுக்கலாம்; லட்சக்கணக்கான மக்களின் மனங்களை - ஆன்மாக்களை - கெடுக்கும் பத்திரிகைத்தொழிலின் போக்கினைக் கண்டிக்கும் வண்ணம் புவனாவின் படைப்பு உள்ளது. விதவையர் மறுமணத்தை ஆதரிக்கும் அகிலன், பெண்களின் மனம் மிக மென்மையாக,எளிதில் உணர்ச்சி வசப்படும் நிலையில் இருப்பதாகக் காட்டுவார். இன்றைய வாழ்க்கையில், மனிதன் பணத்திற்கு அடிமைப்பட்டு 'எங்கோ போகின்ற' நிலையை அப்படியே தம் படைப்புக்களில் காட்டுவதை அறிவோம்.''

அகிலன் நாவல்கள் பற்றிய ஆய்வுகள்

'சிநேகிதி'

கட்டுரையாளர்: க. நா. சுப்பிரமணியம்

இக்கட்டுரை 'படித்திருக்கிறீர்களா?' (2) நூலில் பதினாருவது கட்டுரையாகப் பக்கம் 119 முதல் 127 முடிய இடம் பெற்றுள்ளது. புதுத்தமிழ் இலக்கிய நூல்கள் இருபத்தி ஒன்றை ஆராயும் இந்நூல் அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை-18 என்னும் பதிப்பகத்தால் இரண்டாவது வரிசை நூலாக 1958 ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வெளியிடப்பட்டது. 175 பக்கங்களை உடைய இந்நூலின் விலை ரூ. 2.75.

"அகிலன் நாவல்களில் சிறந்ததென நான் கருதுவது சிநேகிதி. ஆரம்பமுதல் கடைசிவரை ஓட்டமாக, நீர்ப்போக்கு மாதிரி ஓடுகிற தெளிவான நடையுடன் மிகவும் சுவாரசியமாகக் கதையை நடத்திச் செல்கிறார், ஆசிரியர். காண்டேகரின் நாவல்களை ஞாபகமூட்டும் வகையில் இந்த நாவல் அமைந்து இருக்கிறது என்று எண்ணிக் கொண்டேதான் இதைப் படித்தேன் நான். கதாசிரியர் என்கிற பகைப்புலத்தில், காதல் என்கிற ஓர் உருவத்தைச் சற்று அழுத்தமாகவே, தடித்த வர்ணங்களில் தீட்டியிருக்கிறார் அகிலன். நாராயணசாமியை ஒரு லட்சிய பாத்திரமாகச் சிருஷ்டிக்க முயன்றிருக்கிறார் ஆசிரியர். தவிர்க்க முடியாதது என்று தொடர்ந்து நடைபெறுகிற சம்பவங்கள் எதையும் இதில் காணமுடியாது. காஸனோவா என்கிற காதலன் தன்மையும், நார்க்கீஸன் என்னும் பூர்வ கிரேக்க கதாநாயகனின் சுய காதல் தன்மையும் மனிதர்கள் ஒவ்வொருவரிடமும் ஓரளவுக்கு இருக்கின்றன என்று இருபதாம் நூற்றாண்டில் மனோதத்துவ சாஸ்திரம் முடிவு கட்டியிருக்கிறது. இந்த இரண்டு தன்மைகளையும் வாசிப்பவர்கள் வரையில் திருப்தி செய்விக்கிற அளவில், சுயசரிதமாக அமைந்திருக்கிறது என்பது இந்த நாவலின் தனிச்சிறப்பு."

அகிலனின் 'பாவைவிளக்கு'

கட்டுரையாளர்: பூவை. எஸ். ஆறுமுகம்

இக்கட்டுரை 'கல்கி முதல் அகிலன் வரை' நாவலாசிரியர்கள் என்ற நூலில் ஒன்பதாவது கட்டுரையாகப் பக்கம் 157 முதல் 184 முடிய இடம் பெற்றுள்ளது. இந்நூலில் 9 நாவலாசிரியர்களின் நாவல்கள் எடுத்து ஆராயப்பட்டுள்ளன. சிதம்பரம் தொல்காப்பியர் நூலகத்தாரால் 1964ஆம் ஆண்டு இந்நூல் முதற்பதிப்பாக வெளியிடப்பட்டது. 184 பக்கங்களை உடைய இதன் விலை: ரூ. 3.00.

"தணிகாசலத்தின் கண்ணீரைத் துடைக்கும் பேறு பெற்றாள் தேவகி. அவனுடைய திறந்த மனத்தினின்றும் அவனுக்குரிய கள்ளமிகு சபலமனம் வெளியேறியது! அவள் என் 'பார்வை'க்குத் தமிழ்ப்பெண்; தணிகாசலத்திற்குத் தேவகி

அக்காள். அகம், புறம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் சூழ்நிலையால் பாதிக்கப்படும் தன்மை வாய்ந்தவன் தணிகாசலம். தாமஸ் ஹார்டியின் 'The Woodlanders' என்னும் நவீனத்தில் வரும் மேரியில் உமாவை என்னல் தரிசிக்க முடிகிறது. ஆத்மாவுக்காகவே ஆத்யா கொள்கிற ஆத்மீகக் காதலை (Platonic love) படிப்படியாக வருணித்து, மன ஆழத்தின் விந்தை உணர்ச்சிகளையும் மனிதத் தன்மையின் இயந்திர கதியின் விளக்கத்தையும் ஒரு நிலைப்படுத்தி, நவீனத்தின் பிறப்புக்குகாரணமாக (purpose of the novel) உமாவையே ஓர் உதாரணமாக்கி, அவளைப் பள்ளியறைப் பதுமையாக்குவதற்குச் சட்டமின்றி, சரியான நேரத்தில் (correct juncture) அவளைச் சாகடித்து, அற்புதப் படைப்பாக்கி விட்டிருக்கிறுர் அகிலன். அகிலனிடம் ஓவியனுக்கிருக்க வேண்டிய ஆழ்ந்த புறநோக்கும், நாவலாசிரியனிடம் நாம் எதிர்பார்க்கும் பண்பட்ட இலக்கிய மனமும் இருக்கின்றன. அதனுல் தான் 'பாவை விளக்கு' நல்லதொரு குணச்சித்திர நவீனமாக (novel of character) உருவாகியிருக்கிறது.''

'அகிலனின் பாவைவிளக்கு'
கட்டுரையாளர் : இரா. தண்டாயுதம்

இக்கட்டுரை 'தமிழ் நாவல்கள் - நாவல்விழாக்கருத்துரைகள்' நூலில் பக்கம் 85 முதல் 97 முடிய இடம்பெற்றுள்ளது. 1966 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழ் எழுத்தாளர் சங்கத்தாரால் நடத்தப் பெற்ற மூன்று நர்ள் நாவல் விழாவில் படிக்கப்பெற்ற 13 கட்டுரைகள் உள்ள இந்நூல் 1966 ஆம் ஆண்டு டிசம்பரில் முதற்பதிப்பாகத் தமிழ்ப் புத்தகாலயத்தாரால் வெளியிடப்பட்டது. 171 பக்கங்களை உடைய இந்நூலின் விலை ரூ. 3.00

" தம்முடைய எழுத்தின் அநுபவத்தையே தணிகாசலத்தின் மூலம் உணர்த்துகிருரோ என்ற எண்ணம் கூட வந்தது. ஒருவர் மற்றொருவர் மீது சொரியும் அன்பு மழையில் விளைந்த பூசல்களும் போராட்டங்களுமே அகிலன் படைத்த இலக்கியத்தின் கருப் பொருள்கள். மனவியல் அடிப்படையில் எழுந்த உணர்ச்சிப் போராட்டங்கள் நிறைந்த நாவலே 'பாவை விளக்கு'. மனவியலை மையமாகக் கொண்டு தமிழில் மலர்ந்துள்ள நாவல்

களில் 'பாவை விளக்' கிற்குத் தனி இடம் உண்டு. பிரச்சினைகளே கதை மாந்தராக உருவெடுத்து விடும் வகையைச் சேர்ந்தது 'பாவை விளக்கு'. தேவகி—வாழ்விழந்து தவிக்கும் விதவையர் கூட்டத்தையும், செங்கமலம்—அன்றிருந்த தேவதாசிகளையும், கௌரி —தமிழக இல்லத்தரசிகளையும், உமா— புதுமைப் பெண்ணையும் உருவகப் படுத்தக் கருவிகளாய் வருகிறார்கள். வேறொருவகையாகவும் 'பாவை விளக்'கை உருவகப் படுத்தலாம். தணிகாசலத்தைத் தமிழ் நாட்டு எழுத்தாகவும், தேவகியைஅந்த எழுத்துக்கு வேண்டிய லட்சியமாகவும், செங்கமலத்தை எழுத்துக்கு இன்றியமையாத கலைப்பண்பாகவும், கௌரியை எழுத்துடன் இயைந்து நிற்க வேண்டிய அறமாகவும் உமாவை உண்மையை உரைப்பதற்கு வேண்டிய அஞ்சாமையாகவும் கூட உருவகப் படுத்தலாம். டால்ஸ்டாய் எழுதிய 'போரும் அமைதியும்' நாவலில் வரும் நாதஷாவிற்கு நிகரானவள், உமா. குறிப்பிடுமளவிற்குத் தீயவன் (Villain) ஒருவன் இல்லாதது இந்த நாவலின் தனிச்சிறப்பு. காதலுக்குத் திரு.அகிலன் கட்டிய உரைநடை மாளிகைதான் 'பாவை விளக்கு'.''

'சித்திரப்பாவை'
(அகிலன் எழுதிய நாவல்)

கட்டுரையாளர்: இரா. தண்டாயுதம்

இக்கட்டுரை, சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வெளியிட்ட 'வளரும் தமிழ் இலக்கியம்' நூலில் 'திறனாய்வுகள்' என்னும் பகுதியில் பக்கம் 145 முதல் 154 முடிய இடம்பெற்று உள்ளது. திரு. அகிலன், திரு. ரா.ராஜதுரை அவர்களால் பதிப்பிக்கப் பெற்ற இந்நூலின் முதற்பதிப்பு 1970ல் வந்தது. 196 பக்கங்களை உடைய இந்நூலின் விலை: ரூ. 5. 00.

''சமுதாய உணர்வுள்ள திரு. அகிலனின் எல்லாக் கலைப்படைப்புக்களிலுமே அவ்வக்காலச் சமுதாயப்போக்குகள் பின்னணியாக அமைக்கப்பட்டிருந்தாலும் இதில் சமுதாயப்பின்னணி சற்று அழுத்தமாகவே பதிந்திருக்கிறது என்று கூறலாம். கதைமாந்தர் படைப்பில் உள்ள குறிப்பிடத்தக்க சிறப்பு அவர்களுக்கிடையில்

காட்டும் முரண்பாடு என்று கூறலாம். முற்றிலும் மாறுபட்ட பண்புடைய இருவர் இல்லறத்தில் இணையும்போது, அப்பண்புகள் எவ்விதம் அவர்களைப் பாதிக்கின்றது என்பதை அவர்களுக்கிடையில் நுண்ணிய முரண்பாடுகளைப்படைத்து, பாத்திரப்படைப்பில் ஒரு சிறப்பை நாவலாசிரியர் ஏற்படுத்தியுள்ளார். மனிதர்களுடைய சின்னஞ்சிறு உணர்ச்சிகளுக்குள்ள ஆற்றலையும், அவைகளை அவர்கள் வெளிப்படுத்தும் பாங்கையும் நிகழ்ச்சிகள் படம் பிடித்துக்காட்டும் வகையில் படைக்கப் பட்டுள்ளன. நாவலாசிரியர் அகிலன் அவர்களின் நடை எளிமை, தெளிவு, ஆழம், கிண்டல், அழுத்தம் கொண்ட சரளமான நடையாகும். சொல்ல வேண்டியதைச் சுருக்கமாக, தெளிவாக, உணர்ச்சி கலந்த நடையில் சொல்லுவதில் இவர் வல்லவர்.''

அகிலனின் 'சந்திப்பில்' சூழல்
கட்டுரையாளர்: ப. விசயலட்சுமி

இக்கட்டுரை, கேரளப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இளங்கோமன்ற வெளியீடான 'இளவேனில்' மலரில் பக்கம் 99 முதல் 106 முடிய இடம்பெற்றுள்ளது. 128 பக்கங்களை உடைய இம்மலரின் விலை: ரூ 4 - 50. முதற்பதிப்பு 1972ல் வெளிவந்தது.

''புறநோக்காகிய விளக்கக்காட்சியாகவும், தன்னிலை நோக்காக ஒரு கதைப்பாத்திரம் காணுவதாகவும் சூழல் அமையும். வீடு, அறை, ஜன்னல், கதவு போன்றவை கதை மாந்தரோடு தொடர்பு கொள்வதும் தரப்படுகின்றன. புவனாவின் தனிஅறையில் மகிழ்ச்சி, துன்பம் என்னும் இருவேறு சூழல்களில் புவனாவைக் காட்டுவார். கதை மாந்தர் வாழ்வு, சமுதாயம், கல்வி, சாதி இவற்றில் பணம் பெறுமிடமும் விளக்கப்படுகிறது. இயற்கைச் சூழலாக நிலம், நீர், வானம் அதைச்சார்ந்தவை அனைத்தும் குறிக்கப்படுகின்றன. ஊர், தோட்டம், மரம், செடி, பூ இவை பற்றித்தரப்படுகின்றன. தோட்டம் முத்தையா தேகப்பயிற்சி செய்யும் இடமாகவும் காதலரின் இடந்தலைப்பாடாகவும் அமைகிறது. சூரியன், விடிவெள்ளி, நட்சத்திரம் இவை இன்பச்சூழலுக்குப் பின்னணியாக வருவன. கதை மாந்தர் அல்லது கதை நிகழ்ச்சிக்குப்பின் புலமாகும். சூழல் அவற்றின் போக்-

கிற்குத் துணை போகும் வண்ணம் அழகூட்டுவதாக முருகியல் இன்பத்தை அளிக்கவேண்டும். 'சந்திப்பில்' சூழல் கதை நிகழ்ச்சியையோ கதை மாந்தரையோ விஞ்சாது அளவாக அமைந்துள்ளது.''

அகிலனின் சிநேகிதியில் 'காலம்'

கட்டுரையாளர்: ப. விசயலட்சுமி

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் வெளியிட்ட நான்காவது கருத்தரங்கு மலரில் இக்கட்டுரை இடம்பெற்றுள்ளது. கட்டுரை 267ஆம் பக்கம் முதல் 272ஆம் பக்கம் முடிய உள்ளது. கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடாக 1972ல் வெளியான இம்மலரின் விலை: ரூ. 20.00.

'''சிநேகிதி' கதை அதிகாலையில் தொடங்குகிறது. 4மாதகாலம் கடந்தபின் அதிகாலையில் முடிகிறது. சுருங்கிய கால அளவு நிகழ்ச்சிகள், பெருங்கால அளவு குறிக்கும் இயல்களில் நடைபெறுகின்றன. இராமலிங்கத்தின் பல ஆண்டுகள் வாழ்க்கையும், நாராயணசாமியின் பன்னிரண்டு ஆண்டு வாழ்க்கையும் ஒரு காலைப்பொழுது உரையாடலில் ஆறுவது அத்தியாயத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. சுருங்கிய கால அளவாகக் காணும் அத்தியாயங்கள் கதைக்கருவுக்கு உயிர்நிலையாக அமைகின்றன. கதையின் இறுதி அத்தியாயத்தில் இருநாள் நடக்கும் நிகழ்ச்சிகள் கதைக்கருவை முழுமை நிலையடையச் செய்கின்றன. இன்பதுன்பத்தை வெளிக்காட்டுவதுடன் எழுத்துப்பணியின் நுட்பத்தைக் கணிக்கும் கால அளவாகவும் மாதம் அமைவது குறிப்பிடத்தக்கது. இந்நூலில் மாலை என்பது இன்பத்துக்கும், துன்பத்துக்கும் இணைந்த பொழுதாக அமைகிறது. விநாடி நேரம் என்ற குறுகிய கால அளவில் உணர்வின் எல்லை கடப்பதை வெகுகாலம் தவம் செய்து நொடிப்பொழுதில் இழந்த விசுவாமித்திர முனிவரின் கதையைக் குறிப்பதன் மூலம் உணருகிறோம். வருகின்ற காலத்துக்கு நடந்துபோன காலத்தைக் காட்டுவதுதான் படைப்பிலக்கியத்தின் சிறப்புக்கள் என்பதை உணரமுடிகிறது.''

அகிலனின் 'பாவை விளக்கில்' தணிகாசலம்
கட்டுரையாளர்: ப. விசயலட்சுமி

இக்கட்டுரை, 'இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம்' நடத்திய ஐந்தாவது கருத்தரங்கின் 'ஆய்வுக் கோவை' மலரில் இடம் பெற்றுள்ளது. [கட்டுரை பக்கம் 408 முதல் 414 முடிய உள்ளது]. சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடாக 1973ல் வெளியான இம்மலரின் விலை: ரூ. 22. 00.

"தணிகாசலம் உலகப்போக்கை அறிந்து கொள்ளாத மாணவப் பருவநிலை, சமுதாயத்தைப் புரிந்து கொள்ளத் தொடங்கும் நிலை, தன் அகவாழ்க்கைப் பிரச்சனைகளைக் காணும் நிலை, என்ற நிலைகளில் படைக்கப்படுகிறான். தொடக்க நிலையில் எழுத்தாளனாகும்போது தோல்வி அனுபவங்களே அவனைக் கதை எழுதத் தூண்டுகிறது. அகவாழ்வு பற்றிய கண்ணோட்டத்தில் மனப்போராட்டம் நிறைந்தவனாகக் காணப்படுகிறான். கனவு போன்ற ஒரு தோற்ற நிலையைக் காண்பது இப்பாத்திரத்தின் இயல்புகளில் ஒன்று. மனதில் உருவாகும் எண்ணங்கள் புதிய தோற்றமாக உருவாவதை மூன்றாகப் பகுப்பர், உளவியலார். பல தோற்றங்கள் இணைவது, வேறுபடுத்திக் காட்டுவது, ஒன்றுக்குப் பதிலாக இன்னொன்று அமைவது என்பன அவை. தாஜ்மஹால் இரண்டாம் வகையையும், அகல் விளக்குத் தோற்றம் மூன்றாம் வகையையும் சாரும். தணிகாசலத்துக்கும் இவ்வியல்பு பொருந்தும்."

அகிலனின் 'நெஞ்சினலைகளில்' ஒரு கதை மாந்தன்
கட்டுரையாளர்: ப. விசயலட்சுமி

இக்கட்டுரை லண்டன் தமிழ்ச்சங்க ஆண்டுமலரில் (1972-1973) பக்கம் 154 முதல் 157 முடிய இடம் பெற்றுள்ளது.

"அகிலனின் 'நெஞ்சினலைகளில், வாசு என்பவனின் மொத்த குண உருவத்தைக்காண்பதே இதன் நோக்கம். கதை மாந்தரின் குணவியல்பினைப் பொதுவாக ஆசிரியர் தரும் சில (பாத்திர)

விளக்க வருணனைகள், செயல் போராட்டம், பேச்சு, எண்ணம், படிமம், குறியீட்டுப்பொருள் (concrete details, action and conflict, speech and thought, imagery and symbolism) என்ற நிலைகளை அடிப்படையாக்கி விவரிக்கலாம். பண்பு உருவாக்கத்தில் புறச்சூழலும் முக்கிய இடம் பெறுதலைக் காண்கிறோம். மணஉறவு என்பது வாழ்க்கையின் முக்கியமான நிலை. இவ்வுறவால் சில இயல்புகள் பெறப்படலாம். அல்லது இழக்கப்படலாம். போராட்டங்களில் தற்சோதனைக்கு (Self Analysis) உள்ளாகும் மனப்பாங்கையும் இறுதியில் காரணம் கண்டு அமைதி கொள்வதையும் தெளிகிறோம். நாம் காணும் மனிதர்களில் ஒருவனாக, சில நல்லியல்புகளும் பலவீனங்களும் உடையவனாக அமைகின்றான்.''

அகிலனின் 'புதுவெள்ளம்'

கட்டுரையாளர் : டாக்டர் சா. மீனாட்சிசுந்தரம்

இக்கட்டுரை, 'விடுதலைக்குப் பின் தமிழ்நாவல்கள்' என்னும் நூலில் பக்கம் 42 முதல் 59 முடிய இடம் பெற்றுள்ளது. சென்னை 'நண்பர் வட்டம்' நிகழ்த்திய நான்காவது கருத்தரங்கில் (1973 ஜனவரி) படிக்கப் பெற்ற கட்டுரைகளும் அந்தந்த நாவலாசிரியர்கள் அளித்த பதிலுரைகளும் தொகுக்கப்பட்டுள்ள இத்தொகுப்பின் பதிப்பாசிரியர் —தி. பாக்கியமுத்து. சென்னை கிறிஸ்துவ இலக்கியச் சங்கம் 1974 ஆம் ஆண்டில் முதற்பதிப்பாக வெளியிட்டுள்ளது. 170 பக்கங்களை உடைய இதன் விலை : ரூ. 6-00.

"விடுதலை உணர்ச்சியும் சுரண்டலை வேரறுத்தலும் கருப்பொருளின் இருபகுதிகளாகும். ஏழை, எளியவர் முன்னேற்றம், கலைத்தரம், கிராமியப்பண்பின் பெருமை, நகர ஆடம்பரத்தின் சிறுமை, வணிகர் கலப்பட நீக்கம், கள்ளச்சந்தை ஒழிப்பு, காண்டிராக்ட் ஏய்ப்பு, தொழிலாளர் முன்னேற்றம், தொழில் நிறுவனங்களை இயந்திரமயமாக்கல், தொழிற்சாலைகளைச் சமஸ்தானாதிபதிகளிடமிருந்து விடுத்தல் ஆகிய பொருட்களைக் களமாகப் பரப்பி, முருகையனைத் தலைவனாக நிறுத்தி கதை பின்னப்பட்டுள்ளது. முன்நடந்த நிகழ்ச்சிகளைக் குறுகிய அளவில் நினைப்பூட்டுவது போன்ற ஆசிரியர் அமைத்துள்ள விரகு போற்றத்

தக்கது. காந்தியடிகளின் கருத்துக்களைக் கதையுடன் கதையாய்க் கரைந்து இரண்டறப் பின்னிக் கொண்டு பாத்திரங்களின் கருத்துப் போக்கில் ஒன்றிவிடுமாறு செய்திருப்பது நல்ல திறனாகும். நீருற்றுக் கொப்பளிப்பதுபோல் நிகழ்ச்சிகளை அடுக்கடுக்காக அமைத்துக் குடிபோதையில் உள்ள மனிதனைப் போலப் படிப்பவரை இலக்கியச் சுவையில் மயக்கி நேர்மையாளரின் நெஞ்சு போல் நல்லெண்ணங்களைப் பிரித்துக்காட்டி, உயிர்ச் சிற்பங்கள் போன்ற செஞ்சொற்களால் ஆசிரியர் கதையை இழைத்துள்ளார் எனின் மிகையாகாது."

பதிலுரை

அகிலன்

1973 ஆம் ஆண்டு ஜனவரியில் சென்னை நண்பர் வட்டம் நிகழ்த்திய 'விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள்' என்ற கருத்தரங்கில், டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் 'அகிலனின் புதுவெள்ளம்' பற்றிப் படித்த ஆய்வுரைக்குப் பின் படைப்பாளரான திரு. அகிலன் அவர்கள் பதிலுரை அளித்தார். கிறிஸ்துவ இலக்கியச்சங்கம் 1974 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள 'விடுதலைக்குப்பின் தமிழ் நாவல்கள்' நூலில் கட்டுரைகளும் பதிலுரைகளும் உள்ளன. அகிலன் அவர்களின் பதிலுரை பக்கம் 60 முதல் 65 முடிய உள்ளது.

"நாட்டின் சமகால வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு கதை எழுதும் போக்கை இந்த நாட்டில் தோற்றுவித்தவர்களில் நானும் ஒருவன். காரணம் என்னிளமைப்பருவத்திலேயே அந்த வரலாற்று நிகழ்ச்சிகளால் ஈர்க்கப்பட்டவன் நான். குறிப்பிட்ட காலத்தின் வரலாற்றை வெளிப்படுத்தி விமர்சனம் செய்யும் போக்கை (Trend) உடைய நாவலாகும். இது பிற நாவல்களிலிருந்து கருப்பொருளிலும் வேறுபட்டது. நாவலின் முதலிரு அத்தியாயங்களிலேயே கதையின் சுருக்கம் உருவகமாக வந்துவிடுகின்றது. கதை முழுவதும் அந்த உருவகத்தின் விளக்கம் தான். வாழ்க்கை'என்ற ரெயில் பெட்டியில் உயர்ந்த வகுப்புக்கள் சிலருக்கு, தாழ்ந்த வகுப்புக்கள் பலருக்கு. அந்நிலையிலும் வலிமை கொண்டவர்கள் எளியவர்களுக்குரிய வாழ்க்கை வசதிகளைச்

சுற்றி வளைத்துக் கொண்டு அவர்களை வாழவிடாமல் அடித்து வருகிறார்கள். இதற்கு நாட்டின் அரசியல் அதிகாரமும் துணை நிற்கிறது. இந்தப்போக்கினை எதிர்த்துப்போராடுகிறான், நான் படைத்துள்ள முருகையன். 'காந்திய எதார்த்தவாதம்' என்ற புதிய ஒரு இலக்கியக் கொள்கையையும் அதற்கேற்ற உருவத்தை-யும் இதில் சோதனை செய்து பார்த்திருக்கிறேன். Cross section of a society என்பார்களே, ஒரு சமுதாயத்தின் குறுக்கு வெட்டுப் பகுதி, அதை இந்த நாவலில் படைத்துள்ள சுமார் ஐம்பது பாத்-திரங்களின் வாயிலாகப் பிளந்து காட்ட ஆசைப்பட்டிருக்கிறேன். தேசவிடுதலைக்குப் பின்னும் சமுதாயத் தீமைகளை வெல்ல நாம் காந்தியடிகளையே வழிகாட்டியாகக் கொள்ளலாம் என்ற நம்பிக்-கையில் எழுந்தது தான் இந்த நாவல்."

'அகிலனின் சமூக நாவல்களில் மண உறவு'

கட்டுரையாளர் : ப. விசயலட்சுமி

இக்கட்டுரை, இந்தியப்பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்-றம் 1974 ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ள 'ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை' நூலில் பக்கம் 557 முதல் பக்கம் 562 முடிய இடம்பெற்றுள்ளது. பாண்டிச்சேரி தாகூர் அரசினர் கலைக்கல்-லூரித்தமிழ்த்துறைச் சார்பு வெளியீடான 953பக்கங்களை உடைய அந்நூலின் விலை: ரூ 30-00.

"அகிலனின் சந்திப்பு, இன்பநினைவு, பெண், சிநேகிதி, துணைவி, புதுவெள்ளம், வாழ்வுஎங்கே, நெஞ்சினலைகள், பாவை-விளக்கு, சித்திரப்பாவை, பொன்மலர் ஆகிய பதினொரு நாவல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மணஉறவின் வகைகள் போக்கு, சிக்கல் விடுபடும்நிலை, சமுதாயத்தாக்கம், நல்ல மண-உறவின் இயல்புகள் ஆகியவை ஆராயப்படுகின்றன. இளம் உள்ளங்களில் அரும்பும் காதல் மணமாகி மலர்தற்குச் சாதி, பொருளாதாரப் பொருத்தமின்மை ஆகியவை தடையாவதைச் சமுதாயத்தில் காண்கிறோம். குடும்பத்தார் ஒரே நிலைத்தான பொருள் நிலையிலிருக்கும்போது, நிச்சயிக்கப்பட்ட மணம் ஒரு-சாராரின் சமுதாயமதிப்பு உயர்வதால் தடைப்படுகிறது. மண-வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளின் அடிப்படையாகப் பொருளா-

தாரநிலை, இருவருக்குமிடையேயுள்ள உற்சாகமின்மை, நிறைவேற்றப்படாத பாலுணர்வுத்தேவைகள், ஒருவரது இயல்பு ஆர்வங்களை மற்றவர் பகிர்ந்து கொள்ளாமை, அல்லது காட்டும் அலட்சியப்போக்கு இவற்றைக் குறிக்கலாம். திருமணத்திற்கு முன்னுள்ள காதலை வரவேற்கும் ஆசிரியர், பெற்ளேரின் விருப்பத்துடன் மணம் நடத்துவதை வரவேற்கிருர். கைம்பெண்களுக்கு மறுவாழ்வினையும், கைவிடப்பட்டுத் தாயானவர்களுக்குத் தனிவாழ்வினையும் அளிக்க வேண்டும் என எதிர்பார்க்கிருர்.''

'அகிலனின் புதுவெள்ளத்தில் காந்தியம்'

கட்டுரையாளர்: டாக்டர் தா. வே. வீராசாமி

இக்கட்டுரை 'வஞ்சிநாடு' திருவோண மலர் இதழில் (1974) இடம்பெற்றுள்ளது.

''அகிலனின சமூக நாவல்களில் இந்திய வரலாற்றுத்தாக்கங்களை ஆங்காங்கே காண்கிரேம். தன் இலக்கியக்கதை மாந்தர்களில் பலர் காந்திய ஒளியைப் பின்பற்றிச் சென்று வாழ்வின் நிறைவை அடையுமாறு படைக்கின்ருர். அவ்வாறு தன் 'உள்ளங்கவர்' கொள்கையைக் கதையிலே படரவிடும்போது கலைத்தன்மையின் செம்மை சிதையாதவாறு விழிப்போடு காக்கும் வலிமை பெற்றிருக்கிருர் அகிலன். விடுதலைக்கு முன்னும் பின்னும் வேகமாக மோதி வரும் சமூக வெள்ளத்தின் நாவலோவியம் 'புதுவெள்ளம்'. முருகையனின் இளமையின் விடியற்காலை 'செயல்' என்ற தாமரை மலராக மலரத் தொடங்குகிறது. கிராமத்தில் காந்தியத்திற்கு உரமாகப் போகும் முருகையன்கள் மட்டும் பிறக்கவில்லை. அதனை நஞ்சுபோல் எதிர்க்க குமரவேல்களும் பிறந்திருந்தார்கள். வெள்ளைக்காரரின் அடிவருடிகள் காந்தியை வெறுத்ததைவிடக் குமரவேல் போன்ற உள்நாட்டுக் கொள்ளைக்காரரர்களின் வெறுப்பே விடுதலைக்குப் பின்னும் இந்தியச் சமுதாயத்தைத் துன்புறுத்தியது எனச் சுட்டிக்காட்டுகின்ருர் அகிலன். அக்காலக் கல்விமுறை உடல் உழைப்பைத் தாழ்வாக எண்ணச் செய்தது. வெள்ளைக் காலரில் வேர்வைபடாமல் பணம் திரட்ட வழிகாட்டியது. இந்தத் தீமையை

எதிர்த்துத் தானே உழைத்து வாழ முருகையனுக்குக் காந்தியமே வழிகாட்டியது. காந்தியடிகளின் மறைவு புதுவெள்ளத்தில் தன் அவலச் சுழியில் நம்மை அதல பாதாளத்திற்குக் கொண்டு செல்கிறது. கணக்கற்ற துன்பங்களைத் தாண்டுவதற்கு முருகையனுடைய உள்ளொளியாகப் பயன்பட்டது காந்தியம். புதுவெள்ளத்தின் உட்பொருளில் சர்வோதயத்தத்துவத்தை மணியில் இழையாக வாய்பேசாச்செயலாக வகுத்துக் கொடுத்ததில் சிறந்த வெற்றியைப் பெற்றுள்ளார் அகிலன்."

The impact of Gandhism in Akilan's Novels

Paper by : P. VIJAYALAKSHMI

This article is from page 27 to 33 in '*Research Papers*' *Vol. V.*, published by Department of Tamil, University of Kerala, Trivandrum in 1974

" *Akilan* took an active part in Indian National movement and imbued with Gandhian ideals which naturally found effective expressions in his creative works. The novel 'engkee pookiroom' comes under the full impact of Gandhian thoughts and philosophy. The author remarks that 'engkee pookiroom' is an experimental novel to enunciate the Gandhian ideals. I make an attempt to trace Gandhian ideals in this novel, since his other novels show this impact in a limited way only. The three basic tenets of Gandhism i.e. Truth, Non-violence and Sarvodaya-began to shake and they are not able to root deeply in the Indian soil. In the novel 'engkee pookiroom' Gandhi is portrayed as a human being through the various phases of Indian freedom struggle. Then his thought and philosophy are applied to our political and literary lives indirectly through the novel characters and directly through the author's ideas. The individual of Gandhi was not an egoist. He emphasized that if we succeed in building the character of the individual, then the society will take care of itself. In this novel, Akilan enumerates two varieties of people, the true Gandhian idealists

and the bogus self-interested 'Gandhicapped' careerists. Akilan anticipates that the three basic tenets of Gandhian philosophy giving shape to a new way of life and putting the humanity on the road to progress and health."

அகிலனின் 'கயல்விழி'

கட்டுரையாளர் : **ப. விசயலட்சுமி**

இக்கட்டுரை, திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பழைய மாணவர் மன்ற வெளியீடாகிய 'ஆய்வுத் தொகை—தொகுதி : 2' என்னும் நூலில் பக்கம் 154 முதல் 164 முடிய இடம் பெற்றுள்ளது. 338 பக்கங்களை உடைய இந்நூலின் விலை ரூ. 10–00. முதற்பதிப்பு: 1974. இந்நூலின் தொகுப்பாளர்: டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்.

" அன்று தொட்டு இன்று வரையிலும் போர் முறையில் மாற்றங்கள் இருந்தாலும் நகரங்களை அழிப்பது, பெண்ணின் நிறையைச் சீர்குலைப்பது, மக்களை இழிவுபடுத்துவது போன்ற வெறிச் செயல்கள் நிகழத்தான் செய்கின்றன. சுந்தரபாண்டியன் சோழர்களின் அடிமைப்பட்ட பாண்டிய நாட்டை மீட்டுக் கொள்வதே 'கயல் விழி' நாவலின் கதைக் கரு. ஒரு பெண் தன்னைத் தீயால் எரித்துக் கொண்டு, போரில் நிகழும் கொடுமையைப் போரை விரும்பும் அரசர்களுக்கு உணர்த்தும் நிலையைத் தருகிறது இந்நாவல். நிகழ்ச்சிகள் கதையில் தொடர்புடன் பின்னப்படுவதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம். ஒரு கதை மாந்தரின் வாழ்விலுற்ற நிகழ்ச்சியை இன்னொரு கதைமாந்தரின் வாழ்விலும் நிகழச்செய்தால் அதனை ஒத்த அமைப்புடைய கதைப்பின்னல் எனலாம். எந்த நாட்டு அரசன் வெற்றி பெற்றாலும் அழிவது குடிமக்களே. எனவே போரைத் தவிர்க்க முயல்வதே கயல்விழியின் பணி. குறள் கருத்துக்களைக் கதையில் அமைத்திருப்பது நாவலின் சிறப்புக்கு ஒரு காரணமாகும். சோழ நாடு இராஜராஜனின் காலத்தில் தோல்வி காண்பதற்குக் காரணம் சிந்தனைத் தெளிவுடைய தலைவனைப் பெறுமையே. தவமாகிய கருமம் என்னும் குறள் கருத்துக்களையும் விளக்கும் 'கயல் விழி' வரலாற்று நாவலில் சிறந்த இடத்தைப் பெறும். "

பொதுநிலையிலான ஆய்வுகள்

இப்பகுதியில் அகிலன் அவர்களின் படைப்புக்களான நாவல்கள், சிறுகதைகள், நாடகம், சிறுவர் இலக்கியம் பற்றி ஆய்ந்து எழுதும்படி அமைந்த தற்கால இலக்கிய நூல்களில் அமைந்துள்ளவை பற்றிப் பேசப்படுகின்றன. தற்கால இலக்கியம் பற்றிய ஆய்வு நூல்கள் குறைந்த அளவில் இருந்த போதிலும், அகிலன் படைப்புக்கள் பற்றிய ஆய்வு நோக்கில் அமைந்தவை தரப்பட்டுள்ளன. ' இலக்கிய வரலாறு ' நோக்கில் கூறப்படும் செய்திகள் இதில் சேர்க்கப்படவில்லை.

1. தற்காலத் தமிழ் இலக்கியம்
இரா. தண்டாயுதம்

விற்பனை உரிமை: தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5.

முதற்பதிப்பு: *1973;* விலை: ரூ. *4-50.* பக்கங்கள்: *240.*

' தமிழ் நாவல்கள் ' என்னும் பகுதியில் பக்கம் 38, 39 ஆகியவற்றில் அகிலன் நாவல்கள் பற்றிக் கூறுவது:

" அகிலனின் நாவல்களில் பல்வேறு சமுதாயப் பிரச்சினைகள் கருப்பொருளாகியுள்ளன. நாவல் எழுதப்பட்ட காலச் சமுதாய, அரசியல் நிலைகளையே அவர் நாவல்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவருடைய முதல் நாவலான 'பெண்'ணிலிருந்து **'எங்கே போகிறோம்?'** வரை இந்த இயல்பைக் காணலாம். எடுத்துக்கொண்ட பிரச்சினையை ஆழமாகச் சிந்தித்து, அன்பு வழியில் அவற்றிற்குத் தீர்வு தேடி, உணர்ச்சிகரமாகக் கதை சொல்லும் ஆற்றலை இவருடைய எல்லா நாவல்களிலும் காணலாம்."

'தமிழ்ச் சிறு கதைகள்' என்னும் பகுதியில் பக்கம் 53ல் அகிலன் சிறுகதைகள் பற்றிக் கூறுவது :

"அகிலனின் நாவல்களைப் போலவே சிறுகதைகளிலும் அவை எழுதப்பட்ட காலத்தின் சமுதாயச்சாயல் இருக்கும். கதைச்

சுவை கெடாமல், தாம் உணர்த்தவேண்டியவற்றை மிகநேர்த்தி-யாக உணர்த்த வல்லவர் அகிலன். சொல்லும் முறையும் எடுத்துக் கொள்ளும் கதைப்பொருள்களும் அவற்றிற்கேற்ப அமையும் வடிவமும் நடையும் இவர் கதைகளில் சிறப்பாக அமைந்திருக்கும். உருவத்தையும் உள்ளடக்கத்தையும் ஒத்திசையவைத்து இவர் முன்னர் எழுதிய சிறுகதைகளையும் உள்ளடக்கத்திற்கு முதன்மை தந்து பின்னர் இவர் எழுதிய சிறுகதைகளையும் ஒப்பிட்டால் தமிழ்ச்சிறுகதையின் வளர்ச்சியை ஓரளவு உணர முடியும் எனலாம். தமிழ்ப் பத்திரிகை உலகில் மலிந்து வரும் சில உதவாச் சங்கதிகள் உண்மை எழுத்துலகைப் புறக்கணித்து வருவதைச் சாடி இவர் எழுதிய 'எரிமலை' தமிழ் எழுத்துலகில் ஓர் எரிமலையை-யே உண்டாக்கிவிட்டது என்றால் அதில் ஐயமில்லை.''

இரண்டாம் பகுதியான 'நூல் உலகம்' என்பதில் முதற்-கட்டுரையான பின்னணி என்பதில் பக்கம் 126, 127 ஆகியவற்றில் 'எரிமலை' சிறுகதை பற்றிக்கூறுவது;

''பத்திரிகைத் தர்மம் என்ற பெயரில் மனிதனிடம் எங்கோ ஒளிந்து கொண்டிருக்கும் விலங்குத்தன்மையை இழுத்துவிட்டு அதனுடன் பாமரத்தன்மையையும் நடமாடவிடும் பத்திரிக்கை ஆசிரியர்களின் போலித்தனங்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் அகிலனின் கதை 'எரிமலை'. உள்ளத்தினின்று குமுறிப்-பொங்கும் உண்மை, ஆசிரியரை ஒரு கருவியாகக் கொண்டு, தனக்கேற்ற ஒருவடிவத்தைத்தானே அமைத்துக் கொண்டதாகவே நம் உள்ளத்தில் படுகிறது. உள்ளடக்கம், உருவம் ஆகிய இரண்டும் ஒன்றை ஒன்று அடக்காமல் துணைசெய்து பெற்ற குழந்தையாக-வே 'எரிமலை' விளங்குகிறது. பசுத்தோல் போர்த்திய புலியையும், புலித்தோல் போர்த்திய பசுவையும் சமுதாயத்தில் புரையோடிப்-போன ஒரு பிரச்சினையின் மேல் மோதவிட்டு, அகிலன் உருவாக்-கிய இந்தக்கதை, இத்தொகுப்பிலேயே தலைசிறந்ததொரு கதை-யாக மிளிர்கின்றது.''

2. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்

மா. இராமலிங்கம் (எழில் முதல்வன்)

வெளியீடு: தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5.

முதற்பதிப்பு: 1973. விலை. ரூ. 7-00. பக்கங்கள்: 300.

பகுதி. 2. நாவல்

"கல்கிக்கு அடுத்த நிலையில் அகிலனின் வருகை தமிழ் வாசகர்களின் கவனத்தையும் கணிப்பையும் ஒருங்கே பெற்றது. அகிலனின் 'பெண்' நாவல் தேசிய வீறு கமழும் நல்ல நாவலாகும். (ப. 27, 33 & 34). 'வாழ்வு எங்கே?' கலப்புமணச்சிக்கலை அடிப்படையாகக்கொண்டது. சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை இந்நாவலில் மிகுதியும் காணலாம். மனிதப்பண்பின் வளர்ச்சிக்குத் தேவையான பக்தி, பகுத்தறிவு இரண்டும் இதில் நன்கு வலியுறுத்தப்படுகின்றன. (ப. 44, 45). பேராசையும் வாய்ப்பும் கொண்ட 'துரியோதனர்கள்', சமுதாயத்தில் பெரும்பாலான மக்களின் வாழ்க்கை வசதிகளையும் உரிமைகளையும் பறித்துக் கொள்ளும் கொடுமையைப் பொன்மலரில் அகிலன் சித்திரிக்கிறார். கள்ளக்கடத்தல் மூலம் கறுப்புப்பண வேட்டையாடும் சமூகவிரோதிகளை அகிலன் கடுமையாகச் சாடுகிறார். (ப.47) அண்மைக்காலத்தில் தமிழ் இலக்கிய உலகில் அடிபட்டுவரும் 'காந்தீயக் கலைக் கொள்கையைப் படைத்திருப்பவர் அகிலன், காந்தீயச் சிந்தனையின் அடிப்படையில் நமது சமூகப்பொருளாதார வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டும் போக்கை அகிலனின் 'புது வெள்ளம் பிரதிபலிக்கிறது. (ப. 51). அகிலனின் 'சித்திரப்பாவை' பொருந்தா உறவு காரணமாக ஏற்படும் சிக்கலிற்குத் தீர்வாகப்பிரிந்து போகும் உறவைப் பிரகடனப்படுத்துகிறது (ப. 64, 65). காதல் என்ற உணர்வின் ஆழமும் வேகமும் பரப்பும் தெரிகிறவகையில் தமிழில் எழுந்த நாவல்கள் மிகக்குறைவே. அகிலன் காதலின் மாண்பினை நயம்பட எழுதிக்காட்டியவர். ஆண்-பெண்களின் பலத்தையும் பலவீனத்தையும் கலையழகு-பட எழுதிக் காட்டிய பெருமை அகிலனுக்கே உண்டு. 'பாவை விளக்கு' உமா பாத்திரப்படைப்பு அகிலனின் இலக்கியச் சாதனையை உலகுக்கு உணர்த்த-

வல்லது. (ப. 66.) அகிலன் வரலாற்று நாவல்களை 'நிகழ்கால நன' வோடு எழுதக்கூடியவர். ஒற்றுமையின் பெருமையை' 'வெற்றித் திருநகர்' மூலம் உணர்த்தினர். நிகழ்காலச் சமூக வாழ்க்கைக்கு வரலாற்று நாவல்கள் பயன்படுவதில்லை என்ற கூற்று இப்படைப்பால் பொய்யாகி விடுகிறது. அகிலனின் மற்றொரு நாவலான 'கயல்விழி' போரற்ற புதிய சமுதாயம் காணவேண்டும் என்ற அவாவைக் காட்டுகிறது. (ப 85, 86). பண்பட்ட கலைமனமும் மாந்தரின் உணர்ச்சிகளை அப்படியே எழுத்தில் வடிக்கும் திறனும், சமுதாய நனவும் அகிலன்பால் உள்ள தனிச்சிறப்புக்கள். உணர்ச்சி வெள்ளத்தின் சுழிப்புக்களை இவர் எழுத்துக்களில் தொட்ட இடமெல்லாம் காணலாம். 'பாவை விளக்கு', 'சித்திரப்பாவை' போன்ற நாவல்கள் தமிழுக்குப்பெருமை சேர்க்கும் தலையாய இலக்கியப் படைப்புகள். (ப. 99, 100)."

பகுதி. 3. சிறுகதை

"சிறந்த நாவலாசிரியர்கள் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களாக இருப்பதில்லை. இது பொதுவிதி. இந்தப் பொதுவிதிக்கு முற்றிலும் மாறுபட்டவர் அகிலன். 'காசுமரம்', 'பூச்சாண்டி' என்னும் அவரது ஆரம்பகாலக்கதைகள் , சிறுகதைத்துறையில் அகிலனின் சாதனை என்ன என்பதைப் பிரகடனப்படுத்த வல்லன. (ப. 130.). கு. ப. ரா. வைப் போல அகிலனும் ஆண்-பெண் மனநிலையைச் சித்திரிப்பதில் வெற்றியுடன் விளங்குகிறார். அறுபதுக்குப்பிறகு அகிலன் எழுதிய கதைகளில் சற்றே பிரச்சாரப்போக்கு மிகுதியாக இருக்கிறது. காந்தியக் கலைக்கோட்பாடு அவரது பிற்காலக் கதைகளில் பண்பாக விளங்குகிறது. (ப- 132)"

பகுதி. 5. நாடகம்

"மணவிழாக்களில் மணமக்கள் முன்னிலையில் நடத்தப் பெறும் நாடகவகைக்கு ஒரே உதாரணமாகத் தமிழில் இருப்பது 'வாழ்வில் இன்பம்' என்னும் அகிலனின் நாடகம்தான். இதில் சிக்கல், போராட்டம் எதுவுமில்லை. மணமக்களுக்கு அகிலன் கூறும் அறிவுரை

சிந்திக்கத்தக்கது. இன்னு மூன்று: அவசரம், ஆத்திரம், பயம்; இனியவை மூன்று: அன்பு, கடமை, உரிமை.''

பகுதி. 6. குழந்தை இலக்கியம்

'' அகிலனின் 'நல்லபையன்', 'கண்ணனகண்ணன்' போன்றவை சிறுவர் உள்ளத்தில் சமுதாயஉணர்வை ஊட்டும் கதைகள்.''

3. புனைகதை வளம்

மா. இராமலிங்கம் (எழில்முதல்வன்)

வெளியீடு: தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச்சங்கம்லிமிடெட், சென்னை-8.

முதற்பதிப்பு: 1973. விலை:ரூ. 6-00. பக்கங்கள்-243.

நாவலாசிரியர்கள் பன்னிருவரை அறிமுகப்படுத்தும் இந்-நூலில் நான்காம் பகுதியாக அகிலனின் படைப்புக்களை, 'கனல்-மணக்கும் மலர்' என்று தலைப்பிட்டுப் பக்கம் 67 முதல் 80 முடிய ஆய்கிருர். நாவல், வரலாற்றுநாவல், சிறுகதை எனப்பகுத்து ஆராயும் போக்கில் அமைந்துள்ள கட்டுரையில் ஒருசிறுபத்தியில் (பக்.79) சிறுகதை பற்றிக்கூறுகிருர்.

'' 'இன்பநினைவு' அவர் வளர்ச்சியின் முதல் நிலையைச் சுட்டிக்காட்டும். 'சந்திப்பு' உணர்ச்சிக்கனிவே முனைப்பாகத் தெரியும் வகையில் நாடகப் பாங்கோடு எழுதப்பட்டது. 'துணைவி' யில் கதைகூறும் முறையில் அகிலனுக்கிருந்த சோதனைபூர்வமான ஆர்வம் புலனுகிறது. 'பெண்' நாவல் அளவால் சிறிதாகவும் ஆற்றலால் பெரிதாகவும் விளங்குகிறது. அகிலனின் படைப்புக்-களில் தலைசிறந்த பெரும்படைப்புகள் என்று கருதுவன 'பாவை விளக்கு', 'சித்திரப்பாவை', 'புதுவெள்ளம்' ஆகிய மூன்றுமே. 'பாவைவிளக்கு' நாவலைத் 'தன் வரலாற்று நாவல்' (autobiographical novel) எனலாம். தன்னையே தணிகாசலமாக மாற்றிக் கொண்டு தன் கதையையே ஆசிரியர் சொல்கிருர். இருள்மூடிக்-கிடக்கும் தன் ஆன்மாவைத் தனக்குத்தானே சத்தியசோதனை செய்து கொண்டு ஒளியை நோக்கிப் பயணம் செய்யும் ஒரு

மனிதனின் புனித யாத்திரையே பாவை விளக்காகப் பரிணமித்-துள்ளது என்று நான் கருதுகிறேன். 'அழகாக வாழக்கற்றுக் கொள்; முடிந்தால் வாழ்க்கையை அழகுபடுத்து; முடியாவிட்டால் அதை அசிங்கப்படுத்தாமலாவது இரு' என்னும் உண்மையைச் 'சித்திரப்பாவை' வலியுறுத்துகிறது. சமுதாயச் சிக்கல்களைக் கூர்ந்துணரும் திறன், வாழ்க்கையைப் பற்றிய தெளிந்த முடிவு, முருகியலுணர்வு, கலைத்திறன் முதலிய அனைத்தும் இப்படைப்பில் ஒருங்கே திரண்டு தெரிகின்றன. 'புதுவெள்ளம்' புதிய உத்தியில் எழுதப்பட்ட ஒரு சமுதாய ஆவணம். நமது பொருளாதார வாழ்வில் உள்ள வர்க்க முரண்பாட்டினை மிக அருமையாக அகிலன் விளக்குகிறார். பத்துப்பதினைந்து வயதுடைய சிறுவன் நோக்கில் 'கொள்ளைக்காரன்' கதை சொல்லப்படுகிறது. தனிமனிதப் போராட்டமாகவோ அவனது வீரசாகசமாகவோ அமையாது, பொங்கி எழும் நாட்டு மக்கள் நடத்தும் வெகுஜனப் போராட்ட-மாக அமைப்பதன் மூலம்' அகிலன் 'கயல்விழி' யைச்சித்திரித்துள்ள நுட்பம் புலனாகும். சிறந்த சிறுகதையாசிரியராகவும் விளங்கும் அகிலனின் 'பூச்சாண்டி' கதை எட்கர் ஆலன்போ எழுதிய 'The fall of the House of Usher' என்னும் கதை போல ஒருமுக இயைபு (Single effect) கொண்டு உணர்வாலும் கருத்தாலும் படிப்போரை மெய்சிலிர்க்க வைக்கும் என்பது உறுதி.''

4. அகிலனின் கலையும் கருத்தும்

மா. இராமலிங்கம் (எழில்முதல்வன்)

வெளியீடு: தமிழ்ப்புத்தகாலயம், சென்னை-5.

விலை: ரூ. 6-50. பக்கங்கள்: 203.

முதற்பதிப்பு: ஆகஸ்ட். 1974.

இந்நூல், சிறுகதைகள், தொடக்ககாலப் படைப்புகள், பெரும் படைப்புகள், சிறுபடைப்புகள், கைவண்ணம், வரலாற்று நாவல்கள், மதிப்பீட்டு முடிபுகள் என்னும் ஏழு இயல்களாக உள்ளது.

"அகிலனின் கதைகள் பாடுபொருளால் மட்டுமின்றி, சொல்லப்பட்டிருக்கும் முறையாலும் அழகிய வடிவத்தைப் பெற்றிருக்கின்றன. நாவலாசிரியராக வளர்ந்து கொண்டே அவ்வப்போது சிறுகதைகள் எழுதிவந்தாலும் கதையின்வடிவம் அதிகம் பாதிக்கப்படவில்லை. சிறுகதை எழுத்தாளர் என்ற வகையில் அவரது மேதைமை நன்கு புலனாகும்."

"அகிலன் என்ற சிறுகதையாசிரியரின் உள்ளே மிகப் பெரும் நாவலாசிரியரும் மறைந்துகொண்டிருப்பதை நம்மால் 'இன்பநினைவு' நாவலில் இனம் கண்டுகொள்ள முடிகிறது மிகை உணர்ச்சிவெளியீடும் விரைந்தோடும் நாடகப் பாங்கும் 'சந்திப்பு' நாவலின் தனிச்சிறப்புக்கள் ஆகும். 'பெண்' தான் எடுத்துக்கொண்ட பிரச்சினையாலும், சொல்லப்பட்ட முறையாலும் இனிய நடையாலும் தமிழகத்தில் வந்தவுடனேயே பரபரப்புக்கு ஆளாயிற்று. 'துணைவி' நாவல் எழுதப்பட்ட காலத்தில் நாவல் வடிவம் பற்றிய ஒரு தீர்க்கமான சிந்தனையும், புதியன புரியவேண்டும் என்ற பேரார்வமும் அகிலனின் மனத்தில் இடம் பெற்றிருந்தன என்று ஊகிக்க இடமிருக்கிறது."

"முப்பதாண்டுகட்கு முந்திய இந்தியச் சமுதாய வாழ்க்கையின் ஒருகுறுக்குவெட்டுப் படமாகவே 'பாவைவிளக்கு' நாவல் காட்சியளிக்கிறது. அழகின் வெளிப்பாடான ஓவியக்கலை, ஆணும் பெண்ணுமாய்க் கூடி வாழும் வாழ்க்கைக்கலை-இரண்டுமே 'சித்திரப்பாவை'யின் பாடுபொருளாய் அமைந்துள்ளன. 'பாவை விளக்' கையும் விடச் 'சித்திரப்பாவை' யில்தான், அகிலனின் கைவண்ணச் சதுரப்பாடு கோபுரத்தில் ஏற்றிவைத்த தீபம்போல் நன்கு விளக்க முறுகிறது."

சிலகுறிப்புகள்

இந்நூல் உருவர்குங்கால் கிடைத்த சில புதிய செய்திகளை இங்குக்காணலாம். அகிலனின் சிறுகதைத் தொகுப்புகளின் புதிய பதிப்பு, கட்டுரைத்தொடர் ஆகியவை பற்றிய குறிப்பு விளக்கங்கள் இவை.

குழந்தை சிரித்தது

இத்தொகுப்பு பற்றி முன்னரே (பக்கம் 12-13) கண்டோம். இப்போது இதன் மூன்றும் பதிப்பு வந்துள்ளது.

மூன்றும் பதிப்பு: 1974 விலை: 4·50

வெளியீடு: பொற்கொடி வெளியீடு.

எரிமலை

இத்தொகுப்பு பற்றியும் முன்னரே (பக்கம் 17-18) கண்டோம். அண்மையில் இதன் இரண்டாம் பதிப்பு வந்துள்ளது.

இரண்டாம் பதிப்பு : 1974 விலை : ரூ. 4.50

வெளியீடு : பொற்கொடி வெளியீடு

பசியும் ருசியும்

இச்சிறுகதைத்தொகுப்பு அகிலனின் பதினைந்தாவது தொகுப்பு.

முதற் பதிப்பு : ஆகஸ்டு 1974.

பொற் கொடி வெளியீடு

விற்பனை உரிமை: பாரிபுத்தகப்பண்ணை, சென்னை-5.

பக்கங்கள் : 112. விலை: ரூ. 3.50

பதிப்பகத்தார் குறிப்பு:

“சிறந்த நாவலாசிரியராகப் புகழ்பெற்றுள்ள திரு. அகிலனவர்கள் உலக இலக்கியங்களுடன் ஒப்புநோக்கி வெற்றி பெறக்கூடிய சிறந்த படைப்புக்களை — தமிழ் நாவல் உலகிற்குத் தந்திருக்கிறார். சமீபகாலத்தில் அவருடைய சிறுகதைப் படைப்புக்களைப் பற்றி பல அறிஞர்கள் நுணுக்கமாக ஆராயத் தலைப்பட்டுள்ளார்கள். சிறுகதை இலக்கியத்திற்கும் அகிலனவர்களின் சேவை எவ்வளவு மகத்தானது என்பதை அவர்கள் தமது ஆய்வுரைகளில் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இந்தச் சூழ்நிலையில் அவருடைய சிறுகதைப் படைப்புக்கள் யாவும் நூல்வடிவில் வந்து எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்ற முயற்சியில் கிடைத்த கதைகள் யாவற்றையும் தொகுத்து வெளியிட்டுள்ளோம்.”

11 கதைகள்:

1. பசியும் ருசியும்
2. காதல் இறந்த கதை
3. துரோகியின் ஆவி
4. கண்டதும் காதல்
5. தீபாவளிப் பரிசு
6. மூன்றே முக்கால் நாழி
7. சாதி
8. சாந்தி
9. இந்திரனுக்கு விமோசனம்
10. எங்கோ ஓர் இதயம்
11. கண்ணும் காதும்

[இதிலுள்ள பதினேரு கதைகளில் ' சாந்தி ', ' இந்திரனுக்கு விமோசனம் ' என்ற இருகதைகள் முதலில் ' சாந்தி, ' தொகுப்பில் இடம்பெற்றுப் பின்னர் எந்தவொரு தொகுப்பிலும் இடம்பெருதவை(பக்கம் 10ல் கூறப்பட்டுள்ளது). ஏனைய கதைகளில் ' கண்ணும் காதும் ' தவிர மற்றைய எட்டுக்கதைகள் இதழ்களில் மட்டும் வெளிவந்தவை என்று இந்நூலில் (பக்கம் 19, 20 ஆகியவற்றில்) கூறப்பட்டவை.]

தொடர்கட்டுரை

' தீபம் ' மாத இதழில் நவம்பர் 1972 முதல் அகிலன், எழுத்தும் வாழ்க்கையும் என்ற தொடர்கட்டுரையை எழுதி வருகிருர். இதுவரை (ஆகஸ்ட் 1974) இருபது பகுதிகள் வந்துள்ளன.

பொருளாரம்

குறிப்பு :

இந்நூலின்கண் பயின்று வந்துள்ள அகிலனின் படைப்புகள் (சிறுகதைகள், நாவல்கள், நாடகம், சிறுவர் இலக்கியம்), வெளியான இதழ்கள், சிறப்புப் பெயர்கள் ஆகியன அகர வரிசைப்படுத்தி இங்கு தொடுக்கப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்புகள் தடித்த எழுத்தில் தரப்பட்டு உள்ளன.

எண்கள், பக்க எண்களைக் குறிக்கும்.

அகிலனின் படைப்புகள்

சிறுகதைகள்

அடிமைப்பெண் 16
அந்த ஒருநாள் 15
அமரநிலை 12
அமராவதிக் கரையில் 8
அரிசியோ அரிசி 15
அருவிக்கரை அழகி 14
அருவிக்கரையில் 11
அவன் ஏழை 3
அழகு எங்கே? 7
அழகுப் பைத்தியம் 55
அழகின் ரகசியம் 16
அறைக்கதவுகள் 16
ஆண் -பெண் 7
ஆத்மசோதனை 15
ஆறுதல்--20, 136
இதயச் சிறையில் 6
இந்திரனுக்கு விமோசனம் 10, 136. 137, 138
இப்படி ஒரு மனிதர் 15
இயற்கை 13
இரவு-பகல் 7, 56, 62
இருசகோதரிகள் 6
இருட்டறை 55
இலட்சியத்தம்பதிகள் 11
இளமையில் நடந்தது 6
இளைய பாரதத்தினன் 15
இறவாப்புகழோன் 16
இன்சான் 56
இன்பத்தீ 7
உயிர்த்துளி 11
உயிர்த்தோழர் 17
எங்கோ ஓர் இதயம் 20, 112, 113, 137
எண்ணும் எழுத்தும் 15
எத்தனும் எழுத்தாளனும் 18, 115
எரிமலை 17, 18, 130, 136
எல்லோருக்கும் பெய்த மழை 6
எழுதாத கதை 53, 54
ஏழை பங்காளர் 19
ஏழைப் பிள்ளையார் 5
ஏன்? —6
ஒரு வேளைச் சோறு 15
கங்கா ஸ்நானம் 8, 57, 60, 62
கடவுளின் பிரதிநிதி 5
கடவுளும் காதலும் 54
கடைசி ஆசை 7
கண்டதும் காதல் 20, 137
கண்ணும் காதும் 137, 138
கண் திறந்தவன் 16
கதையின் முடிவு 5
கதையும் பதிலும் 19
கபிலா 59, 60
கபிலா அவுர் காய் 56, 59
கரும்பு தின்னக்கூலி 16, 60
கலிய பெருமாளின் கனவு 14
கலைஞனின் மனைவி 55
கலையின் விலை 19
கவிஞன் இட்ட தீ 16
கள்ளச்சுகம் 19
கறவையும் காளையும் 14, 56, 59, 60
கற்பனையே தவிர 12
காக்கைச் சிறகினிலே 14
காசுமரம் 3, 5, 60, 71, 132
காசும் பாசமும் 12, 60
காட்டுக் குரங்கு 13
காட்டுமிராண்டிகள் 12,57,59
காணிக்கை 6
காதலின் உருவம் 6
காதல் இறந்த கதை 20, 137

காதல் பிறந்த கதை 6
காந்தி வந்தார் 17
கிராமத்தில் 55
குலதெய்வம் 10, 13, 61
குழந்தை சிரித்தது 10,12,13, 57,59,60, 136
குழந்தையின் கேள்வி 15
குறத்தி 7
கூட்டுக்குடும்பம் 19
கூத்துக்காரி 54
கையிலும் 'பில்'லிலும் 19
கொஞ்சம் லஞ்சம் 18, 60
கோபுர் கா தீப் 56
கோயில் விளக்கு 8, 57, 59, 60,63
கோஷா—5
சகோதரர் அன்றோ? 13, 14, 57, 59, 60, 62
சக்திவேல் 5
சட்டம் என்ற கழுதை 19
சத்திய ஆவேசம் 18,19
சரஸியின் ஜாதகம் 3, 5
சாதி 19, 137
சாந்தி—9, 10, 137, 138
சாவிலே வாழ்வு 3, 5
சிசுவின் குரல் 5
சிறியோர் சேர்த்த சில்லறை 16
சினிமாக்கதை 15
சினிமா வண்டி 5
சுதந்திரப் பறவை 5
செங்கரும்பு 9
செத்துப்போனவள் 55
செல்வரங்கன் ஆவி 13
சொத்தும் சுகமும் 6
சொர்க்கம் எங்கே? 14
தணியுமா? 5
தலைமறைவில் 6
தாமரைப்பூ 5
தாய்ப்பசு 15
தாலிக்கயிறு 5
திருட்டுத் தெய்வம் 19
திரைமறைவில் 13
தின்-ராத் 56
தீபாவளிப் பரிசு 20, 137
தீபாவளி வந்தது 7
தீன் அவ்சர் 57
துணைவி 6
துரோகியின் ஆவி 19, 137
துன்பத்தின் மத்தியில் 6
துபான் 57
தெய்வத்தின் குரல்—14
நட்டகல்—13, 56, 59, 62
நந்திச்சித்தர் 16
நரகாசுரர்புரம் 19
நல்லவர்-கெட்டவர் 13, 56
நஸா அவுர்ரிஸ்தா 56
நஹிபூலேங்கே 59
நாட்டு மருந்து 19
நாதனுள்ளிருக்கையில் 14, 58, 61
நான்—5
நான்-அவள்-அவன் 7
நிலவினிலே 6
நிலவொளியில் 5
நினைப்பு 14, 62
நெருப்பு 12
நெல்லூர் அரிசி 16, 17
நொண்டிக்குப்பன் 5
பசி—9, 113
பசியும் ருசியும் 20, 137
பசு, பசி, பாசம் 19
பச்சா முஸ்கரா உடா 57, 59
பஞ்சாபி கௌன் மதராஸி கௌன் 57, 59
படி அரிசி 17
படி மச்லி 59
படி மச்லி சோடி மச்லி 56, 59
பலானும் பலாப்பழமும் 17
பலே புரே 56
பழக்கம் 13
பாப் 59
பாஷான் 59
பித்தம் தெளிய மருந்து 14
பிள்ளைவரம் 9, 60, 62

புகழும் விளம்பரமும் 17
புகழ் 9, 60
புயலுக்குப்பின் 5
புயல் 11, 57, 61
பூச்சாண்டி
11, 61, 62, 132, 134
பூடே கி முஸ்கான் 57
பெண்பாவம்—8, 59
பெரிய மீன் 8, 56, 59
பெற்ற மனம்—5
பையனும் பெண்ணும் 12
பொங்கலோ பொங்கல் 14
போரில் நடந்தது 55
போர்முனையில் 16
மகிழம்பூ 15
மந்திரத்து மாங்கனி 13
மந்திர் கா தீப் 57, 59
மந்தையில் ஒரு மனிதன் 18
மயானத்து நிலவில் 9
மழைக்கு ஒதுங்கிய
இடத்தில் 17, 61
மனமும் மானமும் 11, 56
மனிதர்கள் 11, 56, 58, 60, 61
63, 110, 111
மனைவியும் மைத்துனியும் 8, 60
மனோரஞ்சிதம் 9
மன்னிப்பு 55
மிடியால் மடிதல் 3, 70
மிராசுதார் மகள் 15
மின்னுவதெல்லாம்... 12
முதல் தீபாவளி 11
முதற்கவிதை 11
முப்பது இரவுகள் 10, 13
முழுநிலவு 53, 54, 55
மூன்று வேளை 11, 57, 58, 62,
63
மூன்றே முக்கால் நாழி 20, 137
மேக சஞ்சாரம் 5
யார் தியாகி? 14
ரகசியம் 17
ரத்தக்கலப்பு 6, 63
லட்சியமும் வாழ்வும் 55
லாஜ்—56
வசந்த நினைவு 5
வயிற்றுக்குத்தான் 10
வழிபிறந்தது 10, 11
வழிப்போக்கன் 5
வாழத்தெரிந்தவர் 13
வாழப்பிறந்தவன் 19
வாழையடி வாழை 12
விபரீத விளையாட்டு 17
விலைப்பெண் 8
விளம்பரம் 13
விஷகன்னிகை 54
வெடித்த பட்டாசு 20
வெட்கம் 11, 56, 62, 111
வெள்ளம் வந்தது
14, 60, 61, 63
வெறி 11
வெறியும் முறையும் 9, 56
ஜடமூர்த்தி 56, 59
க்ஷமா கரோ 56
For the third time 62
Menschen 58
My Brother My very own—62
Night and Day 62
Oh! For a child 62
Oh! The Human 58, 63
Points of View 62
Shame 62
The Flood 63
The Ghost 62
The Pilgrimage 62
The Stone 62
True to their Blood 63
*When God within our Bosom
Dwells* 58, 61

நாவல்கள்

அவளுக்கு ... 29, 30
இன்பநினைவு 23, 25, 125, 133, 135
எங்கே போகிறோம்? 40, 41, 127, 129
கயல் விழி 35, 36, 128, 132 134
கொள்ளைக்காரன் 40, 134
சந்திப்பு 27, 28, 120, 125, 133, 135
சித்திரப் பாவை 38, 39, 64 119, 125, 131, 132, 133, 134, 135
சிநேகிதி 26, 27, 63, 116. 117, 121, 125
தாகம் 53
துணைவி 25, 125, 133, 135
நெஞ்சின் அலைகள் 28, 29, 64. 122, 125
பாவைவிளக்கு 31, 32, 64, 82, 83, 84, 86, 117, 118, 119, 122, 125, 131, 132, 133, 134, 135
புதுவெள்ளம் 33, 34, 123 124, 125, 126, 131, 133, 134
பெண் 23, 24, 63, 125, 129, 131, 13 3
பொன்மலர் 34, 35, 64, 125, 131
மங்கிய நிலவு 23
வாழ்வு எங்கே? 30, 31, 82, 125, 131
வெற்றித்திருநகர் 37, 38, 132
வேங்கையின் மைந்தன் 32 ,33

நாடகம்

உயிர்ப்பலி 46
புயல் 46
வாழ்வில் இன்பம் 46, 47, 132

சிறுவர் இலக்கியம்

கண்ணுன கண்ணன் 49 133
சிவப்பு விளக்கு 49
தங்க நகரம் 49
நல்ல பையன் 49, 133

கட்டுரைகள்

அழகின் அடிமைகள் 68
அன்றும் இன்றும் 68
இருவகைச் சிறுகதைகள் 69
இலவச யோசனை 100
இளைஞர்களுக்கு... 102
இனியும் திரையுலகில் பண நாயகமா? 93
இனியொரு விதி செய்வோம் 88
உடல்உழைப்பும்படிப்பும் 68
உரைநடை படைப்பிலக்கியத்தில் நடைஅழகு 69
ஊருக்கோர் கலையரங்கு 89
எது நல்ல கதை 73

எது நாட்டுப்பற்று 98
எழுதுவது எப்படி? 67
எழுத்தாளர் கார்க்கி 70
எழுத்துலகுக்கு ஓர் அறை
கூவல் 70
என் முதல் கதை 70
என்னைப் பற்றி 68
கங்கையிலிருந்து காவேரி
வரையில் 99
கதைகளில் காதல் 72
கதைக்குப் பஞ்சமா? 74
கதைக்கலை 69
கதை சொல்லும் திரை 83
கதை, திரைக்கதை,
வசனம் 91
கதை, வசன, டைரக்ஷன்—84
கலைத்துறை அமைச்சர்
தேவை 87
கலையும் வயிறும் 67
காதல் வாழ்வில்
உலகப்பெரியார் 68
காந்தியடிகளின் கடவுள் 105
காலத்தை உருவாக்கிய
கலைஞர் 75
கிண்டியில்
தொழிற்பண்ணை 68
குடியரசில் கட்சிகள் 99
சமுதாய உணர்ச்சி 103
சமுதாயத்துக்குச் செய்தி 69
சித்திரத்தில் செக்ஸ் 94
சிறிய விஷயந்தான் 101
சிறுகதை 76
சிறுகதை எழுத 67
சிறுகதையின் தோற்றமும்
வளர்ச்சியும் 69
சிறுகதை வளர்ச்சிக்கான
வழிகள் 69
சினிமா யந்திரமும்
காந்தியடிகளும் 92
சினிமாவும் பத்திரிகைகளும் 87
சுதந்திரம் நிலைக்க
வேண்டும் 98
சூழ்நிலை 73
சோவியத் நாட்டில்
எழுத்தாளர்கள் 97
சோவியத் மக்களின்
பண்பு 95
சோஷலிசமும் திரை
உலகும் 90
டைரக்டரும் எழுத்தாளரும் 85
தமிழுக்கு அநீதி 81
தமிழ்நடை 78
தமிழ் நாவல் 67
தமிழ்ப்புயல் திரு. வி. க. 106
தனிமனிதனுக்கும் சமுதாயத்-
திற்கும் உள்ள உறவு 69
தியாகியும் துரோகியும் 92
திருடர்கள் ஜாக்கிரதை 86
திரை அலைகள் 82
திரை மயக்கம் 88
திரை மறைவில் 85
திரைக் கவர்ச்சி 86
நமது கல்வித் திட்டத்தில் இன்-
றைய இலக்கியத்தின் நிலை 100
நல்லவர்கள் பெருக 102
நாடக இலக்கியம் 67
நாடகங்களும் திரைப்படங்-
களும் 90
நாணயமும் நன்மதிப்பும் 88
நாவலாசிரியர் ஷோலகோவ் 77
நாவலும் திரைப்படமும் 84
நாவல் எழுதும் அனுபவம் 69
நாவல் பிறக்கிறது 69
நான் கண்ட பேராசிரியர் 79
நான் காணும் திரைஉலகு 84
பண்பாட்டுக்குஓர்இயக்கம்
101
பரிசுக்குப் போட்டி 90
பாரதியின் வசனவளம் 79
பாரதி விழாச்சிந்தனைகள் 78
புதிய உலகம் 82
புதிய விழிப்பு 80
புதுமைப்பித்தனின் ஒரு கதை
69
புதுவாழ்வுப் போராட்டம் 68
போரும் பொங்கலும் 102

போர்க்காலக் கதைகள் 72
மண்ணில் மலருமா தமிழ்ப் படம் 91
மதிப்புரைக் கலே 68
முதல் தமிழ் நாவல் 69
மூன்று நாட்களில் மூவாயிரம் மைல்கள் 83
ரஷ்யாவில் பெண்கள் 96
லெனினும் தமிழ் உரை நடை இலக்கியமும் 70
வங்கத்தில் நம் கிராமியக் கலே 93
வரலாற்றில் ஒரு ஏடு 105
வளம் பொங்க வழி 103
வளரும் சிறுகதை 76
விஞ்ஞானத் தமிழ் 80
விழித்தெழுவோம் 75
வீட்டுக்குள் ஏன் பாரதி? 79
வீரப்போர்த் தலேவன் 104
வெள்ளித்திரையில் கறுப்புமை 89

அகிலன் படைப்புகள் வெளிவந்த இதழ்கள்

அணிகலம் 3
அமுத சுரபி 20
அரவிந்தம் 89
ஆகாஷ்வாணி பிரசாரிகா 100
ஆனந்த விகடன் 14, 38, 69
ஆஜ்கல் 59
இந்திரா 3
இன்பம் 3
எண்ணம் 102
எழுத்தாளன் 78
கங்கை 82, 99
கதிரொளி 73
கதே காரா 60
கர்மவீர் 64
கலே 91
கலேஞன் 84, 87
கலேமகள் 3, 14, 20, 24, 28, 29 30, 34, 35, 41, 95
கலேரசிகன் 74
கலேக்கதிர் 54, 80, 104, 105
கல்கி 3, 14, 20, 31, 33, 36, 37, 38, 89
கல்கி நினேவுமலர் 75
காதல் 10, 20, 54, 72, 94
காலச்சக்கரம் 19, 25
கிராமியக் கலேவிழாமலர் 93
கேரளகௌமுதி 61
சம்யுக்தா கர்னுடகா 60
சாந்தினி 60
சாரிகா 59
சித்திர குப்தா 60
சினிமா ஸ்டார் 88
சீனிவாசராகவன் மணிவிழா மலர் 79
சுதா 60
சுதேசமித்திரன் 19, 69, 76, 79
தட்சிண் பாரதி 59
தமிழ் உறவு 75
தமிழ்சினிமா 81, 82, 84, 85, 86, 87, 88, 90, 92, 93, 98, 101
தமிழ்நாடு 78, 80, 83, 84, 85, 102
தாய்நாடு 3
திருமகள் 3
திரு. வி. க. உருவமைப்பு நாண்மலர் 106
தினத்தந்தி 40, 83, 88, 96, 102, 103
தினமணி 101
தீபம் 69, 100, 138
தேசபக்தர் நினேவுமலர் 79
நகுவானந்தா 60
நண்பன் 14
நயிதுனியா 59
நவசக்தி 99
நவநீத் 64
நவஜீவன் 59
பிரஜாமாதா 64
பிரஜாவாணி 60
9புதுமைப்பித்தன் நினேவுமலர்9

பொம்மை 91
பொன்னி 20
மகிழ்ச்சி 54
மதுரைத் தமிழ்ச்சங்கப் பொன் விழா மலர் 76
மயூரா 60
மாத்ருபூமி 61
மாலை முரசு 98
யுகபிரபாத் 59
ராணிமுத்து 24, 25, 27, 28 29, 35
வ. உ. சி. மலர் 105
விந்தியா 20
விஜயாமாலா 60
வெற்றித் திருநகர் மலர் 90
ஜய கேரளம் 61
ஷப்கூன் 61
Caravan 62, 63
Illustrated Weekly of India 61, 62
Mirror 62
Railcoach 63
Social Welfare 63
Thought 62

சிறப்புப்பெயர்

அன்னபூரணி சந்திரசேகரன் 16, 109
ஆண்டன் செகாவ் 54, 77
ஆரோக்கியசாமி 99
ஆர்வி 29
ஆறுமுகம், பூவை. எஸ். 70,117
இராமசுவாமி, வீ. 53
இராமலிங்கம், மா. (எழில் முதல்வன்) 131, 133, 134
எட்கர் ஆலன்போ 134
எமர்சன் 79
ஏசுநாதர் 101
ஐன்ஸ்டின் 80
ஃபிராய்டு 72, 94
கணேசன், பி. சி. 62
கமலபதி, சி. எஸ். 46, 62
கம்பன் 79
கல்கி 75, 131
காண்டேகர் 117
காந்தியடிகள் 92, 104, 105, 124, 125, 126, 127
கார்க்கி 70, 77, 97
கு. ப. ரா. 77, 132
கோகிலம் சுப்பையா 62
ஞானசம்பந்தன், அ. ச. 31
சஞ்சீவி, டாக்டர் ந. 112
சரத்சந்திரர் 85
சரஸ்வதி ராம்னாத் 56, 59, 64
சாலை இளந்திரையன் 110
சிவத்தம்பி, கா. 111
சிவபாத சுந்தரம், சோ. 39
சீனிவாசன், ஜி. 57
சீனிவாசராகவன், அ. 79
சுத்தானந்த பாரதியார் 4
சுப்பிரமணியன், டாக்டர் ச. வே. 128
சுப்ரமண்யம், க. நா. 116
செட்டியார், V. RM. 53
செந்தில் நாதன், ச. 112
செல்லப்பா, சி. சு. 76
செல்வம் 29
சேதுப்பிள்ளை, ரா. பி. 78
சோனு 29
டார்வின் 80
டால்ஸ்டாய் 77, 119
டி. கே. எஸ். சகோதரர்கள் 45
டி. கே. ஷண்முகம் 46
தண்டாயுதம், இரா. 118, 119 129
தாகூர் 45, 94
தாமஸ் ஹார்டி 118
திரு. வி. க 75, 79, 94, 106
நேரு 86, 90
பகத்சிங் 105
பாக்கியமுத்து, தி. 123

பாரதி 75, 78, 79, 96, 103, 105, 106
பார்த்த சாரதி, நா. 28
புதுமைப்பித்தன் 69, 77
பெட்ரம் வெர்வி, டாக்டர் 58
பெரியகருப்பன், டாக்டர் இராம. 115
பைரவ பிரசாத் குப்தா 57
மணியம், வி. எஸ். 62, 63
மத்தூர் கிருஷ்ண மூர்த்தி 64
மாபசான் 54
மார்க்ஸ் 80
மீனாட்சிசுந்தரம், டாக்டர் கா. 123
மீனாட்சிசுந்தரனார், தெ. பொ. 36
முத்துச்சண்முகன், டாக்டர் 115
முத்தையா, கண. 29
ரங்கதுரை வேலன் (ரதுலன்) 16, 109
ரவிவர்மா 94
ரவீந்திரன் நாயர் 63
ராஜதுரை, ரா. 119
ரிச்சர்ட் வாக்மன் 54
லிங்கன் 98
லெனின் 70, 98
வ. உ. சி. 105
வரதராசனார், டாக்டர் மு. 26, 37
விசயலட்சுமி, ப. 120, 121, 122, 127, 128
விஜயலட்சுமி கௌர் 59
வீராசாமி, டாக்டர் தா.வே. 126
வேங்கடராமன், சு. 113, 114, 115
வேதநாயகம் பிள்ளை 78
வேஸ்தா ஹகீம் 61
வோரா, ஜே. 60
ஜகந்நாதன், கி. வா. 7, 35
ஜாப்ரேமாஸ் 54
ஜானகிராமன், தி. 96
ஷோலகோவ் 77
ஹெல்கா ஆண்டன், டாக்டர் 58
ஹென்றி தியாகராஜ் 62
ஹையத் பாக்ஷா 61

மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை வெளியீடுகள்

1969

		ரூ. பை.
1.	Philosophy of Tiruvalluvar —*Dr. T. P. Meenakshisundaran*	1-50

1971

2.	வீரபாண்டியக் கட்டபொம்மு கதைப்பாடல் —பதிப்பாசிரியர்: திரு. நா. வானமாமலை	4-00
3.	முத்துப்பட்டன் கதை— ,,	2-00
4.	காத்தவராயன் கதைப்பாடல்— ,,	2-00

1972

5.	கான்சாகிபு சண்டை —பதிப்பாசிரியர் : திரு. நா. வானமாமலை	2-75
6.	கட்ட பொம்மு கூத்து ,,	2-25
7.	திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும் முதற்பதிப்பு : அறத்துப்பால் திரு. கோ. வடிவேலு செட்டியாரவர்கள் இயற்றிய தெளிபொருள் விளக்கவுரையும், கருத்துரையும், குறிப்புரையும், ஆங்கில மொழிபெயர்ப்புடன்	8-00

1973

8.	The Treatment of Morphology in Tolkappiyam —*Dr. M. Israel*	7-00
9.	Dravidian Languages and Literatures —*Compiled by Busangi Rajamani*	5-00

1974

10. வையை : முதல்தொகுதி— 12-00
பதிப்பாசிரியர்கள்
டாக்டர் முத்துச்சண்முகன்
டாக்டர் இராம. பெரியகருப்பன்

11. The Inner Meaning of Human History The One Increasing Purpose That Runs Through the ages. 2-25
—Justice S. Maharajan

12. அகிலன் ஆய்வடங்கல்
— சு. வேங்கடராமன்

அச்சில்

13. தொல்காப்பியம்-பொருளதிகாரம்—உரைவளம்
—திரு. மு. அருணாசலம் பிள்ளை

14. திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்
—இரண்டாம் பகுதி : பொருட்பால்
திரு. கோ. வடிவேலு செட்டியாரவர்கள்
இயற்றிய தெளிபொருள் விளக்கவுரையும்,
கருத்துரையும், குறிப்புரையும், ஆங்கில
மொழிபெயர்ப்புடன்.

திருக்குறள் ஆய்வக வெளியீடு :

1973

1. குறள் கண்ட பொருள் வாழ்வு 5-00
— டாக்டர் தி. முருகரத்தனம்

அச்சில்

2. குறள் கண்ட இறைமாட்சி
—டாக்டர் தி. முருகரத்தனம்

3. வள்ளுவர் கண்ட அரசியல்
(கருத்தரங்கக் கட்டுரைகள்)

கிடைக்குமிடம்:

மதுரைப் பல்கலைக்கழக மத்திய கூட்டுறவு அங்காடி
பல்கலைநகர்—625021
மதுரை மாவட்டம்

Dr. T. P. M. LIBRARY
MADURAI-625 021.
MADURAI ... RSITY